ரிஜிஸ்டர் நே. 2041.

தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1--12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஸு கார்த்திகை-மீ 12-உ (27—11—1932) | மலர் 31.

விற்பனைக்குத் தயார்.   முந்துங்கள்.   விற்பனைக்குத் தயார்.

தோழர். ம. சிங்காரவேலு பி.ஏ., பி.எல்., அவர்கள் எழுதிய

"கடவுளும் பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதிக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர் சிறந்த நூல். பகுத்தறிவு வளர்ச்சியும், உலக முற்போக்குமடைந்துள்ள இதுகாலை, அஞ்ஞானத்திலும், மூடபக்தியிலும் கிடந்துழலும் நம் மக்கள் அவசியம் படித்துப் பயன்பெறவேண்டுமென்றே கூறுவோம். "கடவுள்" என்னும் வார்த்தை வெறும் சொல் மயக்கே யொழிய வேறில்லை என்பதையும், புராணக்காரர்கள் கடவுளைக் கற்பித்திருக்கும் பொய்யுரைகளையும், தத்துவ நூலாசிரியர்கள் கடவுளைப்பற்றிக் கூறும் கற்பனைகளையும் விஞ்ஞான முகத்தால் ஆராய்ந்து, அவைகள் யாவும் கற்பனைகள் என்பதைத் தெள்ளிதில் விளக்கப்பட்டுளது. "கோழி முதலில் உண்டானதா முட்டை முதலில் உண்டானதா", "மரம் முந்தியதா, வித்து முந்தியதா", "பில்லி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.

சுமார் 80 பக்கங்கள் கொண்ட பிரதி 1-க்கு விலை அணா 0—4—0

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபால்தலைகள் அனுப்பவேண்டும்.

மானேஜர்,

குடி அரசு புக்டிபோ, ஈரோடு.

காந்தியின் உண்மைத் தோற்றம்.

21—6—31ந் தேதி வெளியான குடி அரசு தலையங்கம் இதைப்படிக்கும் அன்பர்கள் காங்கிரசின்யோக்கியதையை யும், காந்தியார் கோறும் ராமராஜிய தன்மையும், தொண்டர்கள் செய்யும் போலி மறியல் வேஷத்தின் வெளிப்பகட்டும் கண்டுதெளியலாம்.

100 புஸ்தகங்கள் விலை ரூ. 1—0—0
தபால் செலவு 0—6—0

கிடைக்குமிடம்:— மானேஜர்,
குடி அரசு, புஸ்தகசாலை, ஈரோடு.

"SUPERSTITION OF KHADI"

A Discussion By S. Ramanathan, Pattabhi Sitharamyya, & N. S. Varadachari in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0 3-0 annas postage stamps for a single copy

Apply to:—
Manager "Kudi Arasu" Erode

உங்கள்

கண்ணையும் காதையும் கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் சொந்து வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta.

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டுஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்

குஷ்டம்

வெண்குஷ்டம் · பத்து.

சமீபத்தில் எற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

Read.

The 'Citizen'

and become a True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—
The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy

'சமத்துவபோதினி'

தாழ்த்தப்பட்டார் சமத்துவம் முன்னேற்றம் கருதி கொழும்பினின்று வெளியாகும் மாதப்பத்திரிகை ஆசிரியர்- வி. நடேசன்.

வருஷ சந்தா—2—8—0

விலாசம்:— சமத்துவபோதினி
டிக்கோயா சிலோன்.

"குடி அரசு" கிடைக்குமிடங்கள்.

தஞ்சாவூர்.
மணியம் பிரதர்ஸ்,
ரயில்வே ஸ்டேஷன் ரோடு.

பாபநாசம். அப்துல்ரசாக் சாயபு,
இரும்புவியாபாரம்.

காஞ்சீபுரம். எம். கே. எல்லப்பன்,
திருப்புக்குடல் வீதி

கோயமுத்தூர்.
வி. ரங்கராஜலு, நியூஸ்
ஏஜண்ட், ராஜவீதி.

சேலம். சித்தய்யா,
தனலட்சுமி விலாஸ் பேங்க்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மதுரையில்
குடி அரசு கிடைக்குமிடம்.
எம். முத்துசாமி
ஜெனரல் நியூஸ் ஏஜன்சி
கீழவெளிவீதி மதுரை.

ரூபா 3-6-0 க்கு 3-கடிகாரங்களும் இதர வெகுமதிகளும்.

சந்தேகமில்லை, ஆச்சரியமில்லை, உண்மை!

ஆட்டோ சுகந்தராஜ் (இலிந்து பூத்த புஷ்பங்களின் சத்து) மணம் மிகுந்தது. 3-நாள் உபயோகத்துக்குரிய புட்டி3-அணா. படைமருந்து 12 மணி நேரத்தில் பரிபூரண குணம். டப்பி 1-க்கு 3அணா. மேற்படி 2-தினுசுகளும் சேர்ந்தாவது தனித்தனியாவது 18-புட்டிகள் ரூபா 3-6-0 க்கு ஆர்டர் செய்தால், கோல்ட் நிப் பௌண்டன் பேனா 1. 500-கஜம் வரை வெளிச்சம்தரும் பாட்டரி லாம்ப் 1, நூதன கைக்கெடியாரம் 1, பர்மா டைம்பீஸ் அல்லது ரயில்வே மெயில்கார்ட் லீவர் பாக்கெட்வாச் 1-ம். இனமாக அனுப்பப்படும். ஒவ்வொரு கடிகாரமும் 10 வருடம் உத்தரவாதம். சாமான்கள் பிடித்தமில்லாவிடில் பணம் திருப்பிக்கொடுக்கப்படும். பாக்கிங் தபால் செலவு தனி.



விலாசம்:—Sharma Brothers & Co.,
Post Box No. 2412, Section 90,
Calcutta.

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசு"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும். மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

நாத்திகரென்போர் நல்லறிவுடையார்.

(Scientific Method and Ignorant Beliefs.)

மெஞ்ஞான முறையும், மூட நம்பிக்கையும்.

மாய வித்தையின் ஆபாசம்.

"கடவுளும், பிரபஞ்சமும்" என்ற வியாசத்தின் மேல் எழும் பிரச்சினை.

[தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

(13)

முந்திய கட்டுரையில் போலி மெஞ்ஞானங்களில் சம்பந்தப்பட்ட வித்தைகளில் (Psuedo Science) ஒன்றாகிய மெஸ்மரிசம் (Mesmerism) என்று வழங்கும் வித்தையின் லட்சணங்களைப்பற்றி சற்று விபரமாக எழுதினோம். அதன் ஆதார நூல்களையும் எடுத்துரைத்தோம். அந்த போலி மெஞ்ஞானத்திற்கு பதிலாக இப்னாடிசம் (Hypnotism) என்ற மெஞ்ஞான வித்தை அதிலிருந்து பிறந்ததையும் குறிப்பிட்டு இப்னாடிசம் இன்ன வித ஞானமென்பதை சுருங்கவுரைத்தோம்.

பலகாலமாக மெஸ்மரிசத்துடன் சம்பந்தமாக கருதப்பட்டு வந்த போலி ஞானங்களில் ஒன்றாகிய டெலிபதி (Telepathy) இன்னதென்பதையும், சுருங்க விளக்கினோம். இந்த டெலிபதி விஷயமாக சம்பந்தப்பட்டுள்ள சிலபோலி ஞானங்களை குறிப்பிட்டோம். அவைகளில் (1) கிலேர்வாயன்ஸ் (Clairvoyance) அதாவது தூரதிருஷ்டி (Distant Vision) என்ற வித்தையும் இதனோடு சம்பந்தப்பட்ட 2. புதையலை கண்டுபிடிக்கும் வித்தையும் (Finding the Treasure Trove, 3. தண்ணீரை கண்டறிதல் என்ற வித்தையும்(Water Divining) 4. மைபோட்டு பார்த்தல் (Crystal gazing) என்ற வித்தையும் முக்கியமானவை. தூரத்தில் நடக்கும் சம்பவங்கள் சாதாரண கண்கள் மூலமாக அல்லாமல் ஏதோ ஓர்ஞானக்கண்களால் பார்ப்பது என்ற வித்தையை கிலேர்வாயன்ஸ் (Clairvoyance) என்றும் சொல்லுகிறார்கள். இந்த வித்தைகளில் ஏதோ சிறு உண்மை இருந்தபோதிலும், அந்த சம்பவங்களுக்கு மாயவாதிகள் (Spiritualists) கூறும் காரணங்களால் நிகழ்வதென்பது, நம்பக்கூடியதல்ல. என்பதை சற்று விளக்குவோம்.

அக்கல்டிஸ்ட் (Occultists) என்று வழங்கும் மாயவாதிகள் மேற்கூறிய நிகழ்ச்சிகளுக்கு (Phenamena) மறைவான காரணங்களை (Mystic Causes) குறிக்கின்றார்கள். தூரத்தில் நடக்கும் சம்பவங்களை, மயக்கத்திலுள்ள ஒருவன் தெரிவிப்பானேயாகில், அது அவனுடைய சூட்சுமக்கண்ணால் தெரிந்து சொல்லுகின்றானென்று கூறுகின்றார்கள். புதைந்து கிடக்கும் பணத்தைக்காட்டினால் அது விநயகர் வசியத்தால் சித்திக்கின்றது என்றுவாதிக்கின்றார்கள்—அல்லது, கண்ணுக்கு தெரியாத நீர்பாங்கை கண்டுபிடித்தால், கண்டுபிடிக்கின்றவனுக்கு ஓர் சூட்சமசக்தி உண்டென்கின்றார்கள். மை போட்டு பார்த்தால் அனுமார் அருளால் அதில்கண்களுக்கு தெரியாத விஷயங்களும், வஸ்த்துக்களும்தெரிகின்றது என்று சொல்லுகின்றார்கள். ஆனல் இந்த தோற்றங்களை மெஞ்ஞான முறைப்படி விசாரித்ததிவோமேயாகில், மாயவாதிகள் கூறும் காரணங்களால் உண்டாவதில்லையென்றும், சாதாரணமாகவே அத்தோற்றங்களின் உண்மையை எளிதில் அறிந்து சொல்லக்கூடுமென்பதையும் ஈங்கு எடுத்துக்காட்டுவோம்.

முக்கியமாக இந்த விசாரணையில் நாம் அறியவேண்டிய விஷயங்களென்னவெனில், மெஞ்ஞான முறைப்படி விபரமும், மதக்கோட்பாடுகளாகிய ஆன்மா, மறுஜெனனம், உயிர், கடவுள், முதலிய வெறுஞ்சொற்களில் இருந்துவந்த நம்பிக்கை குறையநேரிடவும், இச்சொற்களை ஆதரிக்க மாயாவாதிகள் தங்கள் மாயாவாதத்தை (-piritualism) கிளப்பி விட்டார்கள். தேய்ந்து வரும் மதங்களை இந்த மாயாவித்தைகளைக் கொண்டாகிலும் ரட்சிக்கலாமா? என்ற நோக்கமே இந்த வித்தைகளை ஆதரித்துபேசுவதற்கு முகாந்தரமாகவுள்ளதுவெனஅறிக. ஆனல் "சுடுகாட்டுக்குபோனபிணம் திரும்பிவராது" என்ற முதுமொழிபோல் செத்துவரும் சொற்களாகிய கடவுள், ஆன்மா, நரகம், மோட்சம், பேய், பிசாசு, திரும்பவும் மனிதர் உள்ளத்தில் இந்த மாயாவித்தைகளால் உதிக்கும் என்பது பகற்கனவேயாகும்.

தூரதிருஷ்டி(Clairvoyance] கண்களுக்கு மறைவாகயுள்ள வஸ்த்துக்களையாகிலும், அல்லது காதுகளுக்கு கேட்காத சொற்களையாகிலும், கண்களால் பாராமலும், காதுகளால் கேட்காமலும் தெரிந்து கூறுவதை தூரதிருஷ்டி ஞானமென்பார். ஒரு பெட்டியில் தூரதிருஷ்டிக்காரனுக்குத்தெரியாமல் வைத்து அந்த பெட்டியை மாத்திரம் காட்டினால் அவன் அதிலுள்ள பொருள்களை பெட்டியைத்திறந்து பார்க்காமலே தெரிவிகின்றானும். அல்லது எதையாகிலும் நினைத்துக்கொண்டு அவனிடம் சென்று அவனைக்கேட்டால் நினைத்தசொற்களை தெரிவிக்கின்றுனும் இந்த சம்பவங்களை சாதாரணமான தூரதிருஷ்டி என்று வழங்குகின்றார்கள். இது அருகாமையில் நடக்கும் தோற்றங்கள். வெகு தூரத்தில் நடக்கும் சம்பவங்களை அறிந்து கொள்வதும் தூரதிருஷ்டி சக்தியால் என்றும் கூறுகின்றார்கள். இத்தியாதி சம்பவங்கள் உண்மையா என்று விசாரிக்கவேண்டும். மாய வித்தையில் நம்பிக்கையுள்ள Sir William Crookes Sir Oliwer Lodge, Sir William Barrett முதலியோர் இந்த தோற்றங்களில் மோசம் நடந்திருந்த போதிலும், சில தோற்றங்களுக்குக் காரணம் தெரியாதபடியால் நமக்குத் தெரியாத சக்தியால்தான் அவை நடந்திருக்கவேண்டுமென்று கூறுகின்றார்கள். ஆனல் பெரும்பான்மை மெஞ்ஞானிகள் இந்த சம்பவங்கள் யாவும் தந்திர வித்தை என்றே (Tricks) மதிக்கின்றார்கள் சில சம்பவங்களில் தந்திரம் தெரியாவிடில் தந்திரக்காரனுடைய சமார்த்தியத்தால் (Conjurcus Tricks) நமக்கு அவன் செய்யும் தந்திரம் தெரியாமல் இருக்கின்றதேயொழிய ஏதோ அபூர்வ சக்தி (Abnormal Powers) அல்லது அபூர்வ பார்வை (Abnormal Sight) யால் தெரிந்து சொல்வதாக எண்ண எந்தவித முகாந்திரமும் இல்லை என்பார்கள். இந்த தந்திரத்தை பரீட்சித்தவரை,பலதோற்றங்களின் தந்திரம் வெளிப்பட்டே வருகிறது. இந்த மோசம் கோர்ட்டிலும் திருஷ்டாந்தமாக எடுத்துக் காட்டப்பட்டது. ஒரு பெரியமனுஷி முன்பாக பெட்டியில் இறந்து போனவருடைய மோதிரம், கண்ணாடி இன்னும் பல வஸ்துக்களை போட்டு மூடிவைக்கப்பட்டது. அந்த அம்மை பெட்டியினுள் வைத்திருக்கும் வஸ்துக்களின் விபரங்களை தெரிவித்தனளாம். ஆனல் சில நாள் பிறகு இதன் ரகசியம் வெளிப்பட்டது இந்த அம்மையுடன் கூட வந்த தந்திரக்காரன் யாவருக்கும் முன்பாக செய்த தந்திரத்தால் நிகழ்ந்ததாகத் தெரிய வந்தது. அவன் காட்டிய பெட்டியை நழுவச் செய்து இன்னொரு பெட்டியை அந்த இடத்தில் வைத்துவிட்டு உள்ளே கொண்டுபோன பெட்டியைத் திறந்து அதிலிருக்கும் சாமான்கள் விபரங்களை வெளியிலிருக்கும் அம்மைக்கு சைகை மூலமாகதெரிவிக்க, அந்த அம்மை சபையில் மெதுவாக அந்தந்த வஸ்துக்களை தானே அறிந்து சொல்வது போல் தெரிவித்தனளாம. இந்த வித்தையின் சூட்சி தெரிந்தும் முன்பும் சில மெஞ்ஞானிகள் இதை வித்தை என்றே கருதி வந்தார்கள். ஆனல் விசாரித்த பிறகு நேர்ந்த மோசத்தை அறிந்தும் இந்த மெஞ்ஞானிகளுக்கு (Scientists) அறிவு உண்டானதோ நமக்கு தெரியகூடது. ஏனெனில் சில மெஞ்ஞானிகளுக்கு மதப்பற்றால் மதமயக்கம் (Mystery) அவர்களை விட்ட பாடில்லை என்று தெரிய வருகிறது. எல்லா வாசனைகளிலும் மதவாசனை புராதீனமானது. இந்த வாசனைப்பற்றால், மெஞ்ஞானிகளும் சில விஷயங்களில் ஏமாந்து போகின்றனர். மதப்பற்று எந்த காலத்தில் மாந்தரைவிட்டு ஒழிகின்றதோ அந்த காலத்தில்தான் உலகிலுள்ள பித்தலாட்டங்களும் ஒழியுமென அறிக.

கும்பகோணத்தருகிலுள்ள வலங்கைமான் கிராமத்தில் ஒரு தூரதிருஷ்டியோன் (Clairvoyant) இருப்பதாகவும், அவன் நினைத்ததை சொல்வதாகவும், அதற்கு ரூபாய் ஐந்து கொடுக்கவேண்டுமென்றும் கேள்வி. மற்ற தந்திரங்களைப்போல் இதுவும் ஓர் தந்திரமென்றே கூறல் வேண்டும். இவன் நாம் நினைத்ததை சொல்வதற்கு பல சூழ்ச்சிகளுண்டு. அவையாவன:— அவன் தன்னை மாய தூக்கத்தில் வைத்துக் கொள்கின்றான். அதனால் வெளி சத்தமும், சந்தடியும், தனக்கு கேட்பதில்லை. ஆனல் நமது செய்கைகளையும், உதடு அசைதலையும், மெதுவாக பேசுவதையும் அவன் கவனிக்கின்றான். நாம் எண்ணிய எணணத்தை நாம் மெதுவாக பேசுகின்றோம். (Behaviourists) அதாவது நடத்தை மெஞ்ஞானிகள் சொல்வதுபோல் நாம் மெதுவாக பேசுவதே நமது எண்ணமானபடியால் அந்த பேச்சை தூர திருஷ்டியோன் கேட்கக்கூடும். அல்லது நமது உதட்டின் அசைவாலும் அவன் நமது "எண்ணத்தை" தெரிந்துகொள்ளக்கூடும். இதியாதி முகாந்திரங்களால் தெரிந்து சொல்கின்றான் என்ற உண்மையை விட்டுவிட்டு நாம் நினைத்ததை கணேசர் அருளால் தெரிந்து சொல்கின்றான் என்றாகிலும் அல்லது மாய சக்தியால் (Occult Faculty) தெரிந்து

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

ருஷியாவைக் கண்டு அஞ்சவேண்டாம்!

நேரிற்கண்ட அநுபவவுரை.

கொழும்பு சட்டமாணவர் சங்கத்தில் டாக்டர் கல்வின் ஆர். டி. சில்வா, "ருஷிய நிலைமை"யைப்பற்றி ஓர் ருசிகரமான சொற்பொழிவு நிகழ்த்தினார். அச்சொற்பொழிவின் சாராம்சமாவது:—

ருஷியா கையாடியிருக்கும் வழிகள் இதற்கு முன் உலகில் நடந்தேறாத ஒன்றாகும். ருஷியாவில் அதிகாரம் பெற்றிருந்த போல்ஷிவிக் கட்சியார் தமது கொள்கைகளைச் செயலில் கையாடத்தலைப்பட்டனர். "நாம் இன்னும் ஒரு கம்யூனிஸ்ட் (பொதுவுடைமை) தேசத்தாராகி விடவில்லை" என்றே எந்த ருஷியனும் கூறுகிறான். தற்போது ருஷியாவில் இருந்து வரும் நிலைமை கம்யூனிஸ்ட் (பொதுவுடமை) கொள்கைகளை உடனே பரப்புதற்கு போதுமானதாயில்லை என்பதை ருஷியர் உணருகிறார்கள்.

ஐந்து வருஷத்திட்டம்,

ஐந்து வருஷத்திட்டம் பல நோக்கங்களைக் கொண்டெழுந்தது. முழுவதும் விவசாய நாடாக இருந்த நாட்டை பெரும்பாகம் கைத்தொழில் நாடாகச்செய்வதற்கு முயன்றது. வருடமுடிவில் ருஷியா 100க்கு 51 விகிதம் கைத்தொழில் நாடாக மாறிவிடுமென்று கருதப்பட்டது. கைத்தொழில் நிலைமை விரைவாக முன்னேற்றமடைய தற்கால சாஸ்திர முறைப்படி விவசாய நிலைமையின் முன்னேற்றமும் வெகு விரைவாக ஏற்பட்டது. அதுமட்டுமல்ல, 100-க்கு 70 விகிதம் கல்வியறிவிலாதவர்கள் வசித்த ருஷியாவை 100 க்கு 100 விகிதம் கல்வியறிவுள்ளவர்களது நாடாக்குவதற்கு ருஷியர்கள் முயன்றனர்.

கம்யூனிஸ்ட் (பொதுவுடைமை) கொள்கைகளைப் பரப்பும் ஒரு நாடு உலகிற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. நிலையில்லாத முதலாளி வகுப்பையே பெரிதென்று கருதுகிறவர்களுக்கு இது அச்சத்தையே விளைவிக்கும். முதலாளி கூட்டத்தைக் கட்டிப் பிடித்துக் கொண்டிருப்பது வெறும் புத்தியீனம் என்பதே என் கருத்து.

இது அஞ்சத்தக்கதா:

ருஷியாவில் செம்படை (ரெட் ஆர்மி) என்று ஓர் யுத்தப்படை இருக்கிறது. இதுபோன்ற ஒருபடை முனெப்பொழுதும் இருந்ததில்லை யாது. அரசியல் யுத்த தளவாட விஷயங்கள் ஆகிய இரண்டிலும் இப்படை பங்குபற்றுகிறது. பிரசார வேலையாகிய படையையே ருஷியா உபயோகித்து வருகிறது. "நச்சுவாயுவை அவர்கள் உபயோகிப்பதில்லை. சகல நூலாராய்ச்சியென்னும் நச்சுவாயுவையே உபயோகிக்கின்றனர். நான் அறிந்த அளவில் ருஷியாவேறெந்த நாட்டோடு யுத்தஞ் செய்வதற்கும் ஆலோசித்தது கிடையாது. ஆனால் தாம் உலகத்தின் ஏனைய பாகங்களிலுமிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறதையும், தமது இயக்கம் பலரது வெறுப்பிற்கு உள்ளாகி இருக்கிறதென்பதையும் ருஷியர் அறிந்துகொண்டிருக்கிறார்கள். பிற்போக்கான நிலைமையிலிருந்து தனது ஜனங்களை முன்னேற்றமான நிலைமைக்குக் கொண்டுவர விரும்பும் ஒரு நாட்டை எப்படி அச்சத்தை விளைக்கும் நாடென்று அழைக்கலாம்

இயற்கைத் தடை

கலைஞானம், விஞ்ஞானம் (சையன்ஸ்) அஞ்சத்தக்கது என்று நீங்கள் கருதினால், ருஷியாவும், அஞ்சத்தக்கதேயாகும். தனிப்பட்ட ஒரு நபரது நன்மையைப் பெரிதென்று கருதுவது அஞ்சத்தக்கதா? இயற்கையாக எழுஞ் சில குணங்களைத் தடை செய்ய முடிவது அச்சம் விளைவிக்கத்தக்கதோ? அப்படியானால் மட்டுமே ருஷ்யா அஞ்சத்தக்கதாகும். ருஷிய நிலைமை அஞ்சத்தக்கதல்ல என்று நீங்கள் கருதினால் பல அநீதங்கள் நடைபெறும் உலக வழக்கத்திற்கு மட்டுமே அது அச்சத்தை விளைக்குமல்லாமல் வேறல்ல

மேலும், ருஷிய அரசியல் நிலைமையை இயக்குவது கம்யூனிஸ்ட் கொள்கை என்றும், விவசாய நாடாயிருந்த ருஷ்யாவைச் கைத்தொழில் நாடாகச் செய்வதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியே மாற்றத்தை ஏற்படுத்தினதென்றும், தற்போது உலகத்தைப் பாதிக்கும் வேலையில்லாக் கஷ்டத்திற்கு விமோசனங் காண்பதற்கு அதுவே வழியென்று கூறி தனது சொற்பொழிவை முடித்தார்.

சேலம்

சுயமரியாதைப் பொதுக்கூட்டம்.

சேலம் சுயமரியாதைச் சங்கத்தின் ஆதரவில் சுயமரியாதைப் பார்க்கில் மாலை 6-மணிக்கு தோழர் சித்தையா அவர்கள் தலைமையில் "திருமண வைபவம்" என்ற விஷயத்தைப் பற்றி தோழர்கள் சேலம் எஸ். ராமநாதன், ஆர். நடேசன், எ. எம். பானு, மருதாசலம், துரைசாமி, கந்தசாமி முதலியவர்கள் விளக்கமாகவும் விரிவாகவும் பேசினார்கள். இடையில் ஒரு தோழரின் பெண்கள் உரிமை சம்பந்தமான பல சந்தேகங்கள் உபன்யாசகர்களால் நிவர்த்திக்கப்பட்டது. இரண்டு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட பின் கூட்டம் 8-30 மணிக்கு கலைந்தது.

(ஒரு நிருபர்)

திருமணமென்றால் என்ன?

எஸ். ஆர். காந்தியம்மாள் சொற்பெருக்கு

சென்ற 18-11-32-ந்தேதி தோழர் ஈ. வி. இராமசாமி அவர்கள் இல்லத்தில் தோழர்களான மாரிமுத்து சாரதாம்பாளுக்கு நடைபெற்ற திருமணத்தை ஆதரித்துப் பேசிய 7வயதுசிறுமி எஸ். ஆர். காந்தியம்மாள் (எஸ். ராமசாமி அவர்கள் குமாரத்தி) சொற்பொழிவு வருமாறு:—

பெரியோர்களே! தாய்மார்களே!

அறிஞர்கள்பலர்கூடியுள்ள இத்திருமணசபையில், சிறியாளுக்குச் சிறிது நரேம் பேசும் சந்தர்ப்பம் கொடுத்தது பற்றி நன்றி பாராட்டுகிறேன். இன்று யான் பேசப்போகும் விஷயம் திருமணம் என்பது பற்றியே யாகும். திருமணம் என்றால் இருவர், அதாவது ஒருஇளைஞனும், ஒருயுவதியும் ஒருவரை ஒருவர் தங்கள் வாழ்க்கைக்குத் துணையாக தேடிக்கொள்ளுவதையே யாகும் இதில்கவனிக்க வேண்டியவிஷயம் தக்கவயது, ஒத்தகல்வி, குணப்பொருத்தம், இருவர் மனதின் ஒற்றுமை ஆகியவையே. இவர்கள் திருமணத்தை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய பலபெரியோர்கள் கூடியுள்ள சபையிலே தங்களுடைய விவாகஒப்பந்தத்தை உறுதிசெய்து கொள்வது மட்டும்போதும். இக்கொள்கைகளை ஒட்டியே இப்பொழுது நாட்டில் எங்கும் சுயமரியாதை திருமணங்கள் நடைபெற்று வருகின்றன. இதுபோன்ற மணமுறைகளையே, அறிவுடைய உலகம்வரவேற்கிறது. ஏனெனில் இம்மாதிரி மணங்களில் அர்த்தமற்ற சடங்குகளும், அனாவசியமான வேலைசிரமங்களும்அபரிமிதமான பொருட்செலவும் தடுக்கப்படுகின்றது. இதைவிடுத்து அநேக இடங்களில் அர்த்தமற்ற பொருத்தங்கள் பார்த்துக் கொண்டு மனது சம்பந்தமில்லாத இருவரை ஒன்றுசேர்த்து மணமுடிக்கிறார்கள். இதனால் நாட்டில் எண்ணற்ற தொல்லைகள் விளைகின்றன. எத்தனையோ மணச்சச்சரவுகளும் தற்கொலைகளும் இதனால் நிகழ்கின்றன, பொருத்தம் பார்ப்பதும், ஜாதகம் நோட்பதும் மிகப்பேதமையான செய்கைகளே என்பது சிறியாளின் அபிப்பிராயம். ஏனெனில் எண்பதுவயதுசென்றகிழவனுக்கும் எட்டுவயது சிறுமிக்கும் பொருத்தம் சரியாய்போய்விடலாம், அல்லது அழகுவாய்ந்த ஓர்பெண்ணுக்கும் அசங்கிதமான ஓர்குரங்குக்கும் பொருத்தம் பொருந்தி போய்விடலாம் ஆகவே பொருத்தம் சரியாயிருக்கிறதற்காக ஓர்பெண்ணை ஓர்குரங்குக்கும் விவாக செய்விக்க நீங்கள்ஒப்படுவீர்களா? என்பது எனதுகேள்வி ஆதலால் கல்வி, குணம், வயது, தன்மை இவைகளைக்கொண்டு நாம்பொருத்தம் பார்ப்பது அறிவுடைமையாகுமேதவிற சோதிடம் பொருத்தம் பார்த்து கலியாணம் செய்வது அறியாமை யென்றேயான் முடிவுகட்டுகிறேன். இதுபோன்ற பெண்கள்சரியானவயதடையாமுன்னமேகலியாணம் செய்து விடும் கொடுமை நமது நாட்டில் இருப்பதால் நாட்டில் எங்கும் விதவைகள் நிரம்பியிருக்கிறார்கள். ஆனால் ஒரு ஆண் எத்தனைதரம் மனைவியை இழந்தாலும், அறுபது வயது சென்ற கிழவனாயிருந்தாலும், அழகு மிகுந்த இளம் பெண்களை மீண்டும் மீண்டும் விவாகம் செய்து கொள்கின்றார்கள். ஆனால் பெண்களோ பால்மணமாறாதிருக்கும் நான்கு அல்லது ஐந்து வருடங்களில் மணம் செய்து கொடுக்கப்பட்டு அடுத்தமாதம் கணவன் இறந்து விட்டாலும் ஆயுள்பரியந்தம் மொட்டையடித்துக் கொண்டு மூலையில் இருக்கவேண்டுமாம்? இது சாத்திரசம்மதமாம்! கடவுள் கட்டளையாம்! தலைவிதியாம்! அந்தோ! பேதமையே இத்தகைய ஒரு அநியாயச் சட்டம் சாத்திர சம்மதமாயின் அதைச் சுட்டு சாம்பலாக்க வேண்டியதே! கடவுள் கட்டளையாயின் வெட்டி வீழ்த்த வேண்டியதே! தலையில் எழுதிய விதியாயின் மதியென்னும் ரப்பர் கொண்டு அழிக்கவேண்டியதே! என்பது எனது கருத்து. இது போன்றே அனாவசியமான பொருட்செலவை நீக்கி சிக்கனமான முறையிலே ஒவ்வொரு விவாகமும் நடைபெற வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் புரோகிதர்களை வைத்து கலியாணம் நடத்தவேபடாது. இவை எல்லாவற்றிலும் பெண்களுக்கு தாலிகட்டவே படாது ஏனெனில் தாலிகட்டும் பழக்கம் பெண்ணிடம்மாத்திரம் கையாளப்படுவதால் பெண்ணை அடிமையாகக் கொள்வது மில்லாமல் புருஷன் இறந்து விட்டால் தாலியறுத்தவள், முண்டச்சி, மூளி என்கிறார்கள். தாலி கட்டும் முறையே வேண்டுமானால் பெண்ணுக்கு ஒரு தாலி ஆணும், ஆணுக்கு ஒரு தாலி பெண்ணும் கட்டப்பட வேண்டும், இதுவே நியாயம்.

ஆகவே இவ்வித அனாவசியமான சடங்குகளும் வீண் செலவுகளுமின்றி இன்று இங்கு நடந்த திருமணம் மிகவும் சிறந்தது என்று கூறிக்கொண்டு இம்மாதிரி மணமுறைகளையே ஒவ்வொருவரும் கைப்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இத்துடன் எனது சிற்றுரையை வணக்கத்தோடு முடித்துக் கொள்கிறேன்.

கடவுளுணர்ச்சியும் மத உணர்ச்சியும் யாருக்குத்தேவை?

[தோழர் அ. இராகவன்]

இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு கூட்டம் சிறிதாகவோ. பெரிதாகவோ இருந்து கொண்டு "எங்களுக்குக் கடவுளுணர்ச்சியும் மத உணர்ச்சியும் வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டிருக்கிறது. அக்கூட்டம் நாளடைவில் பெருகிக் கொண்டே வருவதும் சிலவிடங்களில் அக்கூட்டத்தாரே அரசாங்கத்தை தன்வயப்படுத்திக் கொண்டதும், பலவிடங்களில் கைப்பற்றுந்தருவாயிலிருப்பதும், பல விடங்களில் கைப்பற்ற முயற்சிகள் நடந்து வருவதும் நேயர்களறிந்ததே.

பன்னெடுங்காலமாய் மக்களின் ஊனிலும் உதிரத்திலும் ஒன்றித்திருந்த இக்கடவுளுணர்ச்சியையும் மத உணர்ச்சியையும் மக்களொழிக்க முன்வரும் காரணந்தானென்ன? மக்களுக்கு கடவுளமேல் பொறாமையா? அல்லதுமக்களின் செல்வத்தை கடவுள்என்று சொல்லப்படும் வஸ்து கொள்ளையடித்துக் கொண்டதா? அவ்வாறு கூறுபவர்கள் உலகிலுள்ள மதங்களை யொழித்து புதிய மதம் நிறுவி தாம் புகழ்பெற விரும்புகின்றார்களா? அல்லது பைத்தியம் கொண்டு பிதற்றுகின்றார்களா? அவர்களின் கூற்றிற்கும் தக்ககாரணங்கள் ஏதும்இல்லையா? என்று பகுத்தறிவுள்ள மக்களெல்லோரும் சிந்தித்துப்பார்க்கவேண்டியது அவசியத்திலும் அவசியமாகும்.

இவ்வுலகம் இதுவரை கடவுளுணர்ச்சியிலும் மதநம்பிக்கையிலும் பெரிதும்ஈடுபட்டு தங்கள் வாழ்கையின் ஒவ்வொரு அம்சங்களிலும் கடவுளுணர்ச்சியையும், மதக்கட்டளைகளையும்புகுத்தி வாழ்ந்து பார்த்தாய் விட்டது. எதிர்பார்த்த பயன் ஒன்றும்கிட்டாது போனதன்றி, இவ்வுணர்ச்சியும் நம்பிக்கையும் மக்கள் வாழ்க்கைக்குப் பெருங்கேடு தருவனவாய்விட்டன' மக்களை வெறியர்களாக்கி ஒற்றுமைக் குறைவையுண்டாக்கி மனிதனை மனிதன் வதைத்துக்கொல்லவும், பலரை அடிமையாக்கி ஒரு சிலர் சுகபோகமாய்வாழவும்துணையாய்விட்டது. உலகத்தின்,ஜனத்தொகையான பெண்கள்சமூகத்தை பலமற்றபிறவிஎன்றுகூறி உயிரற்றபொருளாகமதித்து அடக்கி ஆண்டு தங்கள் காம இச்சையைத் தீர்க்கும் இயந்திரமாக உபயோகிக்க இடம் கொடுத்து விட்டது. ஒரு சிலசூழ்ச்சிக்காரர்கள் உலகத்தின் செல்வங்களையும் நிலங்களையும் தமதாக்கிக்கொண்டு நாள் முழுதும் பாடுபட்டு கஷ்டப்படும் ஏழைகளுக்கு போதிய ஊதியம் கிடைக்காமல் அரைவயிற்றுக்கஞ்சியும் கிடையாதுதவிக்கப் பல கோடி மக்கள் யாதொரு தொழிலும் கிடையாது கஷ்டப்பட்டு பட்டினி கிடந்து நலியவும் துணை செய்துவிட்டது. மண்டும் மூடநம்பிக்கைகள்பெருகவும்காதல்மணம், கலப்புமணம், கைம்மை மணம், முதலியவற்றிற்கு மாறாக சில சுயநலவாதிகளுக்கு ஆதரவு காட்டி வருகிறது.

சுருங்கச் சொல்ல வேண்டுமானல் மக்கள் உள்ளத்தே "சாந்தி" நிலவவிடாது எப்பொழுதும் கவலையில் நைந்து இறக்கவும், மக்களின் இன்ப வாழ்க்கைக்கு இடையூறாய் சதா துன்பசாகரத்தில் மூழ்கும்படி மேல்கண்ட கடவுள் உணர்ச்சியும் மதநம்பிக்கையும் செய்து விட்டதென்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனல் ஆயிரத்திற்கு ஒருவர் இவ்வுலகில் சுகமாக வாழ்க்கை நடத்துவதைக்காணலாம். எனினும் அவர்களெல்லாம் சூழ்ச்சி முறையால், கடவுளுணர்ச்சியையும் மத உணர்ச்சியையும் தங்கள் சூழ்ச்சி முறைக்கு ஆதாரமாக வைத்துக் கொண்டு மக்களை ஏமாற்றி வாழுகின்றார்களே யொழிய வேறல்ல. ஆகவே ஏழைமக்களை ஏமாற்றி அவர்களின் உழைப்பால் வாழும் சோம்பேறிகட்கு கடவுள் உணர்ச்சியும் மதநம்பிக்கையும் தேவையாயிருக்கலாம். ஆனல் சூரிய உதயமுதல் அஸ்தமனம் வரை நெற்றிவேர்வை நிலத்தில் விழப்பாடுபட்டு போதிய ஊதியங்கிடையாது அரைப்பட்டினியாய் வாழும்மக்களுக்கு கடவுளுணர்ச்சியும் மதநம்பிக்கையும் என்ன பயன் விளைக்கும்? இன்று கடவுள் உணர்ச்சி குன்றிவிடாதபடியும் மத நம்பிக்கை குறைந்து விடாதபடியும் பெருங்கிளர்ச்சி செய்யத்தூண்டுபவர் யார்? கஷ்டப்பட்டு தவிக்கும் ஏழைகளா? அல்லது தன் நகத்தில் ஒரு சிறிதும் அழுக்குப்படாது ஊரார் உழைப்பில் தன் வயிற்றை நிரப்பும் சோம்பேறிகளான முதலாளிமார்களும், குருமார்களும் உயர்ந்த சாதியாரும், பணக்காரர்களுமா?என்பதை ஆராந்து பார்ப்பவர் உண்மையை உணர்ந்து கொள்வார்? ஆடு நினைகிறது என்று ஓனாய் ஊளையிட்டழுதது எனற முது மொழிக்கொப்ப ஏழை மக்கள் கடவுள் உணர்ச்சியையும் மத உணர்ச்சியையும் ஒழித்து விடுவதால் இவர்களுக்கு வந்த நஷ்டமென்ன? கடவுளுணர்ச்சியையும் மதஉணர்ச்சியையும் தங்கள் ஆயுதமாக வைத்துக் கொண்டே, மக்கள் தங்கள் அறியாமையினின்று விடுபட்டு பகுத்தறிவைக் கடைபிடிக்க ஆரம்பிக்கும் பொழுதெல்லாம், "இது நம்மதத்தில் இல்லாதது இது கடவுளுக்கு வெறுப்பானது" என்று கூறி அவர்களை ஏமாற்றுவதுடன் மீறிநடந்தால் கடவுள் உங்களை நரகத்தில் போட்டு விடுவார் என்று நரகத்தைப் பற்றிப் பலவிதமான கதைகள்மூலம் மக்களுலகை ஏமாற்றி விடுகின்றார்கள்.

இன்று பட்டினியால் கஷ்டப்பட்டுவருந்தும் ஏழையுலகம் எங்களுக்கு மோட்சமும் வேண்டாம் நரகமும் வேண்டாம், அதையடையும் மார்க்கமும் வேண்டாம் இதுபொழுது எங்கட்கு வேண்டியது உணவும் உடையுமே, இவ்விரண்டையும் கொடுக்கும் மதமோ கடவுளோ அல்லது வேறு எதுவோ இருந்தால் எங்கட்கு காட்டுங்கள். அவைகளை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம், அஃதன்றி வேறுமதங்களையும் கடவுளையும் நாங்கள் ஒப்புக்கொள்ளோம் என்பது மாத்திரமல்லாமல் கூடுமானல் எங்களுக்கு ஊணும் உடையும் கொடுக்க முடியாமல் எங்களை இத்துணை நாட்களாக இன்னலுக்கு ஆளாக்கிய கடவுளுணர்ச்சியையும் மத நம்பிக்கையையும்இவ்வுலகினின்றுஓட்டிவிடுவோம் என்று கூறுகின்றது? சோம்பேறித்தனத்தால் மக்களை ஏமாற்றி வாழும் கொள்ளைக்காரர்கள், தங்களின் தரகர்களான புரோகிதர்கள், குருமார்கள் மூலமாய்; கஷ்டப்படும் மக்களே வருந்தாதீர்கள்; இதுஆண்டவனுடைய சோதனை,இச்சோதனையில் நீங்கள் தேறிவிட்டால் மறு உலகத்தில் ஆண்டவன் என்றுமழியாத மோட்சலோகத்திலுள்ள அழகிய பூங்காவனத்தில் என்றுமே இளமை நீங்காத தேவலோகப் பெண்களோடு சதா இன்பந்துய்த்துக் கொண்டிருக்கும்படி உங்களைச்செய்வான், என்று கூறி மக்களை ஏமாற்றி வந்தார்கள், வருகின்றார்கள். இன்றைய ஏழை மக்களின் உலகம் விழித்துக் கொண்டது. சாப்பாடும் உடையுமற்று தவிக்குமெங்கட்கு தேவகன்னிகைகள் எற்றுக்கு? எங்கள் பட்டினியை நீக்க ஏதாவது வழி இருந்தால் சொல்லுங்கள்? எங்கட்கு வேண்டியது கஞ்சியேயொழிய கடவுளும் மதமுமன்று என்று கூறுகின்றார்கள். அவர்கள் கூறுவதை அறிவும் ஜீவகாருண்யமுமுள்ள எவரும் குறை கூறை முடியாது.

உலகந்தோன்றிய காலந்தொட்டு இதுவரை கடவுளும் மதமும் சூழ்ச்சிக்காரர்கள் சௌகரியமாக வாழ இடமளித்தது. கோடிக்கணக்கான மக்கள் மதவெறி கொண்டு ஒருவரை ஒருவர் வெட்டி மடியச்செய்தது. பெண்களிற் பலரை விபசாரிகளாக்கி புண்ணும் பொடியும் பெற்று இழிவுற்று, உயிர் துறக்கச்செய்தது. பொய்யும் களவும், கள்ளும் காமமும், வஞ்சகமும் சூதும், பொறாமையும் ஆணவமும் இன்னோரன்ன பிறதீச்செயல்களும் பெருகச்செய்ததே தவிரவேறு நலஞ்செய்ததாகக் கூற முடியுமா? ஆனல் கடவுள் நம்பிக்கையும் மத நம்பிக்கையும் ஒழித்த நாட்டில் இன்று மக்கள் எவரும் பட்டினியின்றி வாழ்வதோடு பொய், களவு, காமம், சூது வஞ்சகம் முதலியவை ஓங்காது ஆணும் பெண்ணும் சமத்வமாய் சதா இன்பசாகரத்தில் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதை பத்திரிக்கைகள் மூலமாய்மட்டுமல்ல இன்று உலகப் பெரியார்களாய் போற்றப்பெறும் கவிந்திராகிய ரவீந்திரநாத் தாகூர் அவர்களாலும், மற்றொரு கதாஆசிரியாராய் வாழும் பெர்னட்ஷா என்பவர் மூலமாயும் அறிந்திருக்கின்றோம். இவர்களின் வார்த்தையைப் பொய்யென்றோ இவர்களெல்லாம் கடவுள் உணர்ச்சிக்கு விரோதமாயும் மத நம்பிக்கைக்கு விரோதமாயிருக்கிறார்களென்றோ எவரும் கூறமுடியாது. ஆனல் அவர்கள் தங்கள்கண்ட உண்மையை உலகத்திற்குச் சொல்லியிருக்கின்றார்கள்.

எனவே சோம்பேறித்தனமாய் வாழநினைக்கும் பகற்கொள்ளைக் கூட்டத்தார்களாகிய முதலாளிவர்கத்திற்கும்? அவர்களின் தரகர்களாகிய மதகுருக்களுக்கும் புரோகிதர்களுக்கும்கடவுள் தேவையாயிருக்கிறது என்பதை எவரும் மறைக்க முடியாது.

ஆனல் பட்டினியின்றி வாழநினைக்கும்ஏழைகளுக்கும் தம்உழைப்பிற்கு தகுந்தபலனையனுபவிக்க நினைக்குந் தொழிலாளிகளுக்கும் சமதர்மத்தை உலகில் நிலைநாட்ட விரும்பும் சுயமரியாதைக்காரர்களுக்கும் கடவுள் உணர்ச்சியும் மதநம்பிக்கையும் இன்று தேவையேயில்லை.

திருச்செங்கோடு வாலிப சகவாச சங்கம்.

21-11-32திங்கட்கிழமை மாலை சுமார் 5மணிக்கு ஷை சங்க வாராந்திரக்கூட்டம் ஒன்று.தோழர் டி. ஏ. சங்கரலிங்கம் அவர்களின் தலைமையின் கீழ் கூடியது. அவ்வமயம் அங்கு 'வைதீகத்தின் கொடுமைகள்' எனும் விஷயம் பற்றி தோழர்கள் டி. ஏ. கைலாசம், எஸ். சங்கரலிங்கம், எஸ். கே வரதராஜுலு, ருத்ரம் முதலானவர்கள் சொற்பொழிவாற்றினர்கள்.

பிறகு "சுயமரியாதை இயக்கத் தோழர் ஆர். கே. ஷண்முகம் பி. ஏ. பி. எல். எம். எல். ஏ. அவர்களின் மனைவியாரும், தோழர். டப்ளியூ. பி. ஏ. சௌந்திர பாண்டியன் எம். எல். சி. அவர்களின் தந்தையாரும் மரணமடைந்ததற்கு வருந்தி அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேறியது. இத் தீர்மானங்களை ஷையார்களுக்கு அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டபின் கூட்டம் கலைந்தது.

ஒரு நிருபர்

மதங்களுக்கு ஆபத்து.

அறிவு வளர, வளர, மதநம்பிக்கை மறைந்தோடுகிறது.

(கோவை ஆர். கிஸன்)

பகுத்தறிவுச் சூரியன் எங்கும் தனது ஒளி பரப்பி மக்கள் இருள் நீக்கி இடம் புரிகின்றான். பன்னெடுங்காலமாய் அந்தகாரத்தாழ்ந்து, அஞ்ஞானியாய் உணர்ச்சியற்று உறங்கிக்கிடந்த மனிதன் விழிப்படைந்து உணர்ச்சியும், ஊக்கமும் பெற்று எதிர்காலத்திலேனும் தனது நிலை மேம்பாடுற்று உயர்வெய்தி இன்ப வாழ்வு வாழ விழைகின்றான். எல்லாம் அவன் செயல்; 'நம்மால் ஆவதொன்றுமில்லை' என்னும் பழைய சோம்பேறி வாதத்தைக் காட்டுப்பொசுக்கி 'ஊக்கம் ஒன்றே ஆக்கம் அளிக்கும்,'' "முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்'' என்னும் பொன்மொழிகளுக்குச் செவிமடுத்துத் தன்னுடையவும், பிறருடையவும் நல் வாழ்வில் நாட்டங்கொள்கின்றான். தான் காணும், பிறர் சொல்லக் கேட்கும் எச்சொல்லிலும், பொருளிலும், செயலிலும் உண்மைகாண முற்படுகின்றான்; அவை எத்தகையவர் சொல்லாயினும், செயலாயினும் அப்படியே நம்பிவிடாது தனது பகுத்தறிவால் அலசித் தனக்கு சரியெனத் தோற்றுபவற்றைக் கொள்ளவும், அல்லனவற்றைத் தள்ளவும் துணிவு கொள்ளுகின்றான். ஆதலின் இதை பகுத்தறிவுக் காலம் (Age of Reason) எனக்கூறுதல் சாலவும் பொருத்த முடைத்தே யன்றோ?

ஆனால் இத்தகைய மக்களின் எழுச்சிக்கு, கண்விழிப்புக்கு எதிர்ப்பில்லாமற் போகவில்லை. மதகுருக்களும், புரோகிதர்களும், பாதிரிகளும், மௌலானாக்களும் மற்றும் மதத்தின் பேரால் வயிறு வளர்ப்பவர்கள் பலரும் மக்கள் இத்துறையில் அறிவு விளக்கம் பெறுவதை எதிர்க்கின்றனர்; சுய அறிவை உபயோகிக்க அவர்களுக்கு உரிமையில்லையெனத் தடுக்கின்றனர்; வயதடைந்த மக்களேயாயினும் குழந்தைகளென மதித்து அவர்கள் சந்தேகிக்கும் விஷயங்களை அவர்களே சுயேச்சையாக ஆராய்ச்சி செய்ய அருகதையற்றவர்கள் என்கின்றனர். அம்மட்டோ! மக்கள் உண்மையுணர முடியாதபடி தடுப்பதற்கு தங்களாலானவரை முயற்சி எடுத்துக் கொள்ளுகின்றனர். இதற்குக் காரணம் என்ன? மெய்ஞானமாம், விஞ்ஞானப்பரிதியின் முன் மனிதனின் மதவிருள் மறைந்தோடுகிறது. உலகிலுள்ள அறிஞரெல்லாம் மதங்களின் அஸ்திவாரமே ஆதாரமற்ற குருட்டு, மூடநம்பிக்கையெனத்தக்க நியாய வாதத்தால் மெய்ப்பித்துப் பறை முழக்குகின்றனர். மறு உலகமோ, மறு பிறப்போ அறியாமை வயப்பட்ட மனிதனின் மனமயக்கமென்று அறிவுறுத்துகின்றனர். எனவே சாமானிய மக்களுக்கு விளங்காத மறு உலகத்தைப்பற்றித் தாங்கள் அறிந்திருப்பதாகப் போலி நடிப்புக்காட்டும் பொழுது மறு உலகம் என்பதே முழுமோசடி என நிரூபிக்கும் விஞ்ஞானத்தைப் பாமரமக்கள் அறிந்து கொள்ளக்கூடாதென்று அவர்கள் பயப்படுவதே இத்தகைய எதிர்ப்புக்கு காரணமாகும். இவ்வுண்மை யாண்டும் பரவின், தமக்குப் பாமரரிடையுள்ள செல்வாக்கு அழிந்து தமது வயிற்றுப் பிழைப்பில் மண் விழும் என்பதை நன்குணர்ந்துள்ளார்கள். இம்மதகுருக்கள், அதனால் தான் அவர்கள் அறிவு வளர்ச்சிக்கு அரண் செய்வதை விடுத்து முட்டுக்கட்டையாய் நிற்க வெட்கங்கெட்டு வெளிப்படுகின்றனர்.

மறு உலகைப் பற்றியும் இயற்கைக்கு மீறிய தெய்வீகத்தைப் பற்றியும் போதிக்கும் மதங்கள் எல்லாம் விஞ்ஞானச் சுடரொளி வீசப்பெறுதால் அந்தகாரத்தாழ்ந்திருந்த ஆதிகாலக் காட்டுமிராண்டிகளால் தோற்றுவிக்கப் பட்டனவாகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் காடுகளிலும் மரங்களிலும், குகைகளிலும் நிர்வாணமாக வாலில்லாக் குரங்குகளென வாழ்ந்த மூதாதைகள் தாங்கள் கண்ட பொருள்களின் இயல்பை ஆராயத் தொடங்கினார்கள். சூரிய ஒளி, மழை, காய், கனி, மீன் முதலிய உணவுப் பொருள்களை யளிக்கும் காடு நீரோடையாகிய சில இயற்கைச் சக்திகள் தங்கள் வாழ்க்கைக்கு சாதகமாயிருக்கக் கண்டார்கள். ஆனால் இடியும் மின்னலும் அவர்களைக் கொடிய மயக்கத்திலாழ்த்தியது; பெரு வெள்ளம்தங்கள் அருமைக் குழந்தைகளை யழித்துச் சென்றது; பிணி மனிதனை வருத்தியது; மரணம் அன்பிற்குறிய இஷ்டர்களை என்றென்றும் தம்மினின்றும் பிரித்தது. இம்முறையில் அவைகள் தங்களுக்குக் கேடு விளைக்கக் கண்டார்கள்.

இத்தியாதி காரணங்களாலும், மற்றும் பிறவாலும் தான அடையும் நன்மைகளுக்கும், தீமைகளுக்கும் பின்னின்று ஏதோ சக்திகள் இயக்குவதாக ஆதிகால மனிதன் எண்ணினான். இந்த யூகையை ஆதாரமாக கொண்டு எண்ணற்ற கடவுள்களையும், பேய், பூத, பைசாசங்களையும் தன் யூகையாலேயே சிருஷ்டி செய்து கொண்டான். அவைகளுக்கு மதிப்பும், மரியாதையும் கொடுத்து வணங்க ஆரம்பித்தான்.

இக்காலத்தில் தான் மதகுருக்கள், புரோகிதர்கள், பாதிரிகள், மௌலானாக்கள் முதலிய மத தாகர்கள் தோன்றலாயினர். அவர்கள் கடவுள்களின் அன்பையும் அருளையும் ஆதரவையும் பெறுவதையும் பெறுவதற்கும், கடவுள், பேய், பூத, பைசாசங்கள் மக்களுக்குக் கேடு விளைக்காது தடுக்கவும் ஆற்றல் பெற்றுள்ளதாக நடித்தார்கள். இம்மதகுருக்களையும், புரோகிதர்களையும் நம்பாதவர்கள் கடவுளால் இவ்வுலகில் புறக்கணிக்கப் படுவது மட்டுமல்லாமல் மறு உலகிலும் சித்திரவதை செய்யப் படுவார்கள் என மக்களிடையே போதிக்கப் பட்டது. சுயேச்சையோடு வாழ்ந்த மனிதன் இங்குதான் அடிமைப்பட்டான். கொடிய பயங்கரம் அவனைச் சூழ்ந்து கொண்டது. மதகுருக்கள் இட்டதே கட்டளை என எண்ணி நடந்து வந்தான். அன்னார் காலாலிட்ட வேலையைத் தலையால் செய்யத் தொடங்கினான். பின் பல்வேறு மத கர்த்தர்களும், மதப் பாதுகாப்பாளர்களும், புரோகிதர்களும் தாங்கள் சொல்வதையே உண்மையென்று நம்ப வேண்டுமென்றும், நம்பினால் இம்மையிலும், மறுமையிலும் இன்பமடையலாமென்றும், இன்றேல் இரண்டிலும் கொடிய துன்பங்களில் தவிக்க நேரிடுமென்றும் கண்டதே காக்ஷி கொண்டதே கோலமென்பதற் கொப்பத் தங்கள் தங்கள் கொள்கைகளை வலியுறுத்திப் போயினர். அப்போதனைகளை எவரும் அறிவால் ஆராய்தல் பாவம் எனப் போதிக்கப் பட்டது. எனவே! பயமும், கோழைத்தனமும், அடிமைப் புத்தியும் கொண்டமக்கள் அம்மத போதகர்களின் கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடந்து அல்லற் பட்டதில் ஆச்சர்யமொன்றுமில்லை. மதப்பித்தால் மக்கள் மயக்கமுற்ற காலமுதற்றான் அறியாமை, வறுமை, மூடநம்பிக்கை ஆகியவைகள் தலைவிரித்தாடின. அன்று முதலின்றுவரை மனிதஅறிவும், மனிதத்தன்மையும் மதகுருவுக்கு அடிமையாயிருந்தது; ஆனால் மனிதனின் உடலோ அரசனுக்கடிமையா யிருந்தது. குருமார்களின் அபிப்பிராயத்துக்கு மாறுபட்டு நடந்தவர்களையும்தாங்களேசுயேச்சையாக எதையும் ஆராய்ச்சி செய்யத்துணிந்தவர்களையும் சித்திரவதை செய்தார்கள்; இருட்டுக்குகைகளில் வீழ்த்தி உணவளியாது கொன்றார்கள். அம்மட்டோ! எரிநெருப்பிட்டுக்கொளுத்தினார்கள். அந்தோ! என்னகொடுமை! மனித சமூகத்துக்கு மதமிழைத்த கொடுமைகளை எழுத இவ்வுலக கபாதகங்களே போதாதென்னலாம்.

மதக்கொடுமைதான் இத்தகைய தெனின், அரசாங்கக் கொடுமையும் அளவிடற்பாலதன்று. அரசனது அதிகாரத்தையும், கொள்ளையிடப்பட்டார்கள் அவமதிக்கப்பட்டார்கள்; அழிக்கப்பட்டார்கள். மதகுருவும் அரசனும் பலிபீடமும், சிம்மாஸனமும்—விளக்கிக்கூறுமிடத்து மதப்புரட்டும், அரசாங்க அடக்கு முறையும் மக்களின் முதுகிவர்ந்து ஆதரிப்பாரின்றி பயத்தாற் சூழப்பட்டுத் தவிக்கையில், பட்டகாலிலேபடும், கெட்டகுடியேகெடும், என்பதற்கொப்ப, வறுமையும், பஞ்சமும், பிணியும், போர்வெறியும் அவர்களை அல்லோலகல்லோலப்படுத்திக் கொள்ளை கொண்டன உலகஞானம் சிறிதுமின்றிக் கிணற்றுத்தவளைகளென அறியாமையில் வாழ்ந்த மக்கள் மேற்கண்ட துன்பங்களையும், மதப்பாதுகாப்பாளர்களும், அரசர்களும் இழைத்தகொடுமைகளையும்பொறுமையோடு ஏற்றுஅடங்கி நடந்து வந்தனர். தங்கள் வாழ்கை மிகவும் கொடுமையாகவும், பயங்கரமாகவும் இருந்தாலும் அத்தகைய இழிதகை வாழ்வை நடத்தவாகிலும் தங்களைக்கடவுள் அநுமதித்தாரே யெனப்பாமர மக்கள் திருப்தியடைந்து கடவுளை வழிப்பட்டனர்.

பின்னர், மெதுவாக உலகநடைமுறையில் ஓர்மாற்றம் ஏற்பட்டது. மக்கள் விழிப்படைந்து தங்களை முன்னேறவொட்டாது தடைப்படுத்தியிருக்கும் கட்டுப்பாடுகளை யெல்லாம் உடைத்தெரிந்தனர்; சுதந்தரமடைந்தனர். எதிர்கால இன்பவாழ்க்கைக்கு தம்அரைக் கச்சைகளை இருகக்கட்டி கொண்டு முன்னின்றனர். இதுவே இன்றைய நிலையாகும். காட்டுமிராண்டிக்கால பழைய நீதிகளையும், 'கட்டுப்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும், அவர்கள் உடைத்தெரிகின்றனர். கடவுளும், கடவுள்அவதாரங்களும், தீர்க்கதரிசிகளும் மனிதன் அறிவுவளர்ச்சி பெறாத அந்தகாரக்காலத்தில் சென்னதாகவும், எழுதியதாகவும், கூறப்பட்டு போப்பரசர்களாலும், பாதிரிகளாலும் மற்றும் பிறமதப்பாதுகாப்பாளர்களாலும் அங்கீகரிக்கப்பட்ட மதத்தத்துவங்களையும், கோட்பாடுகளையும் நன்றாய் ஆராய்ந்து அவைகள் மனித அறிவைத் தடைப்படுத்துவதைக் கண்டார்கள். அறிவைத் தடைப்படுத்த, மதத்துக்கோ, கடவுளுக்கோ, அவதாரத்துக்கோ, தூதருக்கோ ஏனையமத அதிகாரிகளுக்கோ எந்தவிதமான உரிமை, அதிகாரமும் இல்லையெனக்கர்ஜிக்கின்றனர். அறியாமையால் இறந்தகாலம் ஆதாரமற்ற ஒன்றின்மேல் நம்பிக்கை கொண்டது. ஆனால் நிகழ்காலம் ஆதாரமற்ற எதையும் ஒப்புக்கொள்ள மறுக்கிறது. இம்முறையிலே மதங்களும், மதக்கோட்பாடுகளும் புறக்கணிக்கப்படுகின்றமையால் மதங்களின் ஆபாச, அபத்தநிலை வெளிப்படுகிறது. நம்பி

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க.

மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

"தர்க்கரீதியான ஓர் ஆராய்ச்சி"

(தோழர் பெட்ரண் ரஸ்ஸல் M. A., F. R. S.)

மதத்தைப் பற்றிய எனது அபிப்பிராயமும் லுக்ரடியஸ் [Lucrytius] என்பாருடைய நோக்கமும் ஒன்றே. மதம் என்பதைப் பயம் எனும் வித்திலே தோன்றி எண்ணவொண்ணாத இன்னல்களை மக்களுக் களிக்குமோர் கொடிய வியாதியாகவே நான் கருதுகிறேன். ஆனால் இந்த நாகரீக உலகத்தில் மாந்தருடைய முன்னேற்றத்திற்கு ஒரு சிறிது உதவி மதத்தாலேயும் கிடைத்திருக்கின்றதென்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அவை என்ன? ஆதிகாலத்திலே, அந்தந்த வருஷத்திய கால பாகுபாடுகளைக் கணித்து நிருணயம் செய்யவும்; ஈஜிப்த் (Egypt) மதாசாரியர்களைச்சூரிய சந்திர கிரகணகாலத்தை வெகு ஜாக்கிரதையாகக் குறிக்கச் செய்து, அதன் மூலமாக எந்த நிமிஷத்தில் எந்தக் கிரகணம் ஏற்படப் போகின்றதென்பதாக முன்னுடியே நிருமாணிக்கும் அவ்வளவு திறமையை அவர்களுக்கு அளித்ததும் ஆகிய இந்தஇரண்டுநன்மைகளும்நமக்கு அப்போது ஏற்படக்காரணபூதமாகஇருந்தது என்பதைநான் அங்கீகரிக்கின்றேன். ஆனால் அவையிரண்டேயன்றி, ஏனைய நன்மைகள் எவையும் இருப்பதாக எனக்குப் புலப்படவில்லை.

2. "மதம்" என்ற இந்த வார்த்தை ஓர் அர்த்த புஷ்டியற்ற சொல்லாகவே பலராலும் பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. பிராடஸ்டெண்ட் (Protestant) கிறிஸ்துவ மதப் பற்றுள்ளவர்கள் இதனைத் தங்களுடைய முக்கியமான சொந்த சித்தாந்தங்கள் அல்லது இந்த உலக இயற்கையின் சம்மந்தமான கொள்கைகள்ஆகியவைகளைக் குறிப்பதற்காகத்தான் உபயோகித்து வருகின்றனர். ஆனால் இவ்வித அர்த்தந்தான் ஆதியில் இப்பதத்திற் குண்டானது என்பதற்குச் சரித்திர சம்பந்தமான ஆதாரம் இல்லை. ஆதியில் மதம் எனும் சொல் ஒரு ஜனசமூகத்தின் வாழ்க்கை நிலையைக் குறிக்கவே தோன்றியதாகத்தான் தெரிகின்றது. (மேல்நாட்டிலே) தங்களுடையசொந்தசித்தாந்தங்களையே ஆதாரமாகக் கொண்ட பல மதாசாரியர்களாலேயே அநேக கிறிஸ்துவ கோவில்கள் (Churches) ஏற்பட்டிருந்த போதிலும், அவ்வித ஆசாரியார்களுக்கு அவரவர்களுடைய சொந்த கோவில்களிலேயே செல்வாக்கில்லாமல் இருந்ததாகத் தெரிகின்றது. எனினும், அவ்விதகோவில்கள்அவை எங்கெந்த வகுப்பினர்களுக்காக ஏற்பட்டதோ அவர்களிடையே பிரபலமாக வளர்ந்தோங்கி வந்ததென்பது உண்மையே. மேல்நாட்டு மக்களுக்கு மிக்க ஊக்கத்தை விளைவிக்கக் கூடிய ஓர் உதாரணத்தையே நாம் எடுத்து ஈண்டு ஆராய்வோம்:—

கிறிஸ்துவ வேதங்களில் (Gospels) காணப்படும் ஏசுநாதருடைய அநேக உபதேசங்களுக்கும், தற்கால கிறிஸ்துவ மக்களின் நடவடிக்கைகளுக்கும் வெகு தூரம் என்பது அதனால் நன்கு வெளியாகும். சரித்திரம் அல்லது சமூக முன்னேற்றம் இவை இரண்டின் மூலமாக ஆராயுமிடத்து கிறிஸ்துமதம் பரவுவதற்கு முக்கியாம்சமாக விளங்கியவை கோவில்களே [Churches] யொழிய ஏசுநாதர் [Christ] அன்று என்பது வெளியாகின்றது. எனவே மக்களின் முன்னேற்றத்திற்காகக் கிறிஸ்து மதம் என்ன செய்துளது என்பதை ஆராயப்புக வேண்டுமானால், ஏசுநாதரின் கட்டளை (Gospels) களை நாம் கவனிக்காமல், அம்மதத்தின்கோவில்களுடைய விதிகளையே ஆராய வேண்டியது அவசியமாகின்றது. இப்போது, ஏசுநாதர் என்ன உபதேசித்திருக்கிறார்? என்பதைக் கவனிப்போமாக. 'உமது சொத்துக்கள் முழுதும் ஏழை மக்களுக்கே தானமளிக்கப்பட வேண்டும். நீ பிறரிடம் சண்டையிடவே கூடாது. நீ சங்கங்களில் சம்பந்தப்படவே கூடாது. நீ விபசாரத்திற் கெனத் தண்டனையளிக்கக் கூடாது'—என்பதாக அன்றோ கட்டளையிட்டிருக்கின்றார். கத்தோலிக் (Catholics) ஆனாலும் சரி, பிராடெஸ்டெண்ட் [Protestents] ஆனாலும் சரி, எந்தக் கிறிஸ்துவனாவது அவர் கூறிய கட்டளைகளைக் காப்பாற்ற மனப்பூர்வமாக ஆசைப்படுகின்றானா? பிரான்ஸிஸ்கர் (Franciscars) களில் சிலர் மதாசாரியர்களின் தலைவராக இருக்கும் போப்புகளாவது [Popes] தரித்திர நிலைமையையே புருஷார்த்தமாக அங்கீகரித்து அனுஷ்டிக்க வேண்டுமென்பதாகக் கிளர்ச்சி செய்தார்கள் என்பது உண்மையே. ஆனால் ஆச்சாரியரின் தலைவரான போப் அவர்களை மதப் பிரஷ்டர்களாக்கிய தோடு, அவர்களுடைய கொள்கையே கிறிஸ்து மதத்திற்கு மாறானதென்பதாக பிரசுரித்தார்கள்! இது நிற்க: "உன்னை நீ பிறர் எவ்வாறு தீர்மானிக்கக் கூடாதெனக் கருதுகின்றாயோ அம்மாதிரியே நீயும் பிறரைத் தீர்மானிக்காதே" [Judge not that ye be not judged] என்ற ஏசுநாதருடைய உபதேசத்தையும் கவனியுங்கள். இன்குவிஷன் [Inquisition] எனும் போர்முறை விவகாரங்களுக்கும் க்லூ—கிலக்ஸ்—கிலான் [Klu-Klex-Klan] என்பதாக அமெரிக்காவில் நடைபெறும் நூதன இரகசியக்கிளர்ச்சிகளுக்கும்ஏதாவது சம்பந்தம் இருக்கின்றதா என்பவை ஆராய்வீர்களாக!

3. கிறிஸ்து மதத்திலே மேற்கூறிய விஷயங்கள் எவ்வாறு பொருத்தமாக, உண்மையாக விளங்குகின்றதோ அவ்வாறே புத்த மதத்திலும் இருக்கின்றது. அன்பினதும், அருளினதும் உருவமே புத்தர். தன்னை மரணத்தை வென்ற மானிடன் என்பதாகத் தவறுதலாக நம்பிஏமாந்திருந்த தனது சிஷ்யர்களை நோக்கித்தான் மரணத்தருவாயிலிருக்கும்போது அவர் அன்னவருடைய மடமையை எள்ளி நகையாடினார்! ஆனால் புத்தர்களோ அதிலும் முக்கியமாக திபெத் பீடபூமியில் இப்போது இருக்கும் புத்த மதாச்சாரியர்களோ வெனில்,—மருளும், பெருமிதமும், கொடூரமும்ஒருங்கேஓருருவெடுத்தாற் போலேதான் இருக்கின்றார்கள்!

4. கிறிஸ்து மத ஸ்தாபகரான ஏசுவின் உபதேசங்களுக்கும், கிறிஸ்து கோவில்களின் கட்டளைகளுக்கும்உள்ள எல்லாவிதவேறுபாடுகள் இயற்கையாக ஏற்படாமல், ஏதோ கால வித்தியாசத்தால் நேர்ந்திருக்க வேண்டும் என்பதாகத் தீர்மானித்துவிட வேண்டாம்.

ஓர் பரமதத்துவத்தை ஏதோ ஒரு மகான் பகிரங்கமாக வெளியிட்டவுடன், பல முக்கியஸ்தர்கள் உடனே ஒன்று கூடி அவருடைய உபதேச வாக்கியங்களை விளக்க, முற்பட்டு விடுகின்றனர். அவ்வித பிரசாரகர்களிடத்தில் தான் உண்மை விளக்கத்தின் திறவுகோல் இருப்பதாக ஏற்பட்டு விடுகின்றமையாயின், உடனே அவர்களுக்கு அபார சக்தி கற்பிதமாக ஏற்பட்டு விடுகின்றது. எனவே அவ்விதமாக உரிமை பெற்ற வகுப்பினர்களெல்லாம், அந்தச் சக்தியைக் கொண்டே தங்களுடைய சுயநல முன்னேற்றத்தைப் பூர்த்தி செய்ய முற்பட்டு விடுகின்றனர். பிறப்புரிமை சொத்துரிமை முதலிய வேறு பல உரிமைகளால் மற்றவர்களைப் புறக்கணித்து மேம்பட்டு விளங்கும் பல வகுப்பினர்களை விட இந்தக் கடவுள் உரிமை பெற்ற வகுப்பினர்களால் மக்களுக்கு விளையும் தீங்கு பன்மடங்கு அதிகம் எனலாம். ஏனெனில் இவர்கள் என்றென்றும் மாறாத ஓரே தத்துவத்தையே எக்காலத்தும் மேற்கொண்டு பிரசாரம் செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றமையின், கால தேசவர்த்தமானங்களுக் கேற்ப முற்போக்கில் மாறுபாடடையும் விஞ்ஞான ரீதியான, மாந்தர் நடவடிக்கைகளை முற்றிலும் அவர்கள் எதிர்த்து நிற்க வேண்டியவர்களே யாவர். இதனாலன்றோ இவர்கள் கலீலியோ (Galileo) டார்வின் (Darwin) போன்ற விஞ்ஞான விற்பன்னர்களை மதத்தின் சார்பாக எதிர்த்தனர், ஏன், நமது காலத்திலும் ப்ருட் Freud என்பாரை மதச்சங்கங்கள் எதிர்க்கவே செய்தன மாந்தருடைய மனதறிந்த வாழ்க்கையை (Intellectual life) க்கூட இந்தக் கிறிஸ்துவ சங்கமானது [Church], காலத்தில் தலையெடுக்காதபடி அழுத்தியே வந்திருக்கின்றது. கிறிஸ்து மதாசாரியர் தலைவரான கிரகரி மஹான் [Pope Gregory the Great] என்பார் — நீர் இலக்கண நூலை [Grammar] சில நண்பர்களுக்கும் போதிப்பதாக எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கின்றது, அதனை நாங்கள் ஆமோதிக்காது விடுவதோடு உமது செயலுக்காக மிகவும் விசனிக்கின்றோம் என்பதை தலைமையாகக்கொண்டு ஒரு நீண்ட நிருபத்தைஎழுதியிருக்கின்றார். அந்த மதாசாரியர் [Bishop] தனது தலைவர் கட்டளையை மீற முடியாத அத் துஷ்கிருத்தியத்தை அறவே ஒழித்தார்! உண்மையில் பாஷா விருத்தி மேல்நாட்டில் மதப் புரட்சி [Renaissance] ஏற்பட்ட பிறகே மேலோங்குவதாயிற்று. மதமானது அறிவை மட்டும் அழித்ததோடு நில்லாமல், மாந்தரது ஒழுக்கத்தையும் [Morals] மாளச்செய்திருக்கிறது. நான் ஏன் அங்ஙனம் கூறுகின்றேனெனில், மதமானது மாந்தருக்கு ஆனந்தத்தை விளைவிக்கும் ஒவ்வொரு மார்க்கத்தையும், அதன் உபதேச நியதிகளால் தடை செய்வதாலேயாகும். சில வருடங்களுக்கு முன்னர் ஜெர்மனி தேசத்தை ஆண்டுவந்த ஓர் அரசனைச் சிங்காதனத்தினின்றும் இறக்கியபோது அந்த அரசனுடைய குடும்பத்தாருக்கு அவர்களுடைய சொந்தச் சொத்துக்களைத் திருப்பிக் கொடுப்பதற்காக, சகல ஜனங்களின் சம்மதத்தை வோட்டின்மூலமாக (Plebicite) கேட்டறிய அந்நாட்டினர் முற்பட்ட போது, ஜெர்மனி தேச கிறிஸ்து சங்கம் [Church] அவ்வாறு திருப்பிக் கொடுத்தல் ஏசுவின் கட்டளைக்கு முற்றிலும் மாறுபாடாகுமென்பதாக தனது அதிகார தோரணையில் விளம்பரம் செய்திருக்கின்றது. மேலும், மனிதர்களை மிருகங்

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க,

தோழர் எஸ். ராமநாதன்

தோழர் ராமநாதன் அவர்கள் ஐரோப்பாவிலேயே தங்கிக்கொண்ட விஷயத்தைப்பற்றி பல பத்திரிகைகள் பலவிதமாக எழுதி பொதுஜனங்களுக்குள் ஒருவித தப்பு அபிப்பிராயத்தை உண்டுபண்ண முயற்சிப்பதாய் தெரிய வருகின்றது. அதென்னவெனில்

1. தோழர் ராமநாதன் கையில் ஒருகாசுகூட கொடுக்காமல் அவரை காயலாவுடன் பிரான்ஸ் ஆஸ்பத்திரியில் விட்டுவிட்டு ஓடி வந்துவிட்டதாக ஒரு கூற்று.

2. தோழர் ராமநாதனை மார்சேல்ஸ் நடுத்தெருவில் கையில் ஒரு காசுகூட இல்லாத நிலையில் விட்டுவிட்டு வந்ததாக மற்றொரு கூற்று.

3. தோழர் ராமநாதனை மார்சேல்ஸ் தெருக்களில் ஒருகாசுகூட நான் கொடுக்காமல் விட்டுவிட்டுவந்துவிட்டதாகவும், ஆனால் தன்கையில் தன் தங்கை எவ்வளவோ கஷ்டப்பட்டு சேர்த்துவைத்திருந்ததை அனுப்பியிருப்பதாகவும் அது, சிறுதொகை—செலவுக்கு போராதது போலவும் குறிப்பிட்டு இங்குஒரு கனவானை தனக்கு கடனாக 300 ரூபாய் அனுப்பும்படி கேட்டுக்கொண்டிருப்பதாய் மற்றொரு கூற்றும், இன்னும்பல.

மேல்கண்ட இவைகளையெல்லாம் நிரூபிக்க தோழர் ராமநாதனால் எழுதப்பட்ட கடிதங்கள் என்பதாக சில பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கடிதங்களேயாகும். அவையாவன:—

1. 4—11—32-தேதி தாருல் இஸ்லாம் உபதலையங்கம்.

"எமது நண்பர் ஒருவருக்குத் திரு. எஸ். இராமநாதன் அவர்கள் எழுதிய கடிதத்திலிருந்து அவர்கள் ஜினீவாவில் (ஸ்விட்ஜர்லாந்து) இருப்பதாகவும், பிரான்ஸில் அவரை ஆஸ்பத்திரியில் விட்டுவிட்டு, தோழர். ஈ. வெ. ரா. வும், ராமுவும் ருஷியா போய் விட்டதாகவும் செய்தி எட்டியது."

மற்றொன்று ஜினிவாவிலிருந்து,

2. "ராமசாமி வருகையைப் பற்றி தெரிந்திருப்பீர்களென்று நினைக்கிறேன். கையில் ஒருகாசுகூட இல்லாத நிலைமையில் அவர் மார்செயில்ஸ் வீதிகளில் என்னை விட்டுவிட்டு வந்துவிட்டார். அது அவருடைய சுபாவம், ஆகையால் அதைப்பற்றி குறை கூறுவதற்கில்லை. என்னுடைய சகோதரி சேகரித்து அனுப்பக் கூடியசிறிய தொகையைக்கொண்டு கஷ்டத்துடன் நாட்களைக்கழித்து வருகிறேன். தங்களுக்கு வேறு பலவித செலவிருக்குமென்பது தெரிந்தாலும் தாங்கள் இதுசமயம் ரூ. 300 கடனாகக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளீர்களென்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்த தொகையை தங்களால் அனுப்ப முடியாதிருந்தால் கூடுமானதை யாவது அனுப்பவேண்டுகிறேன்" என்பதாகும்.

இவற்றை சிலர் நம்பியும் சிலர் நம்பாமலும் இதன் உண்மைதான் என்னமாய் இருக்கக்கூடும் என்பதை அறிய ஆசைப்பட்டும் இருப்பதாக தெரியவருகிறது.

இதைப்பற்றி இது சமயம் மிகச்சுருக்கமாகவே விளக்கினால் போதும் என்று கருதுகிறேன். ஏனெனில் தோழர் ராமநாதன் இங்கு பக்கத்தில் ஆஜர் இல்லை என்பது ஒருபுறமிருந்தாலும் மேல்கண்ட கூற்றுகளைப்பொருத்தவரையில் தான் பொது ஜனங்களும் உண்மை அறிய ஆசைப்படுவார்கள் ஆனதினாலும் பத்திரிகைகளில் காணப்பட்ட மேற்கண்ட கூற்றுக்கள் அவை தானாகவே ஒன்றுக்கொன்று முரணாய் இருப்பதை வாசகர்கள் கூர்ந்து கவனித்தாலே ஒருவாறு உண்மை உணரலாம் ஆனதினாலும் மற்றும் அதைப்பரப்ப முயற்சிக்கின்றவர்களின் மனப்போக்கை கவனித்துப்பார்த்தால் என்ன கருத்துடன் இந்த பிரசாரம் செய்யப்படுகின்றது என்பது தெளிவாகுமானதினாலும் வெகு சுருக்கத்திலேயே இருப்பது நலம் என்று கருதுகிறேன்.

தோழர் ராமநாதன் காயலாவுடன் எந்த ஆஸ்பத்திரியிலும் விட்டுவிட்டு வரப்படவில்லை என்பது அவர் கடிதங்கள் என்பவைகள் ஒன்றிலிருந்தே வெளிப்படுகின்றது. அவர் கையில் ஒரு காசுகூட இல்லாமல் விட்டுவிட்டு வரப்பட வில்லை என்பதும் அவரது கடிதங்கள் என்பவைகளில் மற்றொன்றில் இருந்து விளங்குகின்றது. ஆகவே பிரசாரத்திற்கு ஆதாரமான இரண்டு கூற்றுகளும் உண்மை இல்லை என்பதை நான் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. ஆனால் தோழர் ராமநாதனால் எனக்கு எழுதப்பட்ட இரண்டு கடிதத்தை இதில் பிரசுரிக்கிறேன்.

அவ்விரண்டு கடிதத்தையும் பார்த்தால், ஒன்று தோழர் ராமநாதன் இந்தியாவுக்கு வர இஷ்டப்படவில்லை என்பதும், நாம் அழைத்தும் அதை மறுத்திருப்பதும், என்னை மாத்திரம் தனியாய் இந்தியாவுக்கு போகும்படி வற்புறுத்தி இருப்பதும் விளங்கும். (இதன்காரணம் அவரது குடும்பத்தாருக்கும் நெருங்கிய நண்பர்களுக்கும் தெரியும்) மற்றொன்று நான் இந்தியா வந்து சேர்ந்த பிறகு தோழர் ராமநாதனால் ஜினிவாவில் இருந்து எழுதியிருப்பது விளங்கும்.

அவையாவன:—

I.

Madrid'
Hospital
17—8—32

நமஸ்காரம்,

எனக்கு உடம்பு கொஞ்சம் சௌக்கியமாய்விட்டபடியால் உடுப்பு தேவையாய் இருக்கிறது. அதற்கு சௌக்காரம் போடாத வைகளை வீட்டுக்காரியிடம் கொடுத்து போடச்சொல்லி காயவைத்து ஒரு செட் பூட்ஸ் Socks உடன் அனுப்பிவைக்க வேண்டுகிறேன். கைப்பையில் Brush Paste சவரம் பண்ணிக்கொள்ள கத்தி பெட்டி சோப்பும் கடிதம் எழுத காகிதம் கவர் பென்சில் ஸ்டாம்பும் அனுப்ப வேண்டுகிறேன். அவ்விடமுள்ள என் புஸ்தகத்தில் Bertrand Russel அனுப்பினால் நலம்.

தாங்கள் எனக்காக காலம் கடத்தாமல் மேல்கோண்டு போவதே சரி என்று மறுபடியும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இங்கு வேலைக்காரர்களுக்கு ஏதாவது கொடுப்பது வழக்கமாகையால் சில்லரை கொஞ்சம் அனுப்பவேண்டுகிறேன்.

ராமநாதன்.

குறிப்பு:— இந்த ஆஸ்பத்திரி மாட்ரிட்டுக்கு 6 மைல் தூரத்தில் 'Tetuan Victorias' என்றஇடத்தில்கட்டப்பட்டது. அங்கிருந்து மாட்ரிட்டுக்கு எழுதப்பட்டது.

II.

S. Ramanathan,
C/o Thomas Cook,
Geneva, Switzerland.
26—10—32.

அன்புள்ள ஐயா,

மேற்கண்ட எனது விலாசத்திற்கு "குடி அரசு" பத்திரிகை அனுப்பிவர வேண்டுகிறேன். மதத்தைப்பற்றிய புத்தகம் வெளியிட்டிருந்தால் நான்கு பிரதிகள் அனுப்பவும். பர்லினில் இருந்த ராமு இந்தியாவுக்குத் திரும்புவதாகச் சொல்லிவிட்டு இங்கிலாந்து போனதாகக் கேள்விப்படுகிறேன். அவ்விடம் திரும்பிவந்த விபரம் எழுதவேண்டுகிறேன்.

தங்கள் அன்பன்
ராமநாதன்.

இந்தக்கடிதம் நான் இந்தியாவுக்கு வந்தபிமேல் 13—11—32 தேதியில் ஈரோடு விலாசத்திற்கு கிடைத்தது.

இந்தக்கடிதங்கள் தோழர் ராமநாதனின் நிலைமையும் என்ன நடந்திருக்கக்கூடும் என்பதையும் தானாகவே சொல்லும்.

தவிர தோழர் ராமநாதன் கையில் பணமில்லை என்பது உண்மை அல்ல என்பதை அவர் மற்றொரு நண்பருக்கு எழுதியிருப்பதாகச் சொல்லப்படும் கடிதங்கள் ஒன்றின் மூலமாகவே விளங்குமானாலும் அதைப்பற்றியும் சற்று விளக்குவோம்.

அவர் இந்தியாவுக்கு திரும்புவதில்லை என்கின்ற விஷயத்தைத் தனது சகோதரிக்கு சூசனையாய் காட்டி எழுதி செலவுக்கு அனுப்பும்படி எழுதிய கடிதத்தின்மீது அவ்வம்மையார் வருத்தப்பட்டு அவசியம் திரும்பி வரும்படி கெஞ்சிக்கேட்டுக்கொண்டும் மற்றும் அவர் கேட்டபடி 300 ரூபாய் அனுப்பியிருந்த தொகையின் செக்கு ஒன்று என்னை அவர் பயணம் அனுப்பும் முதல் நாள்வரையில் மாற்றாமல் வைத்திருந்து அன்றுதான் மாற்றிக்கொண்டார். இதோடு அவர் இந்தியாவுக்கு வருவதில்லை என்று சொன்ன பிறகும் அவர் தனக்குபணம்தேவையில்லை என்று சொன்ன பிறகும் அவர் கப்பலை விட்டு இறங்கும்போது நான் கொடுத்த 5 பவுனும் மற்றும் அவரிடம் சில்லரையாய் இருந்த தொகையும் சேர்த்து சற்றேறக்குறைய 400 நானூறு ரூ. போல் அவர் கைவசம் இருந்தது. அவரது தங்கை அனுப்பிய ரூபாய் சுமார் ஒரு மாதகாலமாய் செக்கு மாற்றாமலும் அதிலிருந்து செலவழிக்கச் செய்யாமலும் இருக்கும்படி வற்புறுத்தியவன் நானேயாகும்.

அன்றியும் அவர் ஜினிவாவுக்கு போவதாய் பயணம் சொல்லிக்கொண்டு கப்பல்விட்டு இறங்கும் போது எப்பொழுதுதான் இந்தியாவுக்கு வருவதாக உத்தேசம்

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

ஈ. வெ. இராமசாமி சென்னை விஜயம்.

ஸ்டேஷனில் பல ஆயிரக்கணக்கான மக்களின் குதூகல வரவேற்பு.

எது தாழ்த்தப்பட்டார் விடுதலை.

அரசியல் உரிமைகள் அவசியமா?

20-11-32ல் தோழர் ஈ. வெ. ராமசாமியாரின் வருகையைப் பற்றி சென்னையில் சென்ற இரண்டு மூன்று தினங்களாக இதே பேச்சாக விருந்தது. அன்னாரின் விஜயத்தைப் பற்றி நகரெங்கும் சுவரொட்டி விளம்பரங்கள் ஒட்டப்பட்டிருந்ததன்றி, ஏராளமான அறிக்கைப் பத்திரங்கள் வினியோகிக்கப் பட்டிருந்தன.

நமது தோழர் வரும் நீலமலை வண்டி 6-35 மணிக்கு வருமென்றாலும், ஆயிரக்கணக்கான ஜனங்கள் 6 மணிக்கே ஸ்டேஷனில் பெருத்த கூட்டங் கூட்டமாக கூடி நின்ற காக்ஷி வியக்கத்தக்கதா யிருந்தது. குறிப்பாக அநேக பெண்களும் வரவேற்பில் கலந்து கொண்டனர்.

சரியாக 6-35 மணிக்கு ரயில் வந்து சேர்ந்தது. தோழர் ஈ. வெ. ராமசாமியுடன் அவர் சகாக்களான தோழர்கள் நாகம்மையார், சிவகாமி சிதம்பரனார், விசாலாக்ஷி சுப்பையா, வி. பார்த்தசாரதி ஆகியோர்களும் வந்துசேர்ந்தனர். தலைவரின் காக்ஷியைக் கண்டதும் ஆகாயமளாவிய ஜெய கோஷம் கிளம்பியது.

பின்னர் தலைவர் கீழே இறங்கியவுடன் பற்பல சங்கங்களின் சார்பாய் பலரோஜாப் புஷ்ப ஹாரங்கள் சூட்டப்பட்டன. அவைகளில் முக்கியமானவை சென்னை சுயமரியாதை மத்திய சபை, ஆதிதிராவிடர் சங்கம், தாழ்த்தப்பட்டார் தொண்டர் படை, சுயமரியாதை இளைஞர் மன்றம், முதலியவைகள் மூலமும், ஈ. வெ. ரா. நாகம்மையாருக்குப் பெண்கள் சார்பாய் இருமாலைகளும் பெண்களிட்டனர்.

ஸ்டேஷனில் தலைவரை வரவேற்ற முக்கியஸ்தர்கள்:—ஐக்கிய நர்ணையடிப்டி ரிஜிஸ்டிரார் சி. டி. நாயகம், சுந்தரராவ் நாயுடு பி. ஏ. பி. எல்., எம். எல். சி., சிவப்பிரகாச முதலியார், பி. ஏ. பி. எல்., முத்துசாமி வல்லத்தரசு பி. ஏ. பி. எல்., டி. வி. சுப்பிரமணியம், ஓ. சி. ஸ்ரீனிவாசன், அருணாசலம் செட்டியார், எஸ். பி. ரத்தினசாமி, திருஞான சம்பந்தம், சிவஷண்முகம் எம். ஏ., முத்தையா பி. ஏ. கிருஷ்ணசாமி பி. ஏ., அப்பர்சாமி பி. ஏ. வி. ராமசாமி, அழகர்சாமி, பொன்னம்பலம், எஸ். குஞ்சிதம், பி. ஏ. எல். டி., அரங்கநாயகி, சகுந்தலா காந்தம், மிராண்டா எஸ். குருசாமி பி. ஏ. முதலாகியோர்களாகும்.

பின்னர் ஸ்டேஷனை விட்டு வெளியே தலைவர் வரும்பொழுது பலத்த ஜெய கோஷங்கள் முழங்கின. ஸ்டேஷனுக்கு வெளியேயும், உள்ளேயும் ஏராளமான ஜனங்கள் கூடிநின்று தலைவரை வரவேற்றனர் பின் தலைவர் ஏற்கனவே அறிவித்திருந்தபடி, தோழர் டி.வி. சுப்பிரமணியம் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டார்.

பல சங்கங்கள் வரவேற்பளித்தல்

ஏற்கனவே, விளம்பரங்களில் அறிவித்திருந்தபடி குறிப்பிட்ட காலத்தில் கூட்டம் ஆரம்பிப்பதற்கு இடையூறாக விடாமழை பெய்ததால் அங்ஙனம் ஆரம்பிக்க இயலாமற்போயினும், கூட்டம் ஆயிரக்கணக்காக மழையையும் எதிர் பாராது சர் தியாகராய ஞாபகார்த்தக் கட்டிடத்திற்கு வந்து சேர்ந்து கொண்டே இருந்தனர். சரியாக 4-30 மணிக்கு கூட்டம் ஆரம்பிக்கப் பட்டது. ஏற்கனவே தலைமை வகிக்க ஒப்புக்கொண்ட சென்னைநகரசபைத் தலைவரும்செட்டிநாட்டு இளவரசருமான, தோழர் எம். ஏ. முத்தையா செட்டியார் அவர்கள் தமது உடல் எதிர்பாராது நலிவுற்றிருப்பதால் வர இயலாமையைக் குறித்து மன்னிக்கும்படி கடிதம்எழுதியதால், தாழ்த்தப்பட்டார் தொண்டர்படைத் தலைவரும், சட்ட சபை அங்கத்தினருமான தோழர் டி. சுந்தரராவ் நாயுடு பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமை வகித்தார். தலைவரவார்கள் ஆரம்பத்தில் கூட்டம் கூடியதின் காரணத்தை விளக்கிக் கூறி, சுயமரியாதை இயக்கத்தலைவர் மேனாட்டிற்சென்று தாம் அறிந்த அனுபவங்களை எடுத்துக்கூற தான் எதிர்பார்ப்பதாகவும் பேசினார். பின்னர் நமது இயக்கத் தலைவருக்கு சுயமரியாதை மத்திய சபைக் கமிட்டியார், சுயமரியாதை இளைஞர் மன்றத்தினர், பெரம்பூர் சுயமரியாதை சங்கத்தார், ராயபுரம் கண்ணப்பர் இளவசவாசக சாலையார், வில்லிவாக்கத்துக் கடுத்த வேலையம்பதி சமதர்ம சங்கத்தினர் முதலிய ஸ்தாபகர்கள் தோழர் ஈ. வெ. ராசாமியாருக்கு வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுத்தனர்.

பின்னர், தோழர், ஈ.வே. ராமசாமி எழுந்து இவ்வரவேற்புப் பத்திரங்களுக்குப் பதிலளித்தனர். அவர் பேசுகையில், அப்பத்திரிகைகளிற் கூறியிருப்பவைகளிலிருந்து நமது நாட்டில் இவ்வியக்கம் எங்ஙனம் இருக்கிறதென்பதை அறிவதாகவும் அத்தகைய விஷயங்களைப்பரப் பச்சகலரும் ஒத்துழைக்க வேண்டிய தென்றும், நாடு வறுமை நிலையிலிருப்பதற்குக் காரணங்களெவை என்றும் எல்லா மக்களும் இன்புற சமூக பொருளாதார சமத்துவத்துடன் சகல உரிமைகளுடன் வாழவேண்டிய நோக்கத்தையே இவ்வியக்கம் போதிக்கிறதென்றும். மக்களில் உயர்வு தாழ்வு என்பதில்லை என்றும். ஒற்றுமையாக வாழவேண்டியதைப்பற்றியே இவ்வியக்கம் பாடுபட்டு வருகிறதென்றும், எவ்விதத்திலும் மக்கள் முன்னேற்றத்திற்கனுகூலமாக உழைப்பது எந்த கட்சியாக இருந்தாலும், எந்த இயக்கமாக இருந்தாலும் அத்தகைய கட்சியையே இயக்கத்தையே நாம் ஆதரிக்க வேண்டுமென்றும், தமது மேல்நாட்டின் யாத்திரையில் தோன்றிய அனுபவங்களைப்பற்றியும் சபையினருக்கு 1-30மணிநேரம் விளக்கிக்காட்டினார். சென்னையில் வெளிவரும் சில பத்திரிகைகளில் தான் தோழர் எஸ். ராமநாதனை ஜினீவாவில் அனாதையாய் விட்டு விட்டு வந்ததாகவும் அதைப்பற்றிச் சென்னையிலிருப்பவரொருவருக்குக் கடிதம் எழுதி இருப்பதாகவும் கூறியிருக்கும்கூற்றுக்களைக் கண்டித்து அவைஉண்மைஅல்லஎன்றும்தோழர் ராமநாதன் வற்புறுத்தலினால் தான் தனியே வரநேரிட்டதென்றும், இன்னும் சில மாதங்கள் வரை அங்கு தங்க அவர் விரும்புவதாகவும். அதைப்பற்றி3-மாதத்திற்கு முன் ஆஸ்பத்திரியிலிருந்த சமயம் அவருக்கு எழுதிய கடிதத்தைக்காண்பித்தார். அதன்பிறகு கூடவேஇருந்துதான் கப்பலுக்கு வரும்பொழுது தோழர் ராமநாதனும் கூட வந்து கப்பலேற்றிவிட்டுச் சென்றாரென்றும், அச்சமயம் 400 ரூ. அவர் கையிலிருந்ததென்றும், ஈரோட்டிற்கு வந்தவுடனும் தோழர் ராமநாதனால் தனக்கு எழுதப்பட்ட கடிதத்தைப்பிரித்துக்காட்டினார். இத்தகைய வீண்புகார்களுக்காகதான் அஞ்சப்போவதில்லை என்றும் கூறிமுடித்தார். பின்னர் தலைவர் முடிவுரை கூறினார். "திராவிடன்" ஆசிரியர் தோழர் டி. வி. சுப்பிரமண்யம், தலைவருக்கும், சொற்பொழிவாளருக்கும், வந்திருந்த பொதுமக்களுக்கும் வந்தனோபசாரம் கூறி, அன்றுமாலை கூட விருந்த பொதுக்கூட்டம் மழை அசந்தர்ப்பத்தினால் கூட்ட முடியவில்லை என்றும், மற்றொரு நாள் தகுந்த விளம்பரத்துடன் கூட்ட முயலுவதாகவும் பேசி முடித்தார். சுமார் 6 30 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

பொதுக்கூட்டம்.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் ஐரோப்பா, ரஷியா முதலிய மேனாட்டுப் பிரயாணத்தை முடித்துவிட்டு சென்னைக்கு வந்திருப்பது இதுவே முதலாவதாகும். இம்மாதம் 23 தேதியாகிய செவ்வாயன்று சென்னை நேப்பியர் பார்க்கில் மாலை 6 மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அதுசமயம் சென்னை தாழ்த்தப்பட்டார் தொண்டர்படையாரால் ஒரு வரவேற்பு நடந்தது. கூட்டத்திற்கு 3000 பேர்கள் வரை வந்திருந்தனர். தொண்டர் படைக்காரியதரிசி தோழர் பாலகுருசிவம் ராமசாமியைப்பற்றி சில வார்த்தை பேசி வரவேற்றார். தொண்டர்படைத்தலைவரும், சென்னை சட்டசபை அங்கத்தினருமான தோழர் டி. சுந்தரராவ் அவர்களைத் தலைவராக இருக்கும்படி பிரேரேபித்தார். பின்னர் அனைவருடைய வேண்டுகோளுக்கிணங்கி,

தோழர் டி. சுந்தரராவ்
பி. ஏ. பி. எல்., எம். எல். சி.,

அவர்கள் தலைமை வகித்துப் பின்கண்டவாறு பேசினார்.

தோழர்களே! இன்று இச்சபை கூட்டப்பெற்றதின் நோக்கமும், அவசியமும் இன்னதென நீங்கள் நன்குணர்வீர்கள். நமதியக்கத்திற்குப் போதிய ஆதரவும், ஊக்கமும் அளித்த தோழர் ராமசாமியாரை வரவேற்கும் பாக்கியம் நமக்குண்டானதைப்பற்றி நாம் மகிழவேண்டியவர்களாயிருக்கின்றோம். தாழ்த்தப்பட்டாராகிய நமது குறைபாடுகளை அடிக்கடி சர்க்காருக்கு எடுத்துக் காட்டி வந்தமுகத்தான், பிரிட்டிஷ் சர்க்கார் சைமன் கமிஷனை அனுப்பினார்கள். அதை நமது நாட்டில் பலர்எதிர்த்தனர்.பகிஷ்கரித்தனர் ஆயினும்நமதுபிரதிநிதிகள்பலரும் காலஞ் சென்ற பனகால் அரசருள்பட யாவரும் நமது குறைகளை எடுத்து விளக்கினர், அதன் பயனாக இங்கிலாந்தில் வட்டமேஜை மகாநாடு ஒன்று கூட்டப்பெற்று அதில் இந்திய மக்களாகிய நம்முடைய பிரச்சினைகள் பலவற்றைப் பற்றி வாதாடினர். வகுப்புப்பிரச்சினையில் இம்மகாநாட்டில் வெற்றி பெறாதது கண்டு, பிரதம மந்திரி தோழர் மெக்டனால்டு வகுப்பு பிரச்சினைத் தீர்ப்பு என்ற ஓர் தீர்ப்பை இறுதியில் செய்து முடிவு கட்டினார். அத்தீர்ப்பில் தாழ்த்தப்பட்டாராகிய நமக்குத் தனித் தொகுதி மூலமாய், பலஸ்தான

(தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

குடி அரசு.

ஈரோடு 1932 நவம்பர்மீ 27-உ

ஹரி ஜனங்கள்.

—:0:—

இந்திய தேசியம் என்னும் சுயராஜ்ய முயற்சி தோல்வியடைந்தவுடன் இந்து மதப்பிரசாரம் தொடங்கப்பட்டு அதற்கான முயற்சிகள் செய்யப்பட்டு வருவது யாரும் அறியாததல்ல.

உண்மையைச்சொல்லுமிடத்து இந்திய தேசியமென்பதே இந்து மத ஆதிக்கமே தவிர வேறல்ல. இக்கருத்தை இதற்கு முன் பல தடவைகளில் விளக்கியிருக்கின்றோம். இந்திய தேசியம் இந்து மத ஆதிக்கத்திற்கு பாடுபடுகின்றது என்று நன்றாய் விளங்கியதால் தான் இந்துமதத்தின் காரணமாய் உயர் நிலையில் இருப்பவர்களான 100க்கு 90 வீதமுள்ள பார்ப்பனர்கள் காப்பிக்கடை, வக்கீல், குமாஸ்தா உள்பட யாவரும் தேசியப்பிரசாரத்தை நடத்துகிறார்கள். அதோடு மாத்திரமல்லாமல் மத உணர்ச்சியால் தான், மதத்தின் கற்பனையின் பயனாகத்தான் தாங்கள் செல்வவான்களாக இருக்க முடிகின்றது என்று கருதிய செல்வவான்கள் எல்லோரும் இந்த தேசிய முயற்சிக்கு கோடிக்கணக்கான ரூபாய்களை உதவிவருகின்றார்கள். அதற்கு பிரதி உபகாரமாகவேதான் இந்திய தேசியத்தில் முக்கிய கொள்கையாக, ''மதத்தையும், மத ஆதாரங்களையும் காப்பாற்றப்படும்'' என்றும், எல்லா மதங்களினுடைய எல்லா ஆதாரங்களையும் எல்லா மத சம்பந்தமான பழக்க வழக்கங்களையும் காப்பாற்றப்படும் என்றும் உறுதி கூறுவதாக திட்டம் போட்டுக்கொண்டார்கள். இதன் பயன் எல்லா மதங்களுக்கும் சமமானதுதான் என்பதாகக் காணப்பட்டாலும், பலர் அந்தப்படியே நம்பியிருந்தாலும், மேல்கண்டகொள்கைகள் அமுலிலிருக்கும்வரை இந்து மதசமூகம் என்பது தான் எப்போதும் மெஜாரிட்டியாகவும், மற்ற மத சமூகங்கள் என்பது எப்போதும் மைனாரிட்டியாகவுமே இருந்து வருவதற்கு ஏதுவாய் இருக்கும். எப்படி ஆனபோதிலும் இம்மதபாதுகாப்புகள் என்பவைமேல் ஜாதிக்காரனையும், பணக்காரர்களையும் காப்பாற்றவும் நிலை நிறுத்தவும் பலமான ஆயுதமாக இருந்து வரப்போகின்றனவே தவிர, பல மதங்களிலும் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களையும், ஏழைமக்களையும், கூலி, தொழிலாளி என்ற மக்களையும் ஈடேற்றச் செய்யப் போவதில்லை என்பதோடு வேறு வழியில் ஈடேற முயற்சித்தாலும் அதைத் தடைப்படுத்தவே பயன் படப்போகிறது என்பது மாத்திரம் உறுதி.

அன்றியும் இன்றையதேசிய மதப்பிரசாரகர்களும் இந்த விஷயங்கள் தெரிந்துதான் தங்களின் இன்றைய உயர்நிலைக்கும், செல்வ நிலைக்கும் ஆபத்து வந்துவிடக் கூடாது என்று கருதியே அவசர அவசரமாக மதப்பாதுகாப்பையும் மத ஆதாரபாதுகாப்பையும் வெகு நாளைய பழக்க வழக்க பாதுகாப்பையும் அரசியல் திட்டத்தில் புகுத்தி பந்தோபஸ்து செய்து கொண்டார்கள்.

தாழ்ந்த ஜாதி என்பது ஒழிய வேண்டுமானால் உயர்ந்த ஜாதி என்பது ஒழியவேண்டாமா? ஏழ்மைத்தன்மை ஒழியவேண்டுமானால் பணக்காரத்தன்மை ஒழியவேண்டாமா? என்பது நடுநிலையில் இருந்து நியாயக்கண்களுடன் பார்த்தால் மூடனுக்கும் விளங்காமல் போகாது. ஆகவே மதம் வேண்டும், சாஸ்திரம் வேண்டும், வருணாச்சிரம தர்மம் வேண்டும் இவ்வளவும் போராமல் வெகு நாளைய பழக்க வழக்கங்களும் வேண்டும். இவ்வளவு மாத்திரம் அல்லாமல் இந்தியாவிலுள்ள சுதேச சமஸ்தான அரசர்களும் அவர்களது ஆட்சிகளும் இருக்கவேண்டும் என்றும் தீர்மானித்துக்கொண்டால் பிறகு சுயராஜியம் என்பது என்ன அது யாருடைய நன்மைக்கு பயன்படக்கூடியது என்பதுயோசிக்கதக்க விஷயமல்லவா என்று கேள்க்கின்றோம்.

தோழர் காந்தியுள்பட ''சுதேச சமஸ்தான அரசர்கள் இந்தியாவில் இருக்கவேண்டியது சரி'' என்று ஒப்புக்கொண்ட பிறகு, வட்ட மேஜை மகாநாட்டிலும் ஏற்றுக்கொண்ட பிறகு சுயராஜியம் என்பதன் பொருள் என்ன என்பது சிறிது யோசித்தாலும் விளங்காமல் போகாது.

ஆகவே வரப்போகும் சுயராஜ்ஜியத்தில் மதம், சாஸ்திரம், ஜாதி அரசன், முதலாளி, தொழிலாளி, ஹரிஜனங்கள் ஆகியவைகள் இருக்கும், என்பதும், அந்நிலைகள் காப்பாற்றப்படும் என்பதும் மறுக்க கூடியதல்ல.

தோழர்களே! தேசிய சமதர்மவாதிகளே இப்படிப்பட்ட சுயராஜிய முயற்சிக்கு—தேசிய முயற்சிக்கு மக்களுக்குள் சகல துறைகளிலும் ஒற்றுமையும் சமத்துவமும் வேண்டும் என்பவர்கள் ஒத்துழைக்கவேண்டியதா? அல்லது தடையாய் இருந்து அம்முயற்சிகளை முறியடிக்க வேண்டியதா என்பதை யோசித்துப் பாருங்கள்.

சென்ற வாரம் நாம் குறிப்பிட்டபடி ஒற்றுமை மகாநாட்டில் என்ன செய்ய முடிந்தது? ''இந்து மதத்திற்கு விரோதமாய் இருக்கக்கூடாது, அதைக்குற்றம் சொல்லக்கூடாது அதன் மோசத்தையும், சூழ்ச்சிகளையும் வெளியிடக்கூடாது'' என்கின்ற ஒப்பந்தத்தை மகமதியர்களிடம் பெற்றுக்கொண்டு அதற்கு பதிலாக அவர்களுக்கு ஏதோ சில பிச்சைகள் போல் கொடுத்து ஏமாற்றப்பட்டு விட்டது. அங்கு கூடியிருந்த முஸ்லீம்கள் உண்மையிலேயே சமதர்மவாதிகளாய் இருந்திருப்பார்களானால் அவர்கள் எந்தவிதத்தில் இந்த ஒப்பந்தத்திற்கு கட்டுப்பட்டிருக்க முடிந்தது என்பதே நமது கேள்வி? இந்து மதத்தில் உள்ள ஊழல்களும், மோசங்களும், கொடுமைகளும், சூழ்ச்சிகளும் அவர்களுக்குத் தெரியாதா? அம்மதத்தால் 100-க்கு 90 மக்கள் பலர் கீழ் ஜாதியாயும், பலர் ஏழைகளாயும், பலர் கூலிகளாயும் பலர் பிச்சைக்காரர்களாகவும் இழிவு படுத்தப்பட்டு கஷ்டப்படுவதும் தெரியாதா?

மகமதிய மதம்தன் சமூகத்தை மாத்திரம்தான் காப்பாற்ற வேண்டியது அதற்காகவே மற்ற மத மக்கள் எவ்வளவு இழிவும், கொடுமையும் படுத்தப்பட்டாலும் அதற்கு சம்மதித்து பயன் பெற்றுக் கொள்ளவேண்டியதும் என்றுதான் போதிக்கின்றதா? என்றுகேள்க்கின்றோம். ஆகவே இந்து முஸ்லீம் ஒற்றுமையானது இந்திய சமூக ஏழை-மக்களுக்கு; தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பெருத்த ஆபத்தாகவும் எவ்வகையாலும் வேறு வித சிபார்சோ ஆதரவோ வருவதற்கு இடமில்லாமலும் செய்துவிட்டது. என்பதுதான் நமது முடிவு,

அதுபோலவே பூனா ஒப்பந்தமும் தாழ்த்தப்பட்ட மக்கள் விஷயத்தில் அவர்கள் வெகுகாலமாக கஷ்டப்பட்டு வாதாடி சிறிதுகூட இந்து சமூக உயர் நிலை மக்கள் என்பவர்களின் உதவியே இல்லாமல்—அவர்களது எதிர்ப்பையும் சமாளித்து ஏதோ சிறிது தலை தூக்கிப்பார்க்க அடைந்த நிலையைபெரிய பாராங்கல்லைத்தூக்கித் அதன் தலையில்போட்டுகசகசவென்று நசுங்கும்படி செய்தது போல் நாசமாக்கப்பட்டுவிட்டது. போதாக்குறைக்கு மறுபடியும் என்றென்றைக்கும் தலைதூக்க அவர்களுக்கு ஞாபகமே உண்டாகாதபடி அவர்களுக்கு இடையில் கடவுள் பிரசாரமும் மதப்பிரசாரமும் செய்ய புகுந்தாய்விட்டது.

இது ''குதிரை கீழே தூக்கிப் போட்டதுமல்லாமல் புதைக்க குழியும் தோண்டிற்றும்'' என்ற பழமொழிப்படியே ஆகிவிட்டது. எப்படியெனில் தாழ்த்தப்பட்டவர்கள் அல்லது தீண்டப்படாதவர்கள் என்கின்ற சமூகத்தார் தங்களை உயர்ந்த ஜாதியார் என்பவர்களிடம் இருந்து பிரித்து தங்களுக்குத் தனித்தொகுதிவேண்டும் என்று கேழ்ப்பதற்கு ஏற்பட்ட காரணம்தான் என்ன?

இந்து சமூகத்துள் தாங்கள் கலந்திருந்தால் தாங்கள் விடுதலை அடைந்து மனிதனாக வாழ முடியாதென்றும், அதற்கு காரணம் இந்து சமூக மதக்கொள்கைகள் என்றும் உணர்ந்தே தென்னாடு முதல் வடநாடு பஞ்சாப்வரையில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் தாங்கள் இந்துமதஸ்தர்கள் அல்ல என்று சொல்லிக்கூடத் தங்களுக்கு தனித்தொகுதி கேட்டார்கள். அப்படிப்பட்டவர்களை இந்துக்கள்தான் என்று சொல்லச்செய்து அவர்கள் தனித்தொகுதியையும்கெடுத்து அவர்களுக்கு ஹரி ஜனங்கள் என்று பெயரும் கொடுத்து, அவர்களுக்குள் மதப் பிரசாரம் செய்வது என்பது எப்படிப்பட்ட கொடுமையான காரியமாகும்? என்பதை வாசகர்களே உணர்ந்து கொள்ளவும்.

அவர்களுக்கு ஹரிஜனங்கள் என்று பெயர் சூட்டியதானது அவர்களை எந்த வழியிலாவது தீண்டப்படாதார் அல்லாதவர்கள் என்று குறிப்பிட இடமிருக்கின்றதா என்று பாருங்கள். பறையர் என்றாலும் ஆதிதிராவிடர் என்றாலும் ஹரிஜனங்கள் என்றாலும் இவைகளில் எது உயர்ந்தபெயராகும். இந்தமூன்று பெயர்களையும் நினைக்கும்போதே தீண்டாதவர்களுக்கு இடப்பட்ட பெயர் என்றுதான் புலப்படுகின்றதே தவிர இவற்றுள் அவர்கள் தீண்டப்படாதவர்கள் அல்ல என்பதற்கு என்ன அடையாளம் இருக்கிறது.

ஒரு சமயம் இந்துக்கள் அல்லாதவர்கள், மகமதியர்கள், புத்தர்கள் என்று பெயர் வைத்திருந்தாலாவது மற்றக்காரியங்களில் எப்

படி இருந்தாலும் தீண்டாதவர்கள் என்கின்ற எண்ணம் நேர்ந்ததுவாறு மறைவுபடலாம். அப்படிக்கில்லாததால் இதை "பட்டுக்குஞ்சம்கட்டிய துடைப்பக்கட்டை" என்பதுபோல் ஹரிஜனங்கள் என்றபெயர் இருக்கின்றது என்றுதான் சொல்லவேண்டும். அன்றியும் ஆதிதிராவிடர் என்றபெயராவது தீண்டாதவர்கள் என்பதை மறைக்காவிட்டாலும் இந்த நாட்டின் பழங்குடிமக்கள் என்ற கருத்தையாவது கொண்டிருக்கின்றது என்பதாக எண்ண இடமுண்டு.

ஆனால் இந்த "ஹரிஜனங்கள்" என்பது அவர்களுக்கு தீண்டாதார் என்றபட்டத்தை மறைக்காமல் போவதோடு [ஏனெனில் அந்தப்பெயரானது தீண்டப்படாதாருக்கு தோழர் காந்தியால் வைக்கப்பட்ட பெயர் என்பது தெரியாமல் போகாது] ஹரி என்கின்ற ஒரு கடவுளை பூஜிப்பவர்கள் என்றும் அதற்கு பக்தி செய்யவேண்டியவர்கள் என்றும் ஏற்படவேண்டியதாய் இருக்கின்றது. தோழர் காந்தி ஒருவைணவர் ஆனதாலும் தோழர் ராஜகோபாலாச்சாரியார் ஒரு வைணவர் ஆனதாலும் தங்கள் மதத்தைப்பெருக்க வைணவக்கடவுள் பெயரைக் கொடுக்க வேண்டியதாய்விட்டது.

"சைவரத்தம் ஓடும் சைவர்களான சைவ" தேசியவாதிகள் இதை எப்படிப் பொருத்துக்கொண்டிருக்கின்றார்களோ நமக்கு தெரியவில்லே.

நிற்க:—

தீண்டாமை விலக்கு பிரசாரம் என்பதாக பெயரைவைத்து வடநாட்டு பணக்காரர்களிடமும் மதக்காரர்களிடமும் லக்ஷக்கணக்கான பணத்தை வசூல்செய்து தென்னாட்டில் (திருச்சியில்] தீண்டாமை மகாநாடு கூட்டி. ஒவ்வொரு ஊர்களிலும் கமிட்டிகள் ஏற்படுத்தி அவைகளுக்கு பணத்தை வினியோகித்து பெரியபிரசாரங்கள் செய்ய போவதாய்த்தீர்மானித்திருக்கிறார்கள். இதன் பிரசாரவேலைத்திட்டம் என்ன என்பதை தோழர்களே "தேசியசமதர்மவாதிகளே" சற்று சிந்தித்துப்பாருங்கள். "ஜாதி இந்துக்களிடையேயும் ஹரிஜனங்கள் இடையேயும். "ஹரிகதைகள் பஜனைகள் செய்வது" மேஜிக்லண்டார்ன் படக்காக்ஷிகளுடன் பிரசாரங்கள் செய்வது துண்டுபிரசுரம் வழங்குவது" என்பதாகும்.

(இது 23-11-32 தேதி இந்தியா பத்திரிகையில் 10 வது பக்கம் 2 வது கலத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அன்றியும்இது அகில இந்திய தீண்டாமை விலக்கு சங்கத்தமிழ் நாட்டு ஸ்தாபன காரியதரிசியால் அனுப்பப்பட்ட உத்தியோக தோரணையான அறிக்கையாகும்.)

ஆகவே தேசியத்தின் போக்கு என்ன? தீண்டாமை விலக்கின் இரகசியம் என்ன? ஹரிஜனங்கள் என்ற பட்டத்தின் சூக்ஷி என்ன என்பதை இப்போதாவது சிந்தித்துப்பாருங்கள்.

—

அய்ய நாடார் மறைந்தார்.

தோழர் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் எம். எல். சி. அவர்களது அருமைத் தந்தையார் பட்டிவீரன்பட்டி, பழமையான பிரபல குடும்பஸ்தரும், பெரும் புகழ்பெற்ற வரும் சமூகத்திற்கே நாயகமாய் இருந்து சமூக சமதர்மத்துக்குவெகுகாலமாகவே போராட்டிக் கொண்டிருந்த வருமான தோழர் ஊ பு. அய்யநாடார் அவர்கள் காயலாவாய் இருந்து 18 தேதி இரவு 10 மணிக்கு காலம் சென்றார் என்ற சேதியைக்கேட்டு வருந்துகின்றோம். தோழர் அய்யநாடார் அவர்கள் தென்னாட்டில் சமூக சீர்திருத்த முயற்சிகள் ஏற்படுவதற்கு முன்பும் சுயமரியாதை இயக்கம் தோன்றுவதற்கும் முன்பு இருந்தே சகல சமூகமும் ஒன்றுபடவேண்டும் என்றும், உயர்வு தாழ்வு கூடாதென்றும் போராடி வந்ததுடன் மூடப்பழக்க வழக்கங்களையும், திதி திவசம்போன்ற பார்ப்பன சூழ்ச்சிகளையும் அறவே வெறுத்து பிரசாரம் செய்து வந்தவர்களுமாவர். அதுமாத்திரமல்லாமல் சுயமரியாதை இயக்கத்திற்கும் அதுதோன்றிய காலமுதல் குடும்பத்துடன் சுற்றத்தாருடன் ஒத்துழைத்து அதற்கு அளவு கடந்த ஆதரவு அளித்துவந்தவருமாவார் இப்படிப்பட்ட பெரியார் தனது 60 வயதில் அருமை மனைவியாரையும கண்கள் போன்ற மக்களாகிய தோழர் சௌந்திரபாண்டியன், ரங்கசாமிமற்றும் சகோதரிகளான பெண்மக்களையும் விட்டு மறைந்தது மிக்கபரிதாபகரமான விஷயமாகும்.

அவரது மக்கள யாவரும்இயற்கையை உணர்ந்த மதிவள்ளல்கள் ஆனதால் அன்னியரின் தேறுதலும் ஆறுதலும் தேவை இருக்காது என்றே கருதுகிறோம்.

—

தோழர் இந்திராணி பாலசுப்பிரமணியம்.

பர்மா தேசத்திற்கு சுயமரியாதைப்பிரசாரத்தின் நிமித்தம்சென்றிருந்த தோழர் இந்திராணிபால சுப்பிரமணியம் அம்மாள் அவர்கள் பிரசாரத்தை முடித்துக்கொண்டு பர்மாவிலிருந்து 18-11-32 தேதி சென்னைக்கு திரும்பி வந்து சேர்ந்தார்கள். அங்கு செய்த பிரசங்கங்களும் அவர்களுக்கு நடந்த வரவேற்புகளும் அடுத்தவாரம் வெளிவரும்.

—

மதுரை ஜில்லா சுயமரியாதை மகாநாடு.

மதுரை ஜில்லா சுயமரியாதை மகாநாட்டின் வரவேற்புக்கமிட்டிக் கூட்டம் மதுரையில் இம்மாதம் 4-ந்தேதி மதுரை சுயமரியாதைச் சங்கத்தில் நடைபெற்றது. விபரம் அடுத்த வாரம்வெளிவரும்

—

கோவை ஜில்லா தீண்டாமை விலக்கு சங்கம்.

கோவை ஜில்லாதீண்டாமை விலக்கு சங்கம் என்ற ஸ்தாபனம் ஒன்று அமைக்க வேண்டுவது அவசியமென்றும். அதற்காக 27-11-32 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு, கோவை டிஸ்ட்ரிக்ட் அர்பன் பாங்கு காம்பவுண்டிலுள்ள இன்ஸ்டிடியூட் கட்டிடத்தில் ஒரு மகாநாடு கூடும். எனவே கோவை தோழர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார். எழுதுகிறார்.

—

இருகூர்

திராவிட முன்னேற்ற சங்கம்.

டை சங்கவாராந்திரக் கூட்டமொன்று 20-11-32 மாலை7மணிக்கு சங்கவாசகசாலைக் கட்டிடத்தில், சங்கத் தலைவர் தோழர். என். கருப்பண்ணன் தலைமையில் கூடிற்று. சங்கஅங்கத்தினர்களும், பொது ஜனங்களும், அனேகமாகக் கூடியிருந்தனர். தலைவர் முகவுரையாகப் பேசியபின் அடியில் கண்டதீர்மானங்கள் நிறைவேறின,

சுயமரியாதை இயக்க தோழர் ஈ வெ இராமசாமியவர்கள் மேல்நாடு சுற்றுப்பிரயாணம் செய்து தாய்நாடு திரும்பிவந்ததைப்பாராட்டி அன்னார் கோவைக்கு விஜயம் செய்யும்போது ஒரு வரவேற்பத்திரம் வாசித்துக்கொடுப்பதென்று இச்சங்கம் தீர்மானிக்கிறது என்றும், சுமரியாதை இயக்கத் தோழர்களான, ஆர். கே. ஷண்முகம் அவர்கள் மனைவியாரும், ஊ. பு. அ. சௌந்தரபாண்டியன் தந்தையாரும் மரணமடைந்ததற்கு அநுதாபத் தீர்மானமும் நிறைவேறியபின் கூட்டம் கலைந்தது. ஒருநிருபர்

—

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

ங்களுடன் விசேட வாக்குரிமையோடு அளித்திருந்தார். அதனால் நமக்கு அளவற்ற நன்மைகள் இருக்கக்கூடும். இதனால்உயர் ஜாதி இந்துக்களிடஞ் சென்று எதுவும் எதிர்பார்க்கவேண்டிய அவசியமில்லை. ஆனலித்தகைய முறை உயர் ஜாதி இந்துக்கள் என்று சொல்லிக்கொள்பவர்களின் சூட்சியால் மாற்றப்பட்டு விட்டது. இப்பொழுது நமது தலைவர்கள் என்பவர்கள் ஏமாந்து போய் கையெழுத்திட்ட பூனா ஒப்பந்தத்தில் தாழ்த்தப்பட்டாராகிய நமக்கு 30 ஸ்தானங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்த 30 ஸ்தானங்கள் அளித்திருந்தும் நமக்கு கஷ்டமேயாம். வெளியூர்களில் தாழ்த்தப்பட்டாரில் படிப்பவர்களிருப்பது சிலரேயாம். படித்தவனுக்கே வாக்குரிமையளிப்பது என்ற மனப்பான்மை நம் நாட்டிலிருந்து வருவதால், தாழ்த்தப்பட்டாரில் படித்தவர்களில்லாமையால் அந்த ஸ்தானங்களை ஜாதி ஹிந்துக்களே நுழைந்து கைப்பற்றிக் கொள்வர். ஆகையால் பொதுத்தேர்தலில் வெற்றி யாருக்கு உண்டாகும்? இந்த ஸ்தானங்களில் சுமார் 20 பேருக்கு மேல் ஜாதி ஹிந்துக்களே வருவர். இதனால் தாழ்த்தப்பட்டாருக்கு என்ன நன்மை இருக்கிறது பாருங்கள். பூனா ஒப்பந்தத்தால் வரும் 30 ஸ்தானங்களைக் காட்டிலும், நாங்கள் கோரிய 25 ஸ்தானங்கள் விசேட பயனுடைத்தாகுமென்பது எனது அபிப்பிராயமாகும். முக்கியமாக தாழ்த்தப்பட்டாராகிய உங்களுக்கு அரசியல் உரிமைகள் தற்சமயம் வேண்டுவது இன்றியமையாததாகும். பார்ப்பனரல்லாரியக் கத்தந்தையாரான, பனகால் அரசர், தாழ்த்தப்பட்டாரின் பிரதிநிதிகளெனச் சொல்லிக்கொண்டு ஏனையவர் சட்டசபைகளிலும், ஸ்தலஸ்தாபனங்களிலும் பிரதிகளாக வந்துகொண்டிருந்ததைக் கண்டித்து, அவர்களுக்குள்ளேயே பிரதிநிதிகளாக வரவேண்டுமென வாதாடி அவ்விதியை ஏற்படுத்தினார். அவ்விதி பயன் தந்தது. தாழ்த்தப்பட்டாருக்கு அரசியலாதிக்கம் வந்த பின்னரேசமத்துவம் ஏற்பட்டது. வெறும் தனித்தொகுதி மட்டும் இருந்தால் பயனில்லை. அத்துடன் விசேட வாக்குரிமையுமிருந்தால் தான் பயன்தருமென்பது எமது அபிப்பிராயமாகும். நான் கூறி வந்த கருத்துக்களைப்பற்றி விள

க்கமாகவும், அழுத்தமாகவும் இன்று உங்கள் முன்னிலையில் தோழர் ஈ. வெ. ராமசாமி கூறுவாரென நான் எதிர்பார்க்கின்றேன். இன்று நமக்கு முன்னர் சொற்பொழிவாற்ற விஜயஞ் செய்திருக்கும் ராமசாமியைப்பற்றி நான் ஒன்றும் கூறத்தேவையில்லை அவருடைய சேவையும், தியாகமும் உங்களுக்குத் தெரிந்ததேயாகும். ஆகையால் உங்கள் குறைகளைப்பற்றி பேசும்படியாக அவரைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று பேசினார்.

வரவேற்பு பத்திரங்கள்.

பின்னர் தோழர் ஈ. வெ இராமசாமிக்கு தொண்டர் படையினரால் ஓர் வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. பின்னர் தோல் ஷாப்பு தொழிலாளர் சங்கத்தின் சார்பில் மற்றோர் வரவேற்பு வாசித்துக்கொடுக்கப்பட்டது. இவைகளுக்குப் பதிலளிக்கு முகத்தான்,

தோழர் ஈ. வெ. இராமசாமி.

எழுந்துப் பின்வருமாறு பதிலளித்தார்: தோழர்களே! தலைவரவர்களே! இன்று நீங்கள் எனக்கு அளித்த வரவேற்புப் பத்திரங்களுக்கு எனது நன்றியறிதலைத் தெரிவிப்பதுடன் அவைகளில் அடங்கி இருக்கும் விஷயங்களுக்கு நான் அருகதையற்றவனாக இருப்பினும் உங்கள் ஆசை இன்னது என்பது வெளிப்படுகிறது. அவைகளைப் பொருத்து எனது ஆயுட்காலம்வரை உங்களுக்காக உழைக்கத்தயாராய் இருப்பேனென்பதை முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன். என்றால் கூடுமான அளவில் தாழ்த்தப்பட்டார் என்று சொல்லிக்கொள்கிற உங்களுக்கு உதவி செய்யவும் கடனாற்றவும் இருந்து வந்திருக்கின்றேனென்று திருப்தி கொள்கின்றேன். என்பது தான் எனது பதிலாகும். இன்று நான் பேசவேண்டிய விஷயம் "தாழ்த்தப்பட்டார் விடுதலையும் அரசியல் உரிமையும்" என்பதாகும். இதில் தாழ்த்தப்பட்டார், விடுதலை, அரசியல், உரிமை என நான்கு வகையாகப்பிரிக்கலாம். இந்த நான்கைப்பற்றித்தான் தனித்தனியாக இன்று பேசவேண்டியவனாக உள்ளேன். இவைகளையே முறையே தனித்தனியாக விளக்கிய பிறகே இவ்விஷயத்தைப் பற்றி பேச ஒருவாறு இயலும். முதலில் தாழ்த்தப்பட்டார் என்பவர் யார்? அவர்களுடைய நிலை என்ன? என்பதை எடுத்துக்கொள்வோம்.

தாழ்த்தப்பட்டார் யார்?

தாழ்த்தப்பட்டார் என்பது ஆதிதிராவிடர்கள் என்று சிலர் கருதுகின்றனர். சிலர் பஞ்சமர்கள் என்றும், புலையர்கள் என்றும் இன்னும் இவ்விதமாகக் கருதுகின்றனர். ஆனால் உண்மையில் தாழ்த்தப்பட்டார் யார் என்றால் தங்களுக்கு மேல் உயர்ந்தவர்களில்லை என்று கருதுகிற ஒரு சாரார் தவிர ஒருவருக்கு மேல் ஒருவர் உயர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களத்தனை பேரும் தாழ்த்தப்பட்டவரேயாகும் என்பது எமது அபிப்பிராயம். சிலர் ஒரு சாராருக்கு தாழ்த்தப்பட்டவராகவும் சிலர் இரண்டு பேருக்குத் தாழ்த்தப்பட்டாராகவும் சிலர் மூன்று, நான்கு, ஐந்து முதலிய பேருக்குத் தாழ்த்தப்பட்டவராகவும் இருக்கின்றனர். பார்க்கின்இவர்கள் யாவரும் தாழ்த்தப்பட்டாரேயாகும். இந்தியாவிலுள்ள 33-கோடி மக்களில் 100-க்கு 2 அல்லது மூன்றுபேர் தவிரமற்ற யாவரும் தாழ்த்தப்பட்டாரே தனக்குக்கீழ் ஒருவன் இருக்கின்றான் என்பதும் தனக்கு மேல் ஒருவன் இருக்கின்றானென்பதுமேதான் தாழ்த்தப்பட்டார் என்பதற்கு ஆதாரமாகும். உலகெங்கும் ஆராய்ச்சி, அறிவு, நிறைந்திருக்கின்ற இந்நிலையில் நமது இந்தியாவில் மாத்திரம் பிறவியில் தாழ்த்தப்பட்டார் இருக்கின்றனரென்றால் என் சொல்வது? இதற்கு இத்தாழ்த்தப்பட்டார் என்று சொல்லிக் கொள்ளுமிவர்களுக்கு உணர்ச்சியும், சுயமரியாதையுமில்லாமலிருப்பதுதான் காரணம்? எத்தகைய செல்வவந்தர்களாயும், அதிகாரம்பெற்றவர்களாயுமிருப்பினும் முடிவில் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்தானே. இங்கு தலைமை வகிக்கும் தலைவருக்குச் செல்வமிருக்கிறது, கல்வி இருக்கிறது அதிகாரமிருக்கிறது. அறிவு இருக்கிறது என்ன இருக்கும் அவர் "சூத்திரன்" என்கின்ற முறையில் மற்றவர்களுக்கு தாழ்த்தப்பட்டவர்தானே ஏன்? இவருக்கு செல்வமில்லையா? அறிவில்லையா? அதிகாரமில்லையா? ஜ..ஜாயுமிருந்தாரே யாவுமிருந்தும் இவர் ஏன் தாழ்த்தப்பட்டவராகவே இருத்தல்வேண்டும்? இதைத்தான் நாம் அறிந்துகொள்ள முற்படவேண்டும். நமது தேசத்தில் தாழ்த்தப்பட்டாரிருப்பதற்குக் காரணங்களெவை? எந்த கோட்டையால் இந்த எண்ணம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்தியாவில் பல்லாயிரக்கணக்கான வருடங்களாய் ரிஷிகள், மகாத்மாக்கள், தீர்க்கதரிசிகள், அவதாரபுருடர்கள் பலர் எண்ணிறந்தவர் தோன்றிவந்திருக்கின்றனரே இவர்கள் உலகிற்கோ இந்திய சமூகத்திற்கே, செய்ததென்ன? எனிவர்களால் இது வரை இதைப்போக்க முடியவில்லை. ஆகவே ஒருவன் தாழ்த்தப்பட்டவனாக இருப்பதற்குக் காரணத்தை அறியவேண்டுமானால் அவன் சுயமரியாதை வீரனாக இருக்கவேண்டும். பின்னர் அதைப்போக்க சூரனாக விளங்க வேண்டும். அதுதான் உண்மையான சுயமரியாதையாகும். அப்படிக்கு இல்லாமல "இப்பொழுதென்ன செய்வது? அதில் பிறந்தாய்விட்டதே அடுத்தஜென்மத்திற்பார்த்துக்கொள்வோம்" என்றுகூறினால் அதுதான் முட்டாள்தனம் என்கின்றோம். மற்றும் பகவான் அவனை அப்படி படைத்துவிட்டான் என்று கூறுவதை மேலும் மேலும் முட்டாள்தனம் என்பதோடு அவ்வித உணர்ச்சி தோன்றுவதே கோழைத்தனத்தின் பயன் என்று சொல்லுவேன் இல்லாவிட்டால் இது வெறும் பித்தலாட்டத்தைத்தவிர வேறொன்றுமில்லை என்பேன். இந்துசமூகமெவ்வளவு பரப்புடையது? எவ்வளவு அளவுடையது? இத்தகைய ஒருபெரு சமூகம் வெறும் தேசபக்தி என்று சொல்லிக்கொண்டு மனிதனுடன் மனிதன் பேசப்படாது, பார்க்கப்படாது என்பதற்கு ஆதாரமான மதம். கடவுள், என்பதைப்பற்றி பேசக்கூடாது என்றால் எப்பொழுது இக்கஷ்டம் ஒழியும்

விடுதலை என்றால் என்ன

இனி நாம் விடுதலை என்ற விஷயத்தைப் பற்றி எடுத்துக் கொள்வோம். விடுதலை என்றால் என்ன? அது எவ்வகையில் மக்களுக்கு அனுகூலப்படும் என்பது இங்கு கவனிக்க வேண்டியதாகும். வயிறுக்காக வாழ்வது விடுதலையா? உத்தியோகம் பெறுவது விடுதலையா? மனிதன் சமூக பொருளாதார வாழ்வில் மற்றவனுக்கு தாழ்ந்தவனல்லன் என்ற எண்ணம் உதித்து அது கைகூடிவிட்டால் அதுவேதான் விடுதலையாகும். விடுதலை என்பதற்கு இதுவே தகுந்த பொருளாகும். உங்களுக்கு மேல்--உயர்ந்த ஜாதியார், செல்வந்தன்—அதிகாரி ஆகிய இவர்களிருந்தால் அது ஒருநாளும் விடுதலை என்பதாகாது.

அரசியல் உரிமைகள்.

இன்றைய தினம் அரசியல் உரிமைகள் என்ற விஷயத்தைப்பற்றி எடுத்துக்கொண்டால் மந்திரி முதலிய பதவிகள் பெறுவதும், சம்பளம் பெறுவதும் அரசியல் உரிமை என்று கூறப்படுகிறது. எப்படியாயினும் பதவிகள் அடைந்தோம் என்ற உணர்ச்சி அரசியலாய் இப்போது இருந்து வருகிறது இது அரசியலாகாது. மக்களுக்குள் எவ்வகையிலும் பேதம் இருக்கக்கூடாதமாதிரி சட்டம் செய்து அமுல் நடத்த முடியும்படியான அரசியலே உண்மை அரசியலாகும். அப்படிப்பட்ட அரசியல் இருக்கவேண்டியதவசியம் என்பதைப்பற்றி எனக்கு ஆட்சேபமெதுவுமில்லை. சைமன் கமிஷன் வந்த பொழுது கூட "தேசபக்தர்கள்", அதை "வேண்டாமென்றும்" திரும்பிப் போ என்றும் கத்துகின்றசமயத்தில் நான் ஒருவனே தான் முதல் முதலில் வேண்டும், வேண்டுமென்று கத்தினேன். அவர்களை வரவேற்க வேண்டுமென்றவர்கள் நமது கட்சியேயாகும். ஏனென்றால் அது சமயம் சிலர் சென்று உங்களுடைய நிலைமையை அவர்களுக்கு உலகத்திற்கு தெரியப்படுத்தவே. அந்தப்படியே உங்களில் பலர் சென்று தெரிவித்தனர். அச்சமயம் தான் உங்களுடைய குறைகளைக் கேட்கும் சந்தர்ப்பம் அவர்களுக்கும், உலகத்திற்கும் ஏற்பட்டது உலக அபவாதத்திற்கு பயந்தே சர்க்கார் உங்களிடம் அன்புகாட்ட நேர்ந்தது இதற்குமுன்னர் உங்களுடைய பிரதிநிதிகளெனக் கூறிக்கொண்டவர்கள் எல்லாம் மதத்தின்பேரால் கடவுள் பேரால் பழக்க வழக்கத்தின் பேரால் தங்களை மேல் ஜாதியார் என்று சொல்லிக்கொண்டு திரியும்சுயநலப்பிரதிநிதிகளாகவே இருந்து வந்தார்கள். இவர்களால் என்ன பயனடைந்தீர்கள்? பல எலிகள் கூடிய ஓர் சமூகத்தின் குறைபாடுகளை தீர்க்க ஒரு பூனையை பிரதிநிதியாய் அனுப்பியது போலவே முடிந்து வந்தது. நாம் எவ்வுரிமைகளுக்குப் போராடுகின்றோமோ அவைகளை எற்கனவே அனுபவித்து ஆதிக்கம் பெற்றுக்கொண்டு வாழும் ஓர் சமூகத்தார் இப்போதுஅதை இகழ்கின்றனர், வெறுக்கின்றனர். அவர்கள் அனுபவிக்கும் ஸ்தானத்தை மற்றொருவர் விரும்பியபிறகே அந்தஸ்தானம் இகழப்படுகிறது. தேசத்துரோகமென்று கூறப்படுகிறது. இங்ஙனம் நம்மைத்தேசத்துரோகிகள் என்று கூறுகின்றவர்களைப்பார்த்து நீங்கள் சிலவற்றைக் கேட்கவேண்டும். அதாவது நீங்கள் அனுபவி

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

என்று கேட்டதற்கு அதைப் பற்றி நான் முடிவு செய்யவில்லை. இரண்டு மூன்று மாதத்தில் திரும்பலாம் என்று யோசித்திருக்கிறேன் என்று சொன்னார். எப்படியாவது இந்தியாவுக்கு திரும்பி வருவது தான் கிரமமாகும் என்றும் சொன்னேன். கப்பல் புறப்பட இருந்ததால் என்னிடம் ரூபாய் பெற்றதும் ஆகட்டும் என்று சொல்லிக்கொண்டு அவசரமாய் கப்பலைவிட்டு இறங்கினார்.

ஆகவே கையிலும் பணமிருக்க நானும் கொடுத்து வந்திருக்க இந்தியாவுக்கு வருவதானால் இனியும் பணம் அனுப்பச் செய்கிறேன் என்று சொல்லியும் வந்திருக்க தோழர் ராமநாதனை கையில் ஒரு காசு இல்லாமல் நோயுடன் ஆஸ்பத்திரியில் விட்டு வந்ததும் மார்செல்ஸ் தெருவில் விட்டு வந்ததும் எவ்வளவு தூரம் உண்மையாயிருக்கக் கூடும் என்பதை நாம் விளக்க வேண்டியதில்லை, நேரில் நடந்த வார்த்தைகள் என்பது எப்படி இருந்தாலும் இதில் பிரசுரிக்கப்பட்ட எல்லா கடிதங்களிலிருந்தும் பொது ஜனங்கள் கருதவேண்டிய விஷயம் மூன்றேயாகும்.

1. தோழர் ராமநாதன் அவருடைய இந்திய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள் என்பவை கற்பனை கடிதங்களாக இருக்குமா?

2. அல்லது எனக்கு எழுதப்பட்ட கடிதங்கள் என்பவை கற்பனையாக இருக்குமா?

3. எல்லாக் கடிதங்களும் தோழர் ராமநாதன் அவர்களால் உண்மையாகவே எழுதப்பட்டிருக்குமானால் அவர் நிலைமைதான் என்னமாய் இருக்கக்கூடும் என்பவைகளேயாகும்.

இது விஷயத்தில் எப்படி வேண்டுமானாலும் கருதிக்கொள்ளவோ முடிவு செய்து கொள்ளவோ வாசகர்களுக்கு பூரண சுதந்திரமும் போதிய அனுபவமும் உண்டு என்றே கருதி இதுசமயம் இத்துடன் முடிக்கின்றேன்.

ஈ. வெ. ரா.

த்துவந்த போகங்களை நாங்கள் சிறிது அனுபவிக்கின்றோம். அதன் மூலம் நாமிருவரும் சமத்துவமான 'பின்னர் மேற்கண்ட "தேசத்துரோகத்தை" ஒழிக்க இருவரும் முனைவோம். ஏகாதிபத்தியத்தை அழிப்போம் இப்போதும் நீங்கள் கூறும் தடைகளை, எதிர்ப்புகளை நாங்கள் ஒப்பமாட்டோம். நாங்கள் நீங்களிருந்த இடத்திற்கு வரும்பொழுது தேசத்தின் பேரால், தேசியத்தின் பேரால் எங்களை ஏமாற்றி தடை செய்யாதீர்கள் என்று கூறுதல் வேண்டும். இதுவரை "அரசன் விஷ்ணு அம்சம்" என்று சொல்லிச் சொல்லியே இவர்கள் சகல போகங்களையும் அனுபவித்து வந்தார்கள். நீங்கள் இப்பொழுது அவர்களை காப்பி அடிக்கிறீர்கள் இதை குற்றம் சொல்ல அவர்களுக்கி யோக்கியதை யேது? அவர்கள் எந்த நிலைமையில் உங்களை அடக்கி தாழ்த்தப் பட்டவர்கள் ஆக்குகிறார்களோ அந்நிலைமைக்கு அவர்களைக்கொண்டு வர முயற்சி செய்வது குற்றமாகாது. ஆனால் நான் அப்படி சொல்லவில்லை. மற்றென்னவென்றால் எதிர் காலத்தில்; நாம் இருவரும் அடையப் போகும் அரசியலுரிமையில் நங்களுக்குப் பங்கெப்படி? என்று தான் கேட்கச் சொல்லுகிறேன் இதைச் சொன்னால் தேசதுரோகி என்று வசை மொழி பாடுகின்றனர் "நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்குப்புல் சுமப்பதுதான் கதி!! என்ற பழமொழிக் கேற்பதான் சுயராஜ்யம் வரும். அந்த சுயராஜ்யம் வேண்டாம் அதாவது தோட்டியும், துரையும் இருக்கும் சுயராஜ்யம் நமக்கு வேண்டாம். பல்லக்கு தூக்க ஒருவனும், சுமக்க ஒருவனுமிருக்க வேண்டு மென்பதே இப்பொழுது இவர்களுடைய சுயராஜ்யம் நோக்கமாகும். ஆனால் நாம் கோரும் சுயராஜ்யத்தில் சங்கராச்சாரி யிருக்கமாட்டார் தோட்டியுமிருக்க மாட்டார் யாரும் மனிதர்களே!

தனித்தொகுதியின் விசேடம்.

பல காலம்கஷ்டப்பட்டு நீங்கள் தனித்தொகுதி முறையைப் பெற்றீர்கள். ஆனால்அதுபலசூழ்ச்சிகளால் மாற்றப்பட்டிருக்கிறது. இது உங்களுக்கு ஏற்பட்ட மிக்கக்கஷ்டமான காரியமே யாகும். ஒருகணப்பொழுதில் உங்களுடைய வெகு நாளைய லக்ஷியங்கள் தவிடுபொடி செய்யப்பட்டு விட்டது. தேசியத்தின் பேரால் நீங்கள் ஏமாந்துவிட்டீர்களென்றே கூறுகின்றேன். மற்றவர்களுடைய "மேல்ஜாதியா" ருடையபக்தமிருந்தால் பயன்படாதெனக் கருதியே அவர்கள் நீங்கிய தனித்தொகுதியை கேட்டீர்கள். பெற்றீர்கள். இப்போது அது நசுங்கி நாசமாய் விட்டது தனித்தொகுதியின் பயனாய் எங்கள் ஜில்லாவில் உங்கள் பிரதிநிதியாகத் தோழர் வீரய்யன் தான் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆனால் பூனா ஒப்பந்தத்தின்படி பேர்போன ஓர் வருணாஸ்ரமதருமியின் வீட்டு "தோட்டி" தான்.

ஆலயப்பிரவேசம்

பிரதிநிதியாகவரக்கூடும் இதுமாத்திரமல்லாமல் இப்பொழுது தேவாலயப்பிரவேசம் என்னும் பேரால் உங்களை படுகுழியில்தள்ள ஏற்பாடாகிறது. அதுதான் இந்துமதப் பிரசாரம். உங்களை ஹரிஜனங்கள் என்றழைப்பது ஓர் அர்த்தமற்ற ஏமாற்றுவார்த்தை. நீங்கள் எனக்குக்கோவில்வேண்டாம், மதம் வேண்டாம் என்று சொன்னபிறகேகோவிலிலும் மதத்திலும் சம உரிமை கொடுப்பதாக ஏமாற்றுகிறார்கள். இந்த ஏமாற்றத்தில் விழுந்தீர்களானால் இன்னும் வெகுகாலத்திற்கு உங்களுக்கு விடுதலை இல்லை. அரசியல் சமஉரிமை இல்லை. தைரியமாய் மதத்தையும் கடவுள் பிரசாரத்தையும் உதறித்தள்ளுங்கள் உங்கள் விடுதலையும் சமஉரிமையும்பொருளாதாரத்தில்தான் இருக்கின்றதுபொருளாதாரசுதந்திரம் பெறவழிதேடுங்கள். அதற்கான அரசியல் உரிமை பாருங்கள், எனப் பேசி முடித்தார். பின்னர்,

டி. வி. சுப்பிரமணியம்.

பேசியது;— அன்புள்ள தோழர்களே! நமது தலைவரவர்கள் தாழ்த்தப் பட்டார்நிலையை நன்கு விளக்கி விட்டார். நாமனைவரும் தாழ்த்தப் பட்டாரென நமது தலைவரவர்கள் கூறி இருப்பதுஞாபகமிருக்கலாம், தோழர் சுந்தராவ் அவர்களுட்பட யாவரும் தாழ்த்தப் பட்டவரே என்பதற்கு ஆட்சேபனையில்லை. உயர்ந்தவர்களென்று கருதுகிற ஒரு சாரார் தவிர ஏனையவர் யாவரும் தாழ்த்தப் பட்டாரேயாகும் உங்களுடைய நிலைமையில் நாங்களும் தாழ்த்தப் பட்டார் எனக்கருதினால் நாம் வெற்றி பெற்று விட்டோம். அண்மையில் சின்னாட்களுக்கு முன்னர், அரண்மனைத்தொழிலாளர் கூட்டத்தில் தனித் தொகுதியைப் பற்றி நான் பேசியுள்ளேன் தனித் தொகுதியைக் கண்டிக்கும் முறையில் நான் காந்தியைச் சண்டாளனென்றும் துரோகி என்றும் இழித்துக் கூறியதாக சிலபத்திரிகைகள் எம்மைத் தூற்றி வந்தன. விஷமப்பிரசாரமும் ஆங்காங்கு செய்து வந்தன. ஆயினும் இவைகளின் விஷமச்செயலுக்கு நான் அஞ்சப் போவதில்லை. நான் அங்ஙனம் கூறவில்லை. ஒருவேளையப்படி கூறியிருப்பினுங்கூட அதனால் என்ன முழுகிப் போய்விட்டது சட்டத்தின்மூலமாய் மதம் மூலமாய் கடவுள் செயல் மூலமாய் இந்தியாவில் "7 கோடி சண்டாளர் இருக்கின்றார்கள்" இதைப் பற்றி யாருக்கும் ரோஷமில்லை, மானமில்லை, வெட்கமில்லாமல் அம்மதத்தையும் கடவுளையும் வணங்கும் யோக்கியர்களுக்கு இந்தக்கேள்வி கேட்க யோக்கியதை எது?

அன்றியும் காந்தியார் கூறும் இந்து மத வருணாச்சிரமப்படி அவர் ஒரு "சூத்திரரே யாவர்" இதனால் ஒன்றும் முழுகிப் போகவில்லை.

நாம் பல நாட்களாக தனித்தொகுதியை ஆதரித்து வந்தது ஞாபகமிருக்கலாம். அங்ஙனம் முயற்சி செய்து அடைந்த வகுப்புப் பிரச்சினைத் தீர்ப்பு ஒரு நிமிடத்தில் தோழர் காந்தியின் தந்திரத்தால் அவரது கோஷ்டியாரின் மாயவலைக்குள் சிக்கிய உங்கள் பிரதிநிதிகளால் பாழ்படுத்தப்பட்டுப்போய்விட்டது. ஆயினும் நாம் ஊக்கத்துடன் பாடுபட்டால் இறுதியில் வெற்றி பெறுவோம் என்பது உறுதியாகும்எனப்பேசிமுடித்தபின்னர்

தோழர் அழகிரிசாமி

பேசுகையில் ஹரிஜன சேவாசங்கத்தில் நாம் மயங்கி சேர்ந்துவிடக்கூடாதென்றும், இது நம்மை ஏமாற்றும் விஷயமாக இருக்கிறதென்றும், ஒரு சாரார் பங்கு போட்டுச் சாப்பிடவே இச்சூட்சி செய்யப்படுகிறதென்றும், திருச்சி ஹரிஜன சேவா சங்கத்திற்களித்த 21000 ரூபாயும் இந்து மதப்பிரசாரத்திற்கு பயன் படுமே ஒழிய உங்களுக்கு ஒன்றும் பயன் ஏற்படாதென்றும் பேசி முடித்தார். பின்னர் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

சுயமரியாதை பிரசாரம்.

தூத்துக்குடியைச் சேர்ந்த, முத்து லக்ஷிமிபுரத்திலுள்ள மைதானத்தில் மாலை6.30மணிக்கு தோழர். மிராண்டா அவர்களின் தலைமையில் ஒருசுயமரியாதை பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு சுமார் 500ஜனங்களுக்கு மேல் விஜயம் செய்திருந்தார்கள்.

தோழர். மாறன் அவர்கள்சுயமரியாதை இயக்கத்தின் நோக்கங்களைப் பற்றியும், "கடவுள்" என்பதே வெற்றுரை என்பதாகவும், தெளிவாகப் பேசியபின், குமார் அவர்களும் மிகுந்த ஊக்கத்தோடு வைதீகக் கொடுமைகளைப் பற்றிபேசினார்கள்.

பின் வடக்கூர் சுயமரியாதைசங்கத்தார்கள் தலைவருக்கும், பிரசங்கிகளுக்கும் மாலை சூட்டியபின், வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இரவு8.30மணிக்கு முடிவடைந்தது.

—ஒருநிருபர்.

இனாம்! ரூபாய் 20 இனாம்!

ஒரு கடிகாரடயல் 3 துண்டுகளாக உடைகிறது. ஒவ்வொரு துண்டிலும் உள்ள நம்பர்களைக் கூட்டினால் 26 ஆகும். எப்படி? 18-12-32தேதிக்குள் வந்துசேரும் சரியான விடைகளைக் குலுக்கிப்போட்டு முதலில் எடுக்கப்படும் 10 விடைகளுக்கு முறையே ரூ 6, 4, 3 ம் மீதிக்கு ரூ 1 வீதமும் இனாமளிக்கப்படும். விடையுடன் 2 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

விலாசம்:—

தீ. ராஜா

உறையூர் போஸ்ட், திருச்சி.

ஆத்திக, நாத்திக வாதம்

எது மனித அனுபவத்திற்குப் பொருந்தியுளது?

(முதல் பாகம்)

[தோழர். ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்.,]

சமயவாதிகள் அறிந்து கொள்ளவேண்டியதுயாதெனில், நாஸ்திகம், அதாவது கடவுள், பூதம்பேய், பிசாசு, நரக, மோட்சலோகங்கள் முதலிய மனித எண்ணங்கள், வெறுஞ் சொற்களென்ற வாதம், ஆஸ்திகத்தைப் போல் அதாவது மேற்கூறிய எண்ணங்களுக்குத் தகுந்த பொருள்கள் உண்டென வாதித்தலைப்போல், பழமையான வாதமென அறிதல் வேண்டும். ஆஸ்திகத்தை ஆதியில் மறுத்தவர் கபிலென்று வழங்குவதை ஆஸ்திகருக்கு ஞாபகம் மூட்டுவது அவசியமாகும். வேதங்களில் ஆஸ்திகத்தை ஒருவாறாகக் கண்டித்துள்ளது. வேதாந்திகளும் ஆஸ்திகத்தைக் கண்டிக்கின்றார்கள். வேண்டுமானால், பிரபல வேதாந்தியாகிய, ஈசூர், கணக்கு சச்சிதானந்த பிள்ளை அவர்களின் சர்வமத சித்தாந்த விளக்க வினவிடையைப் பார்க்கலாம். புத்த மதத்தை, நிரீஸ்வர வாதமென்றே, ஆஸ்திகர் கொண்டுள்ளார். சாங்கைய தத்துவமும், நிரீஸ்வர வாதமெனப்படும். இது இந்து ஆஸ்திகர் கொண்டுள்ள அபிப்பிராயம்.

மகமதிய மதத்திலும், சில கூட்டங்கள், சாமான்ய மகமதிய மார்க்கத்தை ஒத்துக்கொள்வதில்லை. சூபிஸ் [Sufis] என்ற கூட்டத்தார், அல்லாவை சாமான்ய மக்கள் கொண்டுள்ள கருத்தைப் போல் கொள்வதில்லை. இவர்களை மகமதிய வேதாந்திகளெனப்படும். மகமதிய மார்க்கத்திலும், அல்லாவைப்பற்றிய கருத்துக்கள் பல வேறாக எண்ணப்படுகிறது.

கிறிஸ்து மார்க்கத்திலும், பலவேறு கிறிஸ்துவர்கள், இருந்துவருகிறார்கள். இயேசுவை சாதாரண மனிதரென்ற கூட்டத்தாரை மற்ற கிறிஸ்துவர்கள், நாஸ்திகரென்றே அழைக்கின்றார்கள்.

இவ்விதமாக் சமவாதிகளுக்குள் பலவித வித்தியாசங்கள் காணப்படுகின்றன. ஈஸ்வரனை பலவிதமாகக் கருதுகின்றனர். அல்லாவையும், அம்மாதிரியே. கிறிஸ்துவ ஏகோவை (Jehova) கற்பனை வார்த்தை என்றே பல கிறிஸ்துவர்கள் கருதுகின்றார்கள்.

பொதுவாக "கடவுள்" என்ற சொல்லை, மதஸ்தர்கள் உபயோகிக்கின்றனர். ஆனால், அச்சொல்லைப் பற்றி ஒருவர் கொண்டுள்ள கருத்துகள் ஒருவருக்கு நாஸ்திகமாகவேயிருக்கின்றது. திருஷ்டாந்தம் வேண்டுமானால், சைவனுடைய சிவன், வைணவனுடைய விஷ்ணுவாகான். மகமதியனுடைய அல்லா, கிறிஸ்துவனுடைய ஏகோவா ஆகான். ஆனால், சிவனையும் விஷ்ணுவையும், அல்லாவையும்,ஏகோவாவையும், "கடவுள்" என்று அழைக்கின்றார்கள். இந்தச் சொல்லுக்குப் பொருள் என்ன?' என்பதுதான் நாஸ்திக வாதம். "கடவுள்" சிவனாக இருந்தால் விஷ்ணுவாக இருக்க முடியாதென்றோ? "கடவுள்" அல்லாவாய் இருந்தால், ஏகோவாக இருக்க முடியாதன்றோ? முடியுமானால் என் மதங்களுக்குள் வித்தியாசமெனக் கேட்கின்றோம்? சமையவாதிகள் கூறும் சிவன், விஷ்ணு, அல்லா, ஏகோவா, இவர்கள் கற்பித்துக்கொண்ட வெறுஞ் சொல்லாயிருக்க வேண்டும், அல்லது இச்சொற்கள் "கடவுள்" என்ற பதத்திற்குப் பொருந்தாதவைகளாயிருக்கவேண்டும். ஆதலின் சிவன், விஷ்ணு, அல்லா, ஏகோவா இல்லை என்று சொல்லவேண்டிவரும், அல்லது "கடவுள்" இல்லை என்று சொல்லவேண்டிவரும். சிவன், விஷ்ணு, அல்லா, ஏகோவா இருந்தால் கடவுள் ஒருவராக இருக்க முடியாதன்றோ? கடவுள், ஒருவராய் இருந்தால் அவர், சிவன், விஷ்ணு, அல்லாவாக இருத்தல் கூடாது. ஆதலால், கடவுள் இருந்தால், சிவன், விஷ்ணு, அல்லா இருக்க முடியாது. சிவன், விஷ்ணு,அல்லா,ஏகோவா,இருப்பின் கடவுள்இருக்க முடியாது. எனவே, ஆஸ்திகரும் ஒருவரை ஒருவர், நாஸ்திகராகவே வாதிக்கவேண்டிவருகிறது.

சைவன், விஷ்ணு இல்லை யென்றாலும், அல்லது, விஷ்ணுவை சைவன் மறுத்தாலும், அவனவன் நாஸ்திகனாகிறான். அதுபோலவே மகமதியன், இந்துக்கடவுளை மறுத்தால், இந்துவுக்கு மகமதியன் நாஸ்திகனாகிறான். ஒரு மதஸ்தனுக்கு, வேறு மதஸ்தன் நாஸ்திகனாகிறான். ஆதலின் 'நாஸ்திகன்' என்பதில்என்னகுறை? என்ன அவமானம்?என்னதாழ்வு? சமையவாதிகள் ஒருவருக்கொருவர் நாஸ்திகராகின்றார்கள். வேதாந்திகளை, மதவாதிகள், பிரஸ்சன்ன புத்தர்கள் அதாவது, நிரீஸ்வர வாதிகளென்றே அழைக்கின்றார்கள். நிரீஸ்வர வாதி என்றால் என்ன? நாஸ்திகவாதியென்றால் என்ன? ஈஸ்வரனை இல்லை என்போனை நாஸ்திகனென்று சொல்லாமல் வேறு என்னவென்று அழைப்பது? ஞாயப்படி 50 கோடி புத்தர்களையும், நாஸ்திகரென்றே அழைக்கவேண்டும். ஏனெனில், கவுதம புத்தர், ஈஸ்வரன் இல்லையென்றே வாதித்து வந்ததாகத்தெரிகிறது. வேதாந்திகளை, சைவர்கள் "தானே கடவுளென்னும் பாவிகள்" என்று பாடியுள்ளார். "பாபிகளென்று" அழைப்பதைவிட, நாஸ்திகன் என்றாலா குறைவாகும்?

(தொடரும்)

[7-ம் பக்கத்தொடர்ச்சி]

களை போல் அடிமைகளாக விலைக்கு வாங்கி வேலை கொள்ளும் கொடிய செயலைத் தவிர்க்க வேண்டும் என்பதாகக் கிளர்ச்சி ஏற்பட்ட போது அதையும் கிறிஸ்துவ சங்கங்கள் மதத்தின் பெயரால் எதிர்த்து நின்றதை நாம் அறியாமலில்லை.

ஒரு கைவிரல்களால் எண்ணக் கூடிய ஒரு சில முக்கிய சங்கங்களைத் தவிர ஏனையவை அத்தனையும், (மக்கள் பொருளாதார சம்பந்தமான துறைகளில் மேலோங்குமாறு வேலை செய்யும் ஒவ்வொரு சங்கத்தையும் மேலோங்காதபடி தடுக்கும் முறையிலேயே வேலைசெய்வதைஇன்றும் காணலாம். கிறிஸ்து மதாசாரியர்தலைவரான [Pope] போப்பு என்பவரது அதிகார தோரணைகொண்ட சமூகநோக்கத்தை [Socialism] நாம்யாவரும் அறிந்தே இருக்கின்றோம்.

(தொடரும்.)

விருதுநகர்.

ஒருமணியளவில் மூன்று திருமணங்கள்.

சென்ற 9—113—2 ந்தேதி 11 மணிக்கு தோழர்களான ந. இலட்சுமண பெருமாள் பி: ஏ. அவர்கட்கும், ஜீவாம்பாளுக்கும்,—பாஷ்யம் அவர்கட்கும், ஜானகியம்மாளுக்கும்,—நாராயணசாமி அவர்கட்கும், இரங்கநாயகியம்மாளுக்கும் சீர் திருத்த முறையில் திருநெல்வேலி இந்து காலேஜ் தலைமை தமிழ் ஆசிரியர் தோழர் பி. கே. அருணசலம் அவர்களின் தலைமையில் ஒருமணி நேரத்திற்குள் நடைபெற்றது. திருமணத்தை ஆதரித்து பலர் பேசியபின் சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு சமபந்தி போஜனத்திற்குப்பின் கூட்டம் கலைந்தது. ஒரு நிருபர்

மதுரை

நாடார் மஹாஜன சங்கம்

ஷை சங்கத்தின் காரியதரிசிகளிலொருவரான தோழர் ஊ. பு. அ. சௌந்திரபாண்டியன் தந்தையார் தோழர் ஊ. பு. அய்யநாடார் அவகள் இராஜப் பிழவையால் 18-11-32ந் தேதி வெள்ளிக்கிழமை மரணமடைந்ததை கேட்டு வருந்துகிறோம். எமது அனுதாபத்தை ஷையார் குடும்பத்தாருக்கு தெரிவுத்துக்கொள்ளுகிறோம் என ஷை சங்கத்தின் காரியதரிசி எழுதுகிறார்

தமிழ் நாட்டு பெற்றோர்களே!

முந்துங்கள்! முந்துங்கள்!!

மெட்ரிக்குலேஷன்

அறிவை

தங்கள் பிள்ளைகள் நேரில் படித்துப் பெற சந்தர்ப்பமில்லாவிடின் தொழில் செய்து கொண்டே தபால் மூலம் ஸ்பெஷல் மெட்ரிக்கோர்ஸ்களை வாசித்து முடிக்கலாம் இஸ்டப்படின் சர்க்கார் கே. சீனியர் பாலாகி காலேஜில் சேரலாம். லோயர், ஹையர் கிரேட் உபாத்திமார்கள், S. S. L. C. தவறியவர்களுக்கு அதிக பிரயோஜனமானது நமது மாணவர்களின் வெற்றி K. சினிவாசகன் (ஹையர் கிரேட்) IV பாரம் படித்தவர்கடந்த கே. சீனியர் பாஸ் செய்து சக்கண்டரியாக மாற்றப்போகிறார் Dr. H. S சுப்பரமணியம் 4 மாதங்களில் படித்து பாசாகி கடைசி 2 வருஷ M. B. B. S. படிக்கிறார். மற்ற விபரத்திற்கு உடன் எழுதவும்.

டைரக்டர்,

அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,

(தலைமை ஆபீஸ்) ஆறுமுகநேரி S. I. R.

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

க்கை ஒன்றே கடவுளின் ஒளிஎன்றும், ஆதலின் மனிதனுகப் பிறந்த ஒவ்வொருவரும் கடவுளின்பால் நம்பிக்கைகொண்டே வாழவேண்டும் என்றும், நமதுபெற்றோருக்கு மதகுருக்களும், மதபோதகர்களும் போதித்தனர். ஆனல்நாமோ "ஒவ்வொருவரும் தமது பகுத்தறிவின் துணைகொண்டே நடந்து கொள்ளவேண்டும். அதுவே மனிதத்தன்மையாகக்கருதப்படும். பகுத்தறிவுக்கொவ்வாத எந்தநம்பிக்கையும் மூடநம்பிக்கையாகத்தான் இருக்கமுடியும். எனவே பகுத்தறிவுக்கு மேலானதோர் உற்ற நற்றுணைவேறென்றும் இல்லவே இல்லை" என்கிறோம்.

மெய், பொய்களையும், நன்மை தீமைகளையும் பகுத்தறிந்து சொல்லும் நியாயாதிபதி பகுத்தறிவேயாகும். எங்கும் பகுத்தறிவுக்கு மக்களிடை இக்காலத்தில் மதிப்பும் செல்வாக்கும் ஏற்பட்டுள்ளது. மக்கள் தாங்கள்கண்டதுங்கேட்டதுமாகிய அனைத்தையும் பகுத்தறிவுஎன்னும் சர்சலேட் "டின்உதவியால் ஆராய்கின்றனர்; இயற்கைக்கு மீறியதாகக்கூறப்படும் தெய்வீகத்தை உதறித்தள்ளுகின்றனர்; அர்த்தமற்ற பூசையாற்சிருஷ்டிக்கப்பட்ட மறுஉலகைமறந்து நாம்அனுபவத்திற் கண்டனுபவிக்கும் உலகசுகத்தில் தம்பங்கை நுகரவிழைகின்றனர். அதனல்தான் படக்காக்ஷிகள், பிரசார சங்கங்கள், விருந்துகள் முதலியஆடம்பர, ஆர்ப்பாட்ட, விளம்பரங்கள் படாடோபமாகச் செய்யப்பட்டு மக்களின் கவர்ச்சியை அவற்றின்பால் ஈர்த்துங்கூட மாதமோவில்களுக்கும் மற்றம்பல மதஸ்தாபனங்களுக்கும் மக்களிடை இருந்த தனிமதிப்பும் செல்வாக்கும் மிகமிகக்குன்றுவிட்டன. கோடிக்கணக்கான மக்கள் மாதாகோவில்களைப் பகிஷ்கரித்துள்ளனர். இவ்வுலகில் பிரான்ஸ் தேசத்தில் 100க்கு 90பகுதிகொண்டமக்கள் மாதாகோவில்களுக்குச் செல்வது இல்லை; மதகுருக்களுக்கும் அவர்களன் ஆதிக்கத்திற்கும் கட்டுப்படுவதுமில்லை. இலண்டன் நகரில் உள்ள 80இலக்ஷம் ஜனத்தொகையில் 70 லக்ஷம்பேர்கள் மாதாகோவில்களை எரெடுத்தும் பார்ப்பதில்லை. மான்செஸ்டர், பர்மிங்ஹாம், லிவர்பூல் முதலிய நாடுகளில் மாதாகோவில்களுக்குச்செல்லாதவர்களின் தொகைமட்டும் மிகப்பெரியலண்டன் நகரத்தின் ஜனத்தொகைக்குச் சமமானதாகும். பொதுவாக இங்கிலாந்தில் மூன்றில் இரண்டுபங்கு மக்களுக்கு மதங்களைப் பற்றியகவலையே கிடையாதென்னலாம். Bishop Gore என்பார் "கடவுளிடத்தில் நம்பிக்கை" (Belief in God) என்னும் தமது புத்தகத்தில்" இங்லாந்தில் கடவுள் உணர்ச்சி அடியோடிறந்து விட்டது "என்றெழுதியுள்ளார் இது ஒருமதப்பாதுகாப்பாளரால் எழுதப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்பெயின், போர்த்துக்கல், மெக்ஸிகோ முதலிய நாடுகள் மதக்கோட்பாடுகளென்னும் மூட நம்பிக்கைகளில் கட்டுப்பட்டு அடிமைப்பட்டிருக்க விரும்பாது அவைகளை எதிர்த்துத் தகர்த்தெரிவதில் பிரான்ஸ் தேசத்தைப் பின்பற்றுகின்றன. ஜெர்மனி, டென்மார்க், நார்வே, ஸ்வீடன், இங்கிலாந்து போன்ற நாடுகளோ! சீர்திருத்தம்பெற்ற, முன்னேறிய கிறிஸ்துமார்க்கமாகிய புரோடாஸ்டண்ட் மதத்தை அழிக்கும் துறையில் அதிதீவிர பங்கெடுத்துக்கொண்டிருக்கின்றன. ஹேரி எமர்ஸன் பாஸ்டிரிக் என்னும் பாதிரியார் [Rev. Harry Emerson Fosdric] "மதக்குருக்களும் கூட தங்கள் மதக்கொள்கைகளுக்கு தற்கால விஞ்ஞான சாஸ்திரம் முற்றும் எதிராயும்முரணாயுமிருப்பினும், மக்களுக்கு தற்கால விஞ்ஞான சாஸ்திர முடிவுகளைப்பற்றியே போதிக்கின்றனர், என்பதோடு அவர்களின் மத நூலாகிய பைபில் [Bible] கண்டனங்களையும் ஒப்புக்கொள்ளுகின்றனர்" எனக் கூறுகின்றார். துருக்கியிலும் ஆப்கானிஸ்தானத்திலும் இஸ்லாமிய மதம் சன்னஞ்சன்னமாக அழிக்கப்பட்டு வருகின்றது. உலகெங்கும் உள்ள அறிஞர்கள் எல்லாம் பொய்யும் புனைந்துரையும் நிறைந்த மதக்கோட்பாடுகளின் புரட்டை வெளிப்படுத்தி மக்களைச்சார்ந்துள மதத்தளைகளைத் தகர்த்தெரிந்து அறிவுச் சுடர் கொளுத்துகின்றனர். கடவுளுக்கு மனிதன் ஆற்றவேண்டிய கடப்பாடுகளை வலியுறுத்தும் மதங்களைவிட மனிதனுக்கு மனிதன் இருக்கவேண்டிய நெருங்கியதொடர்பைப்பற்றி வலியுறுத்தும் கொள்கைகளையே அவர்கள் நாடுகின்றனர். இதன் பயனகவே இன்று புரோடஸ்டண்ட் மத போதகர்களிற் பெரும்பாலோர், பைபில், மனிதன் கற்பனைதான் என்பதை ஒப்புக்கொள்கின்றனர். இம்முறையில், மதமாகிலும், மதநூலாகிலும், மற்றெதுவாகிலும் பகுத்தறிவாலாராய்ந்து கண்ட முடிவின் மீதே ஏற்றுக்கொள்ளவோ, தள்ளவோ வேண்டும் என்னும் கொள்கை உலக மக்களால், மதவாதிகளாலுங்கூட ஒப்புக்கொள்ளபட்டமை காண்க!

ஓ! மத குருக்களே! பன்னூராண்டுகளாகிய மக்களிடையே நீவிர் போதிப்பதென்ன? நீங்கள் சொல்லும் பொருளற்ற விஷயங்களை நாம் ஒப்புக்கொண்டு நம்பாவிடில் நமது ஆத்மா நரகத்தில் சித்திரவதை செய்யப்படும் என்பது தானே. ஆராய்ந்து பார்க்கில் நீவிர் கூறும் நரகமென்பது முழுப்புரட்டு என்பது தெற்றென விளங்கும். இக்கற்பனையால் ஏற்பட்ட கொள்ளையும், கொலையும், இரத்தப்பெருக்கும், அமைதியின்மையும் அளவற்றன; வறுமையும் அடிமைத்தனமும் மக்களிடை குடிகொண்டன. நீங்கள் கூறும் மதக்கோட்பாடுகளுக்குக் கட்டுப்படாதவர்களைக் கடவுள் நரகிலிட்டுத் துன்புறுத்துவார் என்று கூறுகின்றீர்கள். கடவுளைப்பற்றியும், மோக்ஷ நரகத்தைப்பற்றியும் கேவலம் கொசுக்களுக்கும், மூட்டைப்பூச்சிகளுக்கும் எவ்வளவு தெரியுமோ அவ்வளவுதான் மதகுருக்குளெனப் பெருமைபாராட்டி மக்களுலகை பாழ்படுத்தும் உங்களுக்குத்தெரியும் என முரசறைகின்றேன். ஐம்புலனுணர்வாலும், அறிவாலும் அறிய முடியாததென்று நீங்கள் கூறும் கடவுளை நீங்கள் மட்டும் எங்ஙனம் அறிய முடியும் எனக் கேட்கின்றேன். இதை ஏமாற்று, புரட்டு, மோசடி என்று ஏன் சொல்லலாகாது?

அறிவியல் வாதிகளின் ஆராய்ச்சியால் மதக்கோட்பாடுகள் சின்னபின்னமாகத் தகர்த்தெரியப்படுகின்றன என முன்னர் கூறினேம். இதனல் மத குருக்களுக்கு மக்களிடையேயுள்ள செல்வாக்கு குறைந்து நேராக அவர்கள் வயிற்றிலடிக்கிறது. பாவம்! என்ன செய்வார்கள் அம்மதவாதிகள்! மதம் அவர்களுக்கு மூடநம்பிக்கையும், கோழைத்தனத்தையும், அடிமைப் புத்தியையுமே அளித்தது. காரண, காரியங்களை விசாரித்தறியும் நுண்ணறிவு மதவிருளில் மங்கிப்பொலிவிழந்து விட்டது. ஆதலின் நேர்முகமாக மேடைமீது நின்று அறிவியல் வாதிகளின் மத சம்மந்தமான அபிப்பிராயம் தவறெனத்தக்க நியாய வாதத்தாற் பாமரரிடை விளக்கித் தமது கொள்கைக்கு அரண் தேடுவதை விடுத்து, கோழைத்தனத்தால் காலித்தனஞ் செய்து தம்மை எதிர்ப்பவர்களின் மேல் தப்பபிப்பிராயம் கற்பிக்க முற்படுகின்றனர் அக்கோழைகள்! என்னே இம்மதவாதிகளின் மதியீனம்! மதவாதிகளே! உண்மையில் உங்களுக்கு மானமிருந்தால், ரோஷமிருந்தால், வீரமிருந்தால், தன்மதிப்புணர்ச்சியிருந்தால் அல்லது நீங்கள் போற்றிப்புலம்பும் மத நூல்களிலும், சாத்திர புராணங்களிலும் உண்மையுளதென்னும் உறுதியான நம்பிக்கையிருந்தால் பேடித்தனமாய் வைதீக போலீஸ் அதிகாரிகளைக் கூவி அறிவியல் வாதிகளை நாஸ்திகர்கள் அவர்களை இன்னும் பார்த்துக் கொண்டாயிருக்கிறீர்கள் அடக்கியொடுக்கவாருங்கள் என்று வெறும் பயனற்ற வீண் கூச்சலிடாது தைரியமாக ஆண்மையோடு வெளிவாருங்கள்; நுங்கள் கொள்கையை நிலைநாட்டுங்கள். அங்ஙனமின்றி வீணே சந்துகளிலும், பொந்துகளிலும் மண்டை வறளக் கூப்பாடு போடுவதுதான் நுங்கள் மதம் போதிக்கிறதெனில் அதைப்பற்றி அறிஞருலகம் என்ன நினைக்கும் என்பதை யாவது யோசித்துப்பாருங்கள்; பார்த்து ஒரு முடிவுக்கு வாருங்கள்.

நமது தற்கால நாகரீக வளர்ச்சிக்கும், நமது முன்னேற்றத்துக்கும் மதம்தான் காரணமெனச் சிலர் கூறுவர். ஆராயுங்கால் இக்கூற்று ஊற்றுக்குதவா வாதமெனப்பெறப்படும். ஆயிரக்கணக்கான வருடங்களாய் நாட்டில் மதமும், மதவுணர்ச்சியும் பெருகியேயிருந்தன. ஆனல் அக்காலங்களில் மனித வாழ்க்கை மிகவும் கேவல நிலையிலேயே இருந்தது. அறியாமையும், வறுமையும், பகையும், துவேஷமும் மக்களை அளவிடற்கறிய துன்பக்கடலிலாழ்த்தியது; அடிமைகளாய்க் குடில்களில் வாழச் செய்தது. மக்கள் அரசாங்கக் கொடுங்கோன்மையாலும், மதஸ்தாபனக் கொடூரச் சட்டங்களாலும் இடருற்றுத் தவித்தனர்; வழிப்பறியாலும, கொள்ளைக்கூட்டத்தாராலும் சூறையாடப் பெற்றனர். சென்ற சுமார் 150 வருடங்களாகத்தான் மனிதன் வாழ்க்கை சிறிது முற்போக்கடைந்துளது. இனி, ஒருவராலுமறிய முடியாததென்று கூறப்படும்அர்த்தமற்ற கடவுளுக்கும் உழைப்பாளிக்கும் இடையே நிற்கும் தரகர்களாகிய புரோகிதக்கொள்ளைக் கூட்டத்தின் உண்மை வெளிப்படின் ஏழைத்தொழிலாளர் நிலை சீர்பெற்று மேம்பாடெய்துமென்பதில் என்ன தடை? ஆகவே நாகரீகமென்பது அறிவுவளர்ச்சியின் அறுவடைப்பயனுகுமே தவிர மதவளர்ச்சியாற் போதுறுமென்பது பொருந்தாக்கூற்றாகும். இதற்கு உதாரணம் வேண்டுமானல் குற்றவாளிகள் பெரும்பாலும் மதவுணர்ச்சி மிக்கவர்களாயிருப்பதிலிருந்தே உணரலாம். குருட்டுத்தனமாக ஒன்றைப் பின்பற்றுவதில் தவறிவிட்டாலும் பரிகாரம் கூறும் மதவுணர்ச்சியானது எத்தகைய கொடிய குற்றம் செய்தாலும் பரிகாரம் செய்து பாப விமோசனம் அடையலாமென்னும் உள்ளுணர்வு காரணமாக மத பக்தர்களை தகாத, ஒழுக்கங்கேடான துறையில் ஈடுபடச்செய்கிறது. எனவே இக்குறைபாடு அறிவியல் வாதியிடம் காணப்பெறுவதில்லை.

இனிப்புறனடையாகக் கூறுவதென்ன வெனில் மனிதன் முதலில் ஒரு நாகரீகமற்ற காட்டு மிராண்டியாயிருந்தான்; பின்னர் ஒரு நாடோடியாய் வாழ்ந்தான். பின்னர் சிறுகச்சிறுக நாகரீக வளர்ச்சி பெற்று இற்றைய நிலையடைந்தான். தன் அறியாமையாற் பல கடவுள்களையும் பேய், பூத, பைசாசங்களையும் சிருஷ்டி செய்து வணங்கினான். தனக்கு சரியெனத் தோன்றிய சில கொள்கைகளுக்கு மதம் எனப்பெயரிட்டு அதைத்தழுவி நூல்களும் கோட்பாடுகளும் எழுதி வைத்தான். அவற்றைப்பலரும் பின்பற்றச்செய்ய வேண்டி அவைகள் கடவுளால், அவதாரத்தால், தூதரால் செய்யப்பட்டதென மக்களிடையதற்கு செல்வாக்குப் பெற விழைந்தான். பின்னர் காலத்திற் கேற்றவாறு அவற்றுள் சிலவற்றை மாற்றியும் வந்தான். இம்முறையிலேயே இன்றய மனிதன் பழைய மதக்கோட்பாடுகள் தனது அறிவாராய்ச்சிக்கும், அநுபவத்துக்கும் ஒத்துவராதது கண்டு அதன் பிடிப்பினின்றும் விடுதலையடைய முனைகின்றான். ஓ! மத

வாதிகளே! மதக்கிறுக்கர்களே!! இன்னும் எத்தனைகாலத்துக்கு பகுத்தறிவுச் சுடர் பரக்கும் இளங்காளையர்களின் மன எழுச்சியை, உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியும் என நினைக்கிறீர்கள்? உங்கள் காலம் மலையேறி விட்டது. மக்கள் உணர்ச்சியற்றுத் தூங்கினார்கள்; அவர்கள் இடையில் கயிறு திரித்தீர்கள். இன்று துயில்நீத்துவிழிப்படைந்துள்ளார்கள்; இனியும் கயிறு திரிக்க முனைவது பயித்தியக்காரத்தனமல்லவா?

குறிப்பு:—இஃது இந்தியாவில்-இல்லை—இந்தியானாவில் டெல் சிடி (Tell City) என்ற விடத்தில் மத குருக்கள், மதப் பாதிரிமார்கள் முன்னிலையில் மார்ஷல் ஜே காவின் (Marshall J. Gawvin) என்ற ஆங்கிலப் பெரியாரால்ஆற்றிய சொற்பொழிவைத் தழுவி எழுதப்பட்டதாகும். கிறிஸ்து மதம் பிறந்து, வளர்ந்து, செல்வாக்குப் பெற்று, அரசோச்சும் மேல் நாடுகளில் அதன் இன்றைய நிலையும், அதற்கு உள்ள அறிஞர் உலகத்தின் எதிர்ப்பும் ஒருவாறு இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது. ஆனால் நம் நாட்டில் நேற்று இந்துவாயிருந்து இன்று கிறிஸ்துவரான ஒரு சிறு கூட்டம் 'புதுச் சைவத்துக்குப் பூச்சதிகம்' என்கின்றபடி உண்மையுணராது பகுத்தறிவியக்கத்தை யழித்துவிடக்கனவு காண்கின்றது. பகுத்தறிவு என்னும் பரிதியின் முன் மௌட்டீக மத இருள் எம்மாத்திரம்!

கொன்னூர் சமதர்ம சங்கம்.

மேலையம்பதி கொன்னூர் சமதர்ம சங்க மாதாந்தரக் கூட்டம் சென்ற 19-11-32 சனிக்கிழமை இரவு 8 மணிக்கு மேல் தோழர் ஆர். டி. அய்யாக்கண்ணு அவர்கள் தலைமையில் கூடியது. அதுபோது சங்கக்கட்டிட அமைப்பைக் குறித்து ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, தற்போது போதிய பொருளில்லாக் குறைவால் ரூ 70-0-0 செலவில் சொற்ப காலஉபயோகத்திற்குஓலைக் கொட்டகை ஒன்று அமைக்கப்படல் வேண்டுமென்றும், 'இந்திய நாட்டின் ஏழைமக்களின் விடுதலைக்காக மேனாடு சென்று மேன்மையுடன் தம் தாய்நாடு திரும்பிய, தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் சென்னை நகர் வருகையை முன்னிட்டு ஆவலுடன் வரவேற்பு இதழ் அளிக்கபடல் வேண்டுமெனவும், செட்டி நாட்டுக் குமாரராஜா தோழர் எம். ஏ. முத்தையா அவர்கள் சென்னை நகரசபையின் தலைவராக வெற்றி பெற்றதையும், பார்ப்பனரல்லாத கட்சியின் தற்போதைய தலைவரான தோழர் பொப்பிலிராஜா அவர்கள் சென்னை மாகாண முதன் மந்திரியாக வெற்றி பெற்றதையும், தாழ்த்தப்பட்டாருக்கு கோயில் நுழைவு உரிமை கொடுக்க வேண்டு மென்பது பற்றி மாஜி மந்திரி தோழர் டாக்டர் சுப்பராயன் அவர்கள் கொண்டு வந்த தீர்மான மானது சென்னைச் சட்டசபையில் நடுநிலைமையுடன் நிறைவேறியதை முன்னிட்டும் பாராட்டுவதாயும், தோழர் ஆர். கே. ஷண்முகம் பி. ஏ. பி. எல். எம். எல். ஏ. அவர்களின் அருந்துணைவியாரின் பிரிவாற்றாமைக்கு அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது' என்னும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருச்சி மருத்துவர் சங்கம்.

ஷை சங்கத்தின் கூட்டம் 18—11—32ந் தேதி சங்க உப-தலைவர் தோழர் ம. இராஜகோபால் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. "பெண்களுக்குக் கல்வி அவசியம் வேண்டும்" என்னும் பொருள்பற்றி ச. மருதை பல உதாரணங்களுடன் பேசியபின் கிழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியது.

சுயமரியாதை இயக்க வளர்ச்சிக்காக மேல் நாடு சுற்றுப்பிரயாணம் செய்து தாய் நாடு திரும்பிய தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்களைப் பாராட்டியும், அவர் திருச்சிக்கு வரும்போது சங்கத்தின் சார்பாக ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்துக் கொடுப்பதென்றும், புதிதாக நியமிக்கப்பட்ட மூன்று மந்திரிகளைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேறியது.

ஒரு நிருபர்.

பட்டுக்கோட்டை.

பானகலரசர்வாசகசாலையின்வாராந்திரக்கூட்டம் 22-11-32ந்தேதிஇரவு 8 மணிக்கு தோழர் எஸ். அருணாசலம் தலைமையில் கூடியது. தலைவர் முகவுரையில் சங்கத்தின் சட்ட திட்டங்களையும் நிலையையும் சீர் திருத்தி அமைக்க வேண்டும் என்றும், மெம்பர்கள் தக்க முறையில் நடந்து கொள்ள வேண்டு மென்றும் எடுத்துக் கூறி முடித்தார். பின் ஆறு தீர்மானங்கள் நிறைவேறிய பின்பு கூட்டம் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஆதிதிராவிடக் கூட்டம்.

19-11-32ந்தேதி மங்களவாடி சுத்தமல்லி ஆதிதிராவிடகிறிஸ்துவ ஜன உபகாரச்சங்கம் வ. ச. நல்லையா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. சங்கஅங்கத்தினர்கள் யாவரும் வந்திருந்தனர். காரியதரிசியால் வருடாந்திர அறிக்கை வாசிக்கப்பட்டபின ஷை காரியதரிசி தமது ஊர்செல்வதால் ஷையாருக்குபதிலாக தோழர் அலக்ஜாண்டர் அவர்களை காரியதரிசியாகநியமிக்கப்பட்ட பின் கூட்டம் கலைந்தது.

ஒருநிருபர்

கோவிலின் கொடுமை.

(அநுப்பப்பட்டி B. R. சின்னகிருஷ்ணசாமி)

[1] அடிமை வளர்தலும் கோவிலிலே—பகுத்
தறிவையடக்கலும் கோவிலிலே
கடமை மறத்தலும் கோவிலிலே—கருங்
கல்லைவணங்கலும் கோவிலிலே.

[2] சோரம் நிகழ்தலும் கோவிலிலே—ஜப்பான்
சூடம் புகைதலும் கோவிலிலே—பிறர்
தாரம் விரும்பலும் கோவிலிலே—பல
தாசிகளுற்பத்தி கோவிலிலே.

[3] சாதி வளர்த்தலும் கோவிலிலே—பல
சாமி வளர்த்தலும் கோவிலிலே—மக்கள்
நீதி குலைவதும் கோவிலிலே—மக்கள்
நிர்மூடராவதும் கோவிலிலே.

[4] பட்டம் பகற்கொள்ளை கோவிலிலே—நம்
பணம் பறி போவதும் கோவிலிலே
இட்டர் தொடாநிறை கோவிலிலே—தொட்டால்
இறந்துபடும் சாமி கோவிலிலே.

[5] வழக்குகளுற்பத்தி கோவிலிலே—பல
வக்கீல்கள் வாழ்க்கையும் கோவிலிலே
அழுக்கு துர் நாற்றங்கள் கோவிலிலே—மக்கள்
ஆணவம் கற்பதும் கோவிலிலே.

[6] பூசல் புரிதலும் கோவிலிலே—பொய்ப்
புராணம் நிகழ்வதும் கோவிலிலே
ஆசை பிறத்தலும் கோவிலிலே—மக்கள்
ஆவேசம் கொள்வதும் கோவிலிலே.

[7] செந்தமிழ் மாய்வதும் கோவிலிலே—பர
தேசிகளாவதும் கோவிலிலே
சிந்தையிழப்பதும் கோவிலிலே—காமம்
சிறப்புப் பெறுவதும் கோவிலிலே.

[8] பார்ப்பனர் ஆட்சியும் கோவிலிலே—அவர்
பாதகச் செயல்களும் கோவிலிலே
ஏய்ப்பவர் வாழ்வதும் கோவிலிலே—நாம்
ஏமாற்றமடைவதும் கோவிலிலே.

[9] சோம்பல் பழகலும் கோவிலிலே—பார்ப்பான்
தொந்தி பெருத்தலும் கோவிலிலே
தீம்பாலைக் கொட்டலும் கோவிலிலே—நம்
சிறுமை திகழ்வதும் கோவிலிலே.

[10] வடகலை தென்கலை கோவிலிலே—மத
வாதப்போர் நேர்வதும் கோவிலிலே
கடவுள் கல்யாணங்கள் கோவிலிலே—அவர்
காமத்திருவிழா கோவிலிலே.

[11] பேதி வளர்வதும் கோவிலிலே—மதப்
பித்தர்கள் வாழ்வதும் கோவிலிலே
கோது நிகழ்வதும் கோவிலிலே—மக்கள்
குருட்டாட்டம் ஆடலும் கோவிலிலே.

[12] கொலைகள் நடப்பதும் கோவிலிலே—பல
குடிகாரர் வாழ்க்கையும் கோவிலிலே
சிலைக்குத்திருவிழா கோவிலிலே—இந்த
தேசம் பாழானதும் கோவிலிலே.

ராமசாமிக்கு வரவேற்பு.

சென்ற 19—11—32ந்தேதி ஈரோட்டிலிருந்து சென்னைக்குச் சென்ற தோழர்களான ஈ. வெ. ராமசாமி அவர்களும், ஈ. வெ. ரா. நாகம்மாள், சாமி சிதம்பரனார்—சிவகாமி, சு. ப. சுப்பையா—விசாலாட்சி, வி. பார்த்தசாரதிஆகியவர்களுக்கு சேலம் சுயமரியாதைத் தோழர்கள் சேலம் ஜங்சனில் மாலையிட்டு வரவேற்று வண்டி புறப்படும்வரை தோழர் ராமசாமியுடன் இயக்க சம்பந்தமாகப் பேசிக்கொண்டிருந்தார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

(9-ம் பக்கத்தொடர்ச்சி).

சொல்கின்றான் என்றும் பிதற்றுகின்றார்கள். உண்மையில் சாதாரண சைகைகளைக்கொண்டே நமது "எண்ணங்களை"த் தெரிந்து சொல்கின்றார்கள்.

இதன் சம்பந்தமாக தெய்வமாடி, நமது உள்ளத்திலுள்ளவைகளை சொல்லும் வித்தையை கவனிக்கலாம். தெய்வமாடுகின்றவராகிலும் அல்லது (Medium) மாய்கை தூக்கத்திலுள்ளவனும் (Hypnotised Man or Woman) தாறுமாறான கேள்விகளைக் கேட்கின்றார்கள். அந்தக் கேள்விகள் நமக்கு தாறுமாறாகக் காணப்படினும்மாயவாதிக்கு அக்கேள்விகள் அனுகூலமானவைகளே. இந்தக் கேள்விகளைக் கேட்கும்போதே தலையை அசைக்கின்றோம். அந்தக் கேள்விகளுக்கு விடையை நாம் அறியாமலே உளறுகின்றோம், இதனை நுட்பமாக அறிந்துகொண்டுவரும் மாயவாதி, தெய்வ ஆவேசத்தால் தான் நமது உள்ளத்தில் உள்ள கோரிக்கைகளை தெரிந்து சொல்வதுபோல் நடிக்கின்றான். இதுதான் இத்தியாதி தூரதிருஷ்டி சம்பவங்களில் நடந்துவரும்தந்திரம். இதனை அறியாது அம்மன் சொன்னாள், விநாயகர் அருள், தெய்வ ஆவேசம், செத்தவன் ஆன்மா தெரிவித்தது (Mystic or Occult Powers) மறைவான சக்தி, (Abnormal Vision) அபூர்வமான பார்வை, என்று மூட மக்கள் பிதற்றுகின்றார்கள். இவர்களைப் போலவே மதப்பற்றால் சில விஞ்ஞானிகளும் உளறுகின்றார்கள்.

இதன் விஷயமாக இன்னொரு பித்தலாட்டமும் செய்கின்றார்கள். இவர்கள் தங்களை காணவருகின்றவர்களின் விருத்தாந்தங்களை தங்கள் ஆட்களைக்கொண்டு விசாரிக்கின்றார்கள். இதனை தெரிந்துகொண்டு தாங்களே மாய சக்தியால் தெரிந்துகொள்வதுபோல் நடிக்கின்றார்கள். இவர்கள் சொல்வதில் எத்தனையோ பிழைகள் (Mistakes) இருக்கின்றன. ஆனால் நமது அவாவினால், அந்தப்பிழைகளை தள்ளிவிட்டு நமக்குவேண்டிய அனுகூலமான வார்த்தைகளை மாத்திரம் எடுத்துக்கொள்கின்றோம். இந்த மனவழுக்கைக் (Mental Fallacy) கடந்து உள்ளதை உள்ளபடி அறியவேண்டுமென்போருக்கு (Occultists, Sorcerers, Spiritualists, Mediums, Telepathists) செய்யும் தந்திரங்கள் எளிதில் விளங்கும். சென்ற சில மாதங்களுக்கு முன்பு இறந்த, பிரபல மாந்திரீகனாகிய அவுடினி (Houdini) என்போன் செய்த மாய வித்தைகளில் சிலதை இன்னும் அறியக்கூடவில்லை என்றால் சாமான்ய மக்களும், மதப்பற்றுடையவர்களும் மாயவித்தைகளில் நம்பிக்கைவைப்பது ஆச்சரியமோ? இந்த மாயவித்தைகளில் கூடியுள்ள சம்பவங்கள் சில சென்னை அடையாரிலுள்ள பிரம்மஞான கூட்டத்தில் (Theosophical Society) நடந்து வந்ததை நமது தோழர்பலர் அறிவார்கள். இவைகள் எல்லாம் மோசமென்று சில வருஷங்களுக்கு முன் விளம்பரப்படுத்தப்பட்டிருப்பதை (Fraud of Theosophy by Maskelyne, Isis, very much unveiled by Garret என்ற சிறு புத்தகங்களை வாசித்தறியலாம்.

2. புதையலை கண்டுபிடித்தல் புதைந்து கிடக்கும் திரவியங்களை ஞானக்கண்ணால் கண்டுபிடிப்பதென்ற பித்தலாட்டத்தை நம்பி அனேகர் மோசம் போய் இருக்கின்றார்கள். இன்னும் அந்த நம்பிக்கை பலபேருக்குண்டு. இது மனிதனுடைய பேராசையால் இந்த நம்பிக்கையுண்டாகின்றது. நமக்கு எல்லோருக்கும், கஷ்டப்படாமலே செல்வம் தானாகவரவேண்டுமென்ற ஆசையுண்டு. இந்த ஆசையால் எங்கேயாவது திரவியம் அகப்படுமா என்ற அவா மேன்மேலும் உறுத்த இதனைக்கண்டு பிடிப்போர் (Water Diviner) என்ற பித்தலாட்டக்காரர்வசமாகின்றனர். இந்த அவாவை திருப்தி செய்யும் மோசக்காரர்கள் எங்கும் இருக்கின்றார்கள். இரண்டொரு இடங்களில் புதைந்த திரவியத்தை தேடப்போய் சில குடும்பங்கள் அழிந்தது தெரியும். இதோடு போவதில்லை, சில மந்திரக்காரர்கள் பேச்சைக்கேட்டு திரவியத்தை காக்கும் பூதத்திற்கு நரபலி கொடுத்தோர் தூக்கிடப்பட்டார்கள், புதைந்து கிடக்கும் பணத்தை எடுக்கப்போய் தூக்கிலிடப்படவேண்டியதாயிற்று. இது என்ன மூடத்தனமென்று எண்ணுகின்றீர்கள்? இந்த மூட நம்பிக்கையைவிட அதிகமான மூடத்தனம் என்ன இருக்கின்றது? இந்த பித்தலாட்டத்தை நம்பும்படி மந்திரக்காரர் செய்யும் மோசம் ஒன்றுண்டு. அதாவது இந்த பித்தலாட்டத்தை செய்வதற்கு முன்பே சில பழைய சவரன்களை வேண்டிய இடத்தில் புதைத்து விடுகின்றார்கள் இதனைத்தெரியாத பேழைகள் குறித்த இடத்தில் தோண்டிப்பார்த்து சில பழைய சவரன்கள் அகப்பட்ட நிமித்தம், மந்திரக்காரன் சொல்லை நம்பி, இன்னும் அதிக பணம் கிடைக்கு மென்ற அவாவால் மேல்மேலும் பணத்தை செலவுசெய்து நஷ்டமடைகின்றார்கள். மந்திரக்காரனுடைய தோழர்கள் அக்கம் பக்கத்தில் தாங்களே புதைத்து வைத்த பணத்தைக் கண்டுபிடித்த சம்பவத்தை அக்கம் பக்கங்களில் விளம்பரம் செய்கின்றார்கள், அதனால், இவர்கள் மேல்பல இடங்களில் நம்பிக்கை உண்டாக்கிக் கொள்கின்றார்கள். இத்தியாதி சூட்சிகளால் இந்த மோசம் எங்கும் பரவுகிறது. புதையலைக் கண்டு பிடிக்கும்வித்தை இதுவே. இதுவோர் பெருத்த மோசமென்பதற்கு தடையில்லை. ஞானக்கண்ணால் தெரிந்து சொல்வதென்பதும் சுத்தப் பொய் யென அறிக.

சில இடங்களில் புதைத்து வைத்த திரவியம் அகப்படுவது வாஸ்தவம் யாரோ சிலர் பண்டைக்காலத்தில் புதைத்து வைத்த சவரன் வீடு கட்ட கடக்காலுக்கு தோண்டும் போதும், கிணறு வெட்டும்போதும், தற்செயலாக (Accidentally) அகப்படுவது ஏகதேசம் இதனைக் கண்ட சிலர், தங்கள் அவாவினால், தங்களுக்கும் அகப்படாதாவென்ற கோரிக்கையிருந்து பரவும் அந்த அவாவை திருப்தி செய்ய, மோசவேசக்காரர் எங்கும் கிளம்புகிறார்கள் இந்த புதைக்கப்பட்ட திரவியங்களை பூதம் (Demons) காக்கின்றனவாம்! அவைகளுக்கு நரபலி கொடுக்க வேண்டுமாம்!! இத்தியாதி மோசக் கதைகளைக்கட்டி, ஏழைகளை ஏமாத்துகின்றார்கள், இவ்வித அறியாமை நமது நாட்டை விட்டு ஒழியுங்காலம் எக்காலமோ!

3. (Water Divining) தண்ணீர் கண்டுபிடித்தல் என்ற ஓர் வித்தையுண்டு. அதாவது கண்ணுக்கு புலப்படாத தண்ணீர் பாங்கை கண்டு பிடித்தல் எனப்படும் இந்த வித்தையில், இரண்டு விதமுண்டு. அவையாவன விஞ்ஞான முறையொன்று, போலி ஞான முறை மற்றொன்று.

விஞ்ஞான முறையில் அநேக இடங்களில் தண்ணீர் வளத்தைக்கண்டு பிடிக்கலாம். அம்முறையாவன, அக்கம் பக்கத்திலுள்ள நீர் வளப்பத்தை கொண்டும், கிணர் நீர்: ஊத்து நீர், மலை சுனை, அருகாமையிலுள்ள ஆற்று ஜலம் அதன் மணல் முதலிய வசதிகளைக் கொண்டும் அடி ஜலத்தை நிர்ணயம் செய்தலாகும். பள்ளம் வெட்டி, நீரோட்டைத்தைப் பார்த்தும்: அடி நீரை கண்டு பிடிக்கலாம். தோண்டத் தோண்டவரும் மணல், கல், உப்பு,முதலிய படைகளாலும் (Strata or Layer) நீர் வளப்பம் தெரியும். இது பண்டைக்கால மெஞ்ஞான முறை. தற்காலத்தில், மேற் சொன்ன அனுமான ஞானத்தால் (Inference) அல்லாமல், பிரத்தியட்சமாகவே அடியிலிருக்கும் ஜலத்தை கண்டு பிடிக்கலாம். அதாவது, (Boring) அதாவது குழாய்களைக்கொண்டு பூமியுட் தொளை செய்து அடி நீரை கண்டு பிடித்தல். 500, 1000 அடி ஆழத்தில் கூட துளை செய்து அங்கிருக்கும் நீர்ப்பாங்கை மேலே கொண்டு வந்து நேரே பார்க்கலாம். இவை தான் மெஞ்ஞான முறை எனப்படும்.

ஆனால் போலி ஞான முறை என்னவெனில் (Water Diviner) தண்ணீரைக்கண்டு பிடிப்பவன் என்ற ஒருவனால் கண்டு பிடிக்கும் நீர்வளப்பமாகும். இதன் விபரம் என்னவெனில் ஒருவன் ஒரு கொம்பை அல்லது கழியை கையிலேந்தி செல்லுங்காலை (Divining Rod) எந்தவிடத்தில் அவனுக்கு தண்ணீர் சைகை உண்டாகின்றனதோ அங்கே தோண்டி பார்க்கின்றான். அந்த இடத்தில் நீர் வளப்பம் தோன்றுவதாக சொல்லுகின்றார்கள. ஆனால், இந்த வித்தையை சோதனை செய்தவர்கள் தண்ணீர் கண்டு பிடிப்போன் காட்டுமிடங்களில் எல்லாம் நல்ல ஜலவசதி கிடைக்கவில்லையாம். இது அதிலுள்ள ஒரு விதபிழையாகும் (Error) இரண்டாவது பிசகு என்னவெனில், இந்த வித்தையில் அநேக தோல்விகளும் உளவாம். (Failures) மூன்றாவது என்னவெனில், பத்து இடத்தில் ஜலம் இருப்பதாகக்காட்டி 8, 9 இடங்களில் தவறிப்போமாகில், சொன்ன இரண்டொரு இடங்களில் தண்ணீர் கண்டது (mere accident) வெறும் தற்செயலாய் இருக்கலாம் என்று சொல்லவேண்டும், நான்காவது, எவ்விதமாக எந்தத்தூண்டுதல் மேல் எக்காரணத்தைக்கொண்டு ஜலத்தைக்கண்டு பிடிப்போன் (Water Diviner) குறித்த இடத்தில் ஜலம் உளதாக சொல்லுகின்றான் என்பது அவனுக்கே தெரியவில்லையாம்! இத்தியாதி குறைகள் அடங்கி உள்ளது இந்த போலிஞானம்.

சில வருஷங்களுக்கு முன் சர்க்கார் சிற்ப சாஸ்திரியாகிய (Government Architect) சிசாசம் என்ற ஒருவர் தண்ணீர் வசதிகளை கண்டுபிடிக்கும் வல்லமை பொருந்தியுளதாக வதந்தி. ஆனால் அவருடைய மாய சக்தியை சர்க்கார் பொருள்படுத்தாமல், சாதாரணமாக குழாயைக்கொண்டு பூமிக்குள் நுழையவைத்து அதனால் நீர் வளப்பத்தை கண்டுபிடிக்கும் முறையைத்தான் கையாளுகின்றார்கள்.

இந்த மாயவித்தைக்காரர் மரத்தின் கிளையை கையிலேந்தி நிலத்தின்மேல் நடக்கும்போது அந்தக் கிளை மூலமாக தண்ணீர் இருப்பதாக தெரிகிறது என்றதோர் கதையை கட்டிவிடுகின்றார்கள். மரக்கிளைக்கு மாயசக்தி (Occult Power) எப்படி வந்ததோ, அது விளங்கவில்லை. இன்னுஞ்சிலருக்கு நடந்துபோகையில் தண்ணீர் அகப்படும் இடம் ஏதோ ஓர் உணர்ச்சியால் தெரிகிறது என்றும் சொல்லுகின்றார்கள். அது என்ன உணர்ச்சி என்பதும் விளங்கவில்லை. இவ்விதமாக எங்கேயோ ஓர் இடத்தில் ஜலவசதி கண்டுபிடிப்போர் (Water Diviner) ஜலப்பாங்கை கண்டுபிடித்துவிட்டால் இத்தியாதி பொருத்தமில்லாததும் ஒன்றுக்கொன்று மாறானதும், தெரியக்கூடாததுமானதும் பரீட்சைக்கு

இடங்கொடுக்காததுமான காரணங்களைக்குறிக்கின்றார்கள். இந்த வித்தையில் எல்லாம் மாயமாகவே இருக்கின்றது.

4. (Crystal Gazing) அதாவது மை போட்டு பார்த்தல் என்பதும், ஓர் மாய வித்தை நமது நாட்டிலும் வழங்கி வருகின்றது. ஸ்படிகக்கல்லேயாகிலும், கண்ணாடியாகிலும, வெற்றிலையில் மையைத் தடவியாகிலும், அதனை கூர்ந்துபார்த்தால் திருடின திருடனையும், புதைத்த பொருளையும், செத்தவர்களையும் இன்னுங் காணாத பொருள்களையும், காணலாமென்பது ஓர்கதை. இவ்வளவு எளிதில் திருடனைக்கண்டு பிடிப்பதென்றால் துப்பறியும் சேவகர் (Detectives) வேண்டியதில்லை. என்று தோன்றுகிறது! நான் சிறுவனாக இருக்கும்போது என் பெரிய தகப்பனார் வீட்டில் மை போட்டுப் பார்த்தார்கள். வெற்றிலையில் மையை இட்டு அதில் உற்று நோக்கச் சொன்னார்கள். அதில் பார்த்தபோது எனது கண்ணுக்கு ஒன்றும் தோன்றவில்லை. ஆனால் மற்றவர்கள் பார்த்து, இதோ ராமர்வந்தார்! அதோ லட்சுமணர் வந்தார்! அதோ அனுமார் வந்தார்! என்று கூச்சலிட்டனர். இது அந்தக்காலத்தில் நமக்கு விளங்கவில்லை. ஆனால், அதை தற்காலம் மெஞ்ஞான வாயிலாக நோக்குமிடத்து இதுவோர் (Selfhypnotisms) என்று தோன்றுகின்றது. நினைத்ததை இரவில் கனவாக காண்பதுபோல் பகலில் கோரியதை இந்த (Selfhypnotism) என்ற பகற்கனவில் காண்பது சகஜம். வேதாந்திகள், மூக்கின் முனையை உற்றுப் பார்க்கும் பழக்கத்தை கற்றுக்கொடுக்கின்றார்கள். அதுவும் ஓர் [Selfhypnotism] உண்டாகும் பழக்கமே. பகற்கனவில், நாம் கோரும் பொருள்கள் தோன்றும் இதை [Hallucination) என்பார்கள். பழுதையில் பாம்பை பார்ப்பதும் (Hallucination) அதாவது பகற்கனவே. அதுபோலவே, மையில் ராம, லட்சுமண, சீதா, அனுமானை பார்ப்பதும் (Hallucination) இந்த தோற்றங்கள் கண்கள் அயர்ந்த காலையில் உண்டாகின்றன. கிறிஸ்துவ பக்தர் [Christian Saints) ஏசுவை பார்க்கின்றேன் தேவதைகளுடன் (Angels) பேசுகின்றேன் என்று சொல்வதல்லாம் இந்த [Hallucination) அதாவது பகற்கனவேயாகும். மகமது நபி, ஓசை கேட்டதாக சொல்வதும், இந்தபகற்கனவே. நரம்பு வியாதியால் பிடிக்கப்பட்டவர்களுக்கு இவ்வித தோற்றங்கள் காண்பது சகஜமே. கண்களை மூக்கின் முனையில் நோக்கும்படி செய்தால், பலவித தோற்றங்கள் தோன்றும். அந்த தோற்றங்களை நமது இச்சைக்குத்தக்கவாறு அர்த்தப்படுத்திக்கொண்டு விநாயகர் வந்தார், காளி அம்மன் வந்தாள், அனுமான் தோன்றிற்று, பிரமத்தைக்கண்டேன் என்று பிதற்றுகின்றார்கள். இந்த பிதற்றல்களுக்கும் ஜன்னிகண்டு பிதற்றுவதற்கும் வித்தியாசம் அதிகமில்லை. ஆனால் ஒன்று நாமாவரவழைத்துக் கொண்ட பிதற்றல். மற்றொன்று நம்மை மறந்து பிதற்றும் பிதற்றல் இதுதான் இவ்விரண்டு சம்பவங்களுக்குமுள்ள வித்தியாசம்.

வேதாந்திகள் ஞானயோகத்தில் உந்திகமலம் விரிந்து குண்டலனி என்று வழங்கும் அவையவம் மலரும் என்று சொல்லுவதுண்டு. அந்த வேளையில், ஜீவான்மா பரமான்மாவுடன் கலக்கும் என்ற பிதற்றலும் [Nervous tension) அதாவது நரம்பு சோர்வை உண்டாக்கிக்கொண்ட நிலையை பிரமத்தோடு ஐக்கியமென்று பிதற்றுவதேயாகும்.

சைவ வைணவ பக்தர்கள் உருக்கத்துடன் தங்கள் கடவுளை தியானிக்கும்போது பரமசிவனையோ, பார்வதி சமேதராய், அல்லது மகாவிஷ்ணுவையோ லட்சுமி சமேதராய் தரிசிக்கின்றேன் என்று சொல்வதும் இந்த பகற்கனவால் சொல்லும் சொற்களேயாம்.. படங்களில் மகாவிஷ்ணு லட்சுமி சமேதராய் கருடவாகனாரூடராய் வரைந்துள்ளதை பார்க்கின்றோம். இதனையே நினைக்குங்காலை அதே மாதிரி பக்தர் கண்களுக்குத்தோன்றுகின்றது. இதைத்தான் பக்தர்கள் காணும் அருள் தோற்றமென்பார். சைவ புராணங்களில் கூறியுள்ள அருள் தோற்றங்கள் பகற்கனவுகளில் சேர்ந்தவைகளே. பக்தர் கண்களுக்குத் தோன்றும் கடவுள் பிரசன்னங்கள் யாவும் கட்டையை கல்லாலென்று பாவிக்கும் மனப்பான்மையால் உண்டான காட்சிகள் என அறிக. இவ்வித காட்சிகளை (Illusions] என்றும் [Hallucination] என்றும், [Day dream] பகற்கனவென்றும் மெஞ்ஞானிகள் கூறுவர்.

மையில் தோன்றும் தோற்றங்களும், பகற்கனவென்றே எண்ண வேண்டும். உண்மையாகவே இதில் தோன்றும் தோற்றங்களை மாய்கை அல்லது (Illusion] என்று கூறலாம். கண் மயக்கத்தால் காணும் காட்சிகளைக்கொண்டு உலக வாழ்வை நடத்துவதாகக்கூறுவது உன்மத்தர்களுக்கு அடுக்குமே அல்லாது விவேகிகளுக்குப் பொருந்தா.

இவ்வித மாயவித்தை இன்னும் அனந்தமுண்டு. செத்தவர்களைக் கண்டு பேசுதல், பேய் பிசாசுகளைக் காணல், மகாத்மாக்களைத்தரிசித்தல், முதலிய மாய்கைச் சொற்களெல்லாம்(Hallucinatory Expressions) மாயவித்தைக்காரர்கள் [Spiritualists) கூறும் கதைகள் இவைகளை விசாரிக்கப் புகுந்தால் கடையில் நமது மூதாதைகளாகிய காட்டுமிராண்டிகள் கண்ட பகற்கனவுகளை நாமும் பண்டைக்கால பழக்க வாசனையால் இன்றைக்கும் காண்கின்றோம். ஆனால் விஞ்ஞான வித்தையால் நாம் இருளைக்கண்டு பயப்படுவதை விட்டு விட்டோம். இடியைக்கேட்டு பயப்படுவதை விட்டுவிட்டோம். புயல் காற்று மழைகளைக்கண்டு பயப்படுவதை விட்டுவிட்டோம். கிரகணத்தைக்கண்டு பயப்படுவதை விட்டு விட்டோம். இன்னும் நமக்குள் விஞ்ஞானம் (Science) பரவப்பரவ மாய வித்தைகளில் வைத்துள்ள பொய் நம்பிக்கைகளை விட்டு விடுவது திண்ணம். ஆதலின் மூடநம்பிக்கையிலிருந்து நமது இந்திய உலகை மீட்கும் பொறுப்பு நமது சுயமரியாதைத் தோழர்கள் மேல் தான் தூங்கியுள்ளதென அறிக.

வண்ணாரப் பேட்டை.

குமாரசாமி செட்டியார் இலவச வாசக சாலே.

மேற்படி வாசகசாலையின் சார்பாக 5-11-32 சனிக்கிழமையன்று தோழர் ஜி. பி. தாஸ் அவர்கள் தலைமையின் கீழ் ஓர் பொதுக்கூட்டம் கூடியது. அக்கூட்டத்தில் தோழர் பொப்லி அரசர் அவர்கள் மந்திரியாக நியமனம் செய்ததைப் பற்றியும், தோழர் எம். ஏ. முத்தையா செட்டியார், சென்னை நகரபரிபாலன சபைக்குத் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டதைப்பற்றியும் மேற்படி வாசக சாலையின் சார்பாக மனமார்ந்த வந்தனத்தை செலுத்தி இருவருக்கும் வாழ்த்துப் பத்திரம் அனுப்ப தீர்மானிக்கப்பட்டது. பின்னர் கூட்டம் 9-30 மணிக்கு இனிது கலைந்தது.

(ஒரு நிருபர்)

கோட்டாறு.

சுயமரியாதை வாசிப்புச்சாலே.

இந்நகர் மேற்படி வாசிப்புச் சாலையின் மாதாந்தரகூட்டம் சென்ற வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு சங்கக்கட்டிடத்தில் இடலாக்குடி தோழர் வி. சுப்பையா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் நாகர்கோவில் தோழர். எஸ். கிருஷ்ணன் அவர்கள் பொது உடமை என்பது பற்றி ஓர் பிரசங்கம் செய்தார். அதை ஆதரித்து தோழர்கள் கே. இராமய்யா (திராவிடன் ஏஜண்டு) எஸ். பூதலிங்கம், இ. ராமசாமி, ஆ. இ. பெருமாள் முதலியவர்கள் பேசினார்கள். பின் தலைவர் முடிவுரையுடனும் காரியதரிசியின் நன்றி கூறலுடனும் கூட்டம் 12-30 மணிக்கு முடிவுற்றது. என ஒரு நிருபர் எழுதுகிறார்.

தோழர் மாரிமுத்து—சாரதாம்பாளுக்கு விருந்து.

சென்ற 18—11—32-ந் தேதியன்று சீர்திருத்த விதவை மணம் செய்துகொண்ட தோழர்களான மாரிமுத்து—சாரதாம்பாளுக்கு சங்ககிரி ஆர். பெருமாள் அவர்கள் சென்ற 20—11—32-ந் தேதி சங்ககிரியிலும், 21—11—32-ந் தேதி திருச்செங்கோடு எஸ். சி. ஆர். சாமி அவர்கள் திருச்செங்கோட்டிலும் விருந்து நடத்தினார்கள். அவ்விருந்திற்கு உள்ளூர் பிரபலஸ்தர்களும், பல அன்பர்களும் விஜயம் செய்திருந்தார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

டாக்டர் சிங்காரம் அவர்களின்

கெந்தக நெய்.

இம்மருந்தால் குணமாகும் நோய்கள்.

செம்மேகம், கருமேகம், மேக ஊரல், தடிப்புடன் கூடிய மேகப்படைகள், கண்டமாலை, விப்புருதி கட்டிகள், வலி குன்மம், கிரந்தி, குஷ்டம், லிங்கப்புற்று, சூலை கணுச்சூலை, பாரிச வாய்வு, முடக்கு வாய்வு, சாமத்தில் ஸ்பரிச உணர்ச்சியில்லாதிருத்தல், கை கால் பிடிப்பு, மதமதப்பு, திமிர் வாய்வு, புண், புரைகள் ஆராத ரணங்கள், நரம்பு பிடிப்பு முதலிய பலவித கடின நோய்களை குணம் செய்யும். இரத்தத்திலுள்ள எவ்வித துர் நீரையும் போக்கி சரீரத்திற்கு நல்ல தேஜஸைக் கொடுக்கும். பத்தியமில்லை.

60 வேளை மருந்து விலை ரு. 10—0—0.
20 ,, ,, 4—0—0.

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம்.

மலாய்நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும்.

முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்கு கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அன் கோ.,

சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம் ...	0—8—0
2.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
4.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
5.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
6.	சுயமரியாதை தத்துவ கீதங்கள் ...	0—4—0
7.	சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ...	2—0—C
8.	மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ...	2—0—0
	சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0
	சாமிகளின் அடிமைகள் ...	0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0

ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

ஹிமகிரி தைலம்.

ஸ்நானத்திற்கு ஏற்றது.

உடம்பையும், கண்களையும், மூளையையும் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் குளிர்ச்சி செய்கிறது. சுறுசுறுப்பை உண்டாக்குகிறது. தலைவலிக்கு சிறந்த மருந்து அபிப்பிராயம்:- ஆர். எஸ், முட்டண்ணு பி. இ. எலக்டிரிக்பவர் ஹவுஸ் உதகமண்டலம். கடந்த ஆறுமாத காலமாக தங்கள் தைலத்தை நான் உபயோகிக்கிறேன் எல்லாத்தைலங்களைவிட தங்கள் தைலம் சிறந்து விளங்குவதோடு குளிர்ச்சியையும் உற்சாகத்தையும் தரத்தக்கதாயிருக்கிறது. உள்நாட்டு மூலிகைகளைக் கொண்டு செய்யப்பட்ட விலை சகாயமான தைலம் இதுவே. நல்ல பலந்தரக் கூடியதாயிருக்கிறது. பொது ஜனங்களுக்கு இதை சிபார்சு செய்கிறேன்.

விலை 1—0—0, 0—8—0.

ரத்னமிஸ்ரி ஹல்வா.

மூளையையும், உடலையும், பலப்படுத்துவது.

பலவீனம், ஜீரணக்குறைவு, சோம்பல், இந்திரிய ஸ்கலிதம் முதலியவற்றை நீக்கவல்லது. தாதுவிர்த்திக்கேற்றது. விலை 2—8—0, 1—1—0.

நற்சாட்சி பத்திரங்களும், தங்கமெடல்களும் பரிசுபெற்றது.

கிடைக்குமிடம்:—

எம். பெருமாள் நாயுடு, மளிகை ஈரோடு,

மெடிகல் எம்போரியம், ஈரோடு.

சோல் ஏஜண்ட், அனந்தகிருஷ்ண பிளவர் மில்ஸ், பெங்களூர்சிட்டி.

2-8-0 ரூபாய்க்கு 3 கடியாரங்களும் 390 சாமான்களும் இனும்.



வாசனையிற் சிறந்தது ஒட்டோ மோட்டியாவே. இது புஷ்பங்களின் சத்து. ஒரே தடவையில் 2-8-0 ரூபாய்க்கு 5 பாட்டில்கள் வாங்குவோருக்கு, கோல்ட் கில்ட் டம்மிரிஸ்ட் வாட்ச் ஒன்றும், 5 வருஷ உத்திரவாதமுள்ள ஜெர்மன் 'பி' டைம்பீஸ் 1-ம், ரயில்வே டைம் டம்மிபாக்கட் வாட்ச் 1-ம், பவுண்டன் பேனா 1-ம், இன்னும் 390 சாமான்களும் இனமாய் கொடுக்கப்படும். இனம் சாமான்கள் சேர்த்து விலை ரூ. 2-8-0 பாக்கிங் தபால் செலவு வேறு.

General Trading Agency
15/1 Joymitter St., Hatkhola P. O., Calcutta.

Goshaye office pillss.
கோஷாயி ஆபீஸ் மாத்திரை

Dr.T.K.V. Chalam.

மலச்சிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—0 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சாஜ் வேறு.

Proprietor. T. K. வெங்கடாசலம்,
(Disciple of Late Dr B. A. Ehiraj Cholera Bairi)
கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

இருக்க இடமின்றி ஏழைகள் தவிக்க மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் சாமிகளுக்கு ஏன்?

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றுக்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும். பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.
இதன் விலை அணா. 0—2—0

கடவுளும், பிரபஞ்சமும்.

"கடவுள்" என்ற ஓர் அர்த்தமற்ற வார்த்தையை நம்பிகாலத்தையும், செல்வத்தையும், அதற்காகச்செலவு செய்து சோம்பேரிகளாய் வாழ்வது மதியீனமும் அறியாமையுமென்பது இப்புத்தகத்திலிருந்து தெளியலாம். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழிமுந்தியதா? முட்டை முந்தியதா? என்ற கேள்விகளுக்கு விடையுடன் கூடியது.

இதன் விலை அணா 0—4—0.

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம், மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.
இதன் விலை அணா. 0—2—0,

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன.
இதன் விலை அணா 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.
இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.
இதன் விலை அணா 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் காவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ், ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என் எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம்.

இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.